ஸ்ரீ:

# பாண்டிய மன்னர்

61

பொள்ளாச்சி
முனிசிபல் உயர்தர கலாசாலைத் தமிழ்ப் பண்டிதர்
'வித்துவான்'
நா. கனகராஜையர்
இயற்றியது.

பிரசுர கர்த்தர்:
இ. மா. கோபால கிருஷ்ணக் கோன்,
புத்தக வர்த்தகர், மதுரை.

பதிப்புரிமை]  1930  [விலை அணு, 10.

THE B.N. PRESS
1322
PRINTERS MADRAS

ஸ்ரீ:

# முகவுரை

தமிழ் நாட்டிலே முன்னாளில் இறைமை பூண்டிருந்த முடிமன்னர் மூவகையார். அவருட் பண்டையர் என்ற பெயர்க்குரிமை பெற்றவர் பாண்டியரே. பாண்டியருள் இந்நாளில் யாம் பெயரளவால் அறியத்தக்கவர் பலருளர். சங்க நூல்கள் உலகிலே வளருமாறு தமிழ்த் திருப்பணி புரிந்து புகழ் படைத்த சங்க காலத்துப் பாண்டியருட் சிலர் வரலாறேனும் தெளிவுற விளங்குமாறில்லை. இந் நிலைக்குக் காரணம் பண்டை வரலாறுகள் என வழங்குவனவற்றுட் பெரும்பாலன இயற்கை நெறிக்கு மாறாகவுள்ள அநேக செய்திகளைக் கொண்டிருப்பதும், அறிஞருள் எவரும் உண்மை வரலாறுகளை ஒரு கோவைப் படத் தொகுத்து எழுதி உதவாமையுமேயாம். எட்டுத் தொகை நூல்கள் எல்லாம் இக்காலத்தில் அச்சுருவம் பெற்று வெளிவந்துலவுகின்றன. இத்திருப்பணி புரிந்த பெரியார்க்குத் தமிழ் மக்கள் நன்றி என்றும் உரியதே. பத்துப் பாட்டும் பதினெண்கீழ்க் கணக்கில் ஒன்றிரண்டொழிந்தனவும் நல்ல ஆராய்ச்சியுரைகளோடு வெளிவந்துள. இவற்றை யெல்லாம் ஒரு சேர வைத்து ஆராய்வதோடு, சாஸனங்கள் என வழங்கும் பண்டையோர் எழுத்துக்களையும் பிற ஆதாரவுகளையுங் கொண்டு ஆராய்வதால், நம் பண்டைய மன்னருட் சிலர் வரலாறேனும் ஒருவாறு துணியப்படலாம்.

பாண்டியர் வரலாறுகளைச் சமீபகாலத்தில் ஆங்கில மொழியில் எழுதியுபகரித்த ஸ்ரீமான். நீலகண்ட சாஸ்திரியார்க்கும், தமிழ்மொழியில் சுருக்கம் சுருக்கமாகவேனும் வரைந்துதவிய அம்பா சமுத்திரம் தமிழ்ப்புலவர் அரிகர பாரதியார்க்கும், தமிழ் நாட்டுச்சரித்திரம் அறியும் ஆவலுடையோர் கடமைப்பட் டிருக்கின்றனர். இவ்வாறாகிய பல வகை உதவிகளைக் கொண்டு சங்க காலப் பாண்டியருள் ஓர் ஐவர் வரலாறுகளை விளக்கியுரைக்க இந்நூல் எழுந்தது. இந்நூலின் முதற் பகுதியில் மூவர் பாண்டியரைப் பற்றியும், இரண்டாம் பகுதியில் இருவர் பாண்டியரைப்பற்றியும் கூறப்படும். சங்கச் செய்யுட்களின் ஆதரவைக்கொண்டு அறியலாகும் வரலாறுகளை இடையிடையே பொருத்தமான முறையில் அக்கால மக்கள்மனப்போக்குக்கும் வாழ்வின்நிலைக்கும் ஏற்ப விவரித்து, முன்னைய வரலாறுகளால் அறியலாகாத சில பாத்திரங்களையும் இடையிடைப் பெய்து, பழமையிற் புதுமை சில கலந்திருப்பினும் பழமைக்கு மாறுபடா வண்ணம் இயன்றவளவு அமைத்து, இந்நூற்பகுதிகள் எழுதப்பட்டுள. 'இவ்வாறு எழுதப்படுவது உண்மை வரலாறு ஆகுமோ ?' என்ற கேள்வி எழலாம். உண்மை வரலாற்றின் சில பகுதிகளை நன்கு விளக்க உதவ வேண்டி அயற்பொருள்கள் இடையிடைப் பெய்யப் பட்டுள்ளனவே யொழிய, வேறு எவ்வகையிலும் சரித்திரப் போக்கினை மாற்றவோ மறைக்கவோ செய்யாமையாலும், பள்ளிக்கூட மாணாக்கர் உள்ளத்தினைக் கவர்ந்து அவர்கட்குப் பாண்டியர் ஐவர் வரலாற்றினை விளக்கும் அரும்பணி பூண்பதாலும், இஃது உண்மை வரலாற்றோடு பெரும்பாலும் ஒத்ததே. இவ்வைவரை வரிசைப்படுத்தியது கால வாராய்ச்சி செய்து உண்மை

தெளிந்த மனவுறுதியினு லன்று; சங்க நூல்களிற் காணப்படும் சிற்சில வரலாறுகளின் உதவியாலேயே யாம். பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெரு வழுதி, மாங்குடி மருதனூர் பாடிய மதுரைக் காஞ் சியில், முற்காலத்து அரசன் எனவும் நல்லோர் சேர்க் கையாற் பேரின்பம் பெற்றான் எனவும் புகழப்பட்டு ளான். நிலந்தருதிருவின் நேடியோன் என்ற பெயர் அச்செய்யுளில் அதனை யடுத்து வந்துளது. தொல்காப் பியத்துக்குப் பனம்பாரனூர் பாடிய பாயிரத்தில் வரும் நிலந்தருதிருவிற் பாண்டியன் என்ற பெயரும் முதுகுடு மியை நெட்டிமையார் பாடிய செய்யுளில் வரும் முந்நீர் விழவின் நோடியோன் என்ற பெயரும் அதனோடு பொருத்தி ஆராயத் தக்கன. சிலப்பதிகாரத்தில் இளங் கோவடிகள் பாடும் பஃறுளியாற்றுடன் பன்மலை யடுக் கத்துக் குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ளத் தென் றிசை யாண்ட தென்னவனும் அடியிற்றன்னள வரசர்க் குணர்த்தியவனும் இந்திரன் இட்டமாலை பூண்டோனும் மேகத்தைச் சிறை செய்தவனும் ஆகிய ஒரு பாண்டியன் முந்நீர் விழவின் நெடியோன் என்று முன்னே கூறப் பட்டவனு, அவனின் வேறு என்று ஆராய்வதும் அவ சியமே. திருவிளையாடற் புராணத்தால் அறியப்படும் உக்கிர குமார பாண்டியன் இச்செயல்கள் செய்திருப்ப தாய் அப்புராணத்தின் உதவியால் விளங்கு மாகையால், இவ்வளவு பெருமையும் படைத்தவன் உக்கிரப் பெரு வழுதியாய் இருக்கலாமோ என்று சிலர் கூறுகின்றனர்.

அகநானூறு தொகுப்பித்தோன் உக்கிரப் பெரு வழுதி யென்பது அந்நூல் வரலாற்றுல் விளங்குகிறது. இவ்வுக்கிரப் பெருவழுதிக்கு நண்பனுயிருந்த சோழன் இராய சூயம் வேட்ட பெருநற்கிள்ளி என்பான், பின்னு

ளிலே தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழி யனால் வென்று சிறைப்படுத்தப்பட்ட கோச் சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேர லிரும்பொறை என்ற சேரனால் போர் புரிந்து வெல்லப்பட்டிருக்கிறான். உக்கிரப் பெருவழுதியால் தொகுப்பிக்கப் பெற்ற அகநானூற்றில் தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ் செழியன் வரலாறு தெரிவிக்கும் செய்யுட்கள் ஒன்பது உண்டு. உக்கிரப் பெருவழுதி காலத்தில் அரங்கேற்றப் பெற்ற திருக்குறளின் செய்யுட்கள் ஆரியப்படை கடந்த பாண்டியன் நெடுஞ்செழியன் வரலாற்றை விளக்கிய இளங்கோவடிகளாலும் மணிமேகலை யாசிரியர் சீத்தலைச் சாத்தனாராலும் ஆளப்பட்டுள்ளன. இவற்றால் உக்கிரப் பெருவழுதியென்பான் தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியனுக்குப் பிற்காலத்தவனா, ஆரியப் படை கடந்த பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு முற் காலத்தவனா என்பதும் விளங்கவில்லை. இறையனார் அகப்பொருள் உரை கேட்டவன் உக்கிரப் பெருவழுதி யேயோ, வேறு பாண்டியனோ என்பதும் விளங்கவில்லை. நக்கீரர், புறநானூற்றிலே இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனைப் பாடியிருக்கிறார்; இறையனார் அகப் பொருளுக்குப் பொருள் உரைத்திருக்கிறார். உருத்திர சன்மன் அந்நாளில் ஐயாட்டைப் பிராயத்தானாய் இருந்தான் என்பது அவ்வுரையிற் காணும் செய்திபாம். அவனே அகநானூறு தொகுத்தான். இந்நக்கீரரோ, நெடுநல்வாடை பாடித் தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியனைப் புகழ்ந்தவர். கூல வாணிகன் சாத்தனார் மணிமேகலை பாடிய காலத்திருந்த ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனைத் தவிரப் பாண்டியன் சித்திரமாடத்துத்துஞ்சிய நன்மாறனையும் பார்த்துப்

புகழ்ந்தவர். தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியனாற் சிறைப்பட்ட கோச் சேரமான் யானைக்கட் சேய் மாந்தரஞ்சேர லிரும்பொறை கபிலருக்கு நண்ப னவன். அவர் பதிற்றுப் பத்தில் ஏழாம் பத்தைச் சேரன் செல்வக் கடுங்கோ வாழியாதன்மீது பாடினர். அவன் முன்னவனுக்கு என்ன முறையானோ! தலையாலங்கா னத்துப் போரில் இறந்தசேரல் இவ்விருவர்க்கும் என்ன முறையானோ!

இவ்வாறு பலஅரசர் பெயரும் முன்பின் அறியலா கா வண்ணம் பிணைந்து கிடக்கும் செய்யுட்களிலிருந்து உண்மை வரலாற்றை ஊகித்துணர்வது மிகவும் சிரம சாத்தியமே. உக்கிரப் பெருவழுதியும் ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியனும் இரு வேறு அரசர் அல்லர், ஒருவனே என்று துணிந்தாரும் உளர். சங்க நூற் குழப்பத்துக் கிடையில் அவர் துணிவுக்குக் கிடைத்த ஆதாரவு என்னவோ என்பது அறியலாவதாயில்லை.

இந்நிலையில் இவ்வைவர் பாண்டியர் வரலாறுகளை அவ்வவரைப் புகழ்ந்து புலவர் பாடிய செய்யுட்களில் இருந்து தொகுத்து ஒன்றோடொன்று கலவா வண் ணம் எடுத்து எழுதுவது எளிதோ, பெருமுயற்சியால் இயல்வதோ என்பதை இச்செய்யுட்களை ஆராய்வதே பொழுது போக்காக உடைய அறிஞர் அறிவர். உண்மை வரலாற்றோடு வேறு சிலவற்றைக் கலந்து வைத்தது தொடர்ப்பட்ட சரித்திரமாக இவை தோன்று வதற்கே யன்றி, வேறு கருத்தானன்று.

தமிழ்ப் பயிற்சி பெருக வேண்டும், பண்டை நூல் களில் உள்ளவற்றை ஆராயும் அறிவு வளர வேண்டும் என்று எங்கும் முழக்கமாய் இருக்கும் இந்நாளில்,

பாண்டியர் வரலாற்றை உரைக்க வெழுந்த இச்சிறு நூல் ஆங்கில கலாசாலை மாணவத் தொகுதியினர்க்கும் பிறர்க்கும் சிறிதளவேனும் அம்முயற்சியில் ஊக்கம் பிறப்பிக்குமாயின், அதுவே இதனை யெழுதியதாற் பெற்ற பெரும்பயனாக நினைக்கப்படும்.

தமிழ்த் தெய்வம் துணை நிற்க.

பொள்ளாச்சி, 30—5—'30.

நா. கனகராஜையர்,
தமிழ்ப் பண்டிதர்.

# உள்ளுறை


| பொருள் | | பக்கம் |
|---|---|---|
| 1. | பாண்டியன் பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதி | ... 1 |
| 2. | பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன் | ... 53 |
| 3. | ஆரியப்படை கடந்த பாண்டியன் நெடுஞ்செழியன் | ... 106 |

# உரிமையுரை

வழுதியரா மோரைவர் வள்ளன்மை போற்ற
எழுதியவிந் நூலுரிமை யேற்கத்—தொழுதென து
தாயாம் மதுரைத் தமிழ்ச்சங்கத் தெய்வத்தை
வாயாற் புகழ்வன் மகிழ்ந்து.

மக்கள் மழலைமொழி மாநிலத்துத் தாயர்க்கு
மிக்க இனிமையுற மேவுதலால்—மக்கள்
இனத்துட் சிறியேன் எனதுமொழி யெந்தாய்
மனத்துள் அடைப்பள் மகிழ்ந்து.

பாண்டியர் ஓரைவர் பண்டைவர லாறுசொல
வேண்டிய இந்நூல் மிருபுலமைப்—பாண்டிய
பாண்டித் துரைவளர்த்த பைந்தமிழின் சங்கத்தை
வேண்டிப் புகுதும் விழைந்து.

நா. கனகராஜ அய்யர்

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 34 | 3 | கற்பகம் | கற்பம் |
| 37 | 6 | பிரம்மம் | பிரம்மம். |
| 42 | 16 | தழிழ் | தமிழ் |
| 47 | 14 | வாழுக | வாடுக |
| 50 | 19 | தாம் | தாம். |
| 86 | 3 | அறைவுரை | அறவுரை |
| 88 | 1 | நமிழ் | தமிழ் |
| 96 | 23 | காமக | காமர் |
| 102 | 14 | அலயட்சியம் | அலட்சியம் |
| 104 | 15 | மந்திர | மந்திரச் |
| 114 | 3 | உமது | எமது |
| 118 | 4 | அரியே | அறியே |
| 121 | 21 | நூற்சொல் | நூலிற்சொல் |
| 144 | 22 | குச். | குச் |

பிழைகளை முன்னரே திருத்திக்கொள்க.

உ

கடவுள் துணை

# பாண்டிய மன்னர்

(முதற் பகுதி)

தமிழ்த் தெய்வ வணக்கம்

அறமுதனுன் கமையவுணர்த் தருட்பணியைப் பூண்ட
[ருளும்
திறமொருமுன் றுடையதமிழ்த் தேவிதிரு வடியிணையிற்
புறமகமாம் பொருளினலம் பொருந்துறுமா றுரிமையுடன்
மறமகலு மனவாக்கால் வழிபட்டு வணங்கிடுவோம்.

## 1. பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி

### I

கதிரவன் குண திசைச் சிகரம் வந்து அடைந்தான். உலக முழுவதும் பொன்மயமான ஒளி பரவியது. இரவு முழுவதும் உலகைக் கைக்கொண்டிருந்த இருட் படலம் ஞானசாரியனது அனுக்கிரகத்துக்குப் பாத்திர மாகிய ஆஸ்திகன் ஒருவனது மனத்து அகவிருள் ஒழி வதுபோல ஒழிந்தது. தம் தலைவன் வருகையைக் கண்டு மகிழும் பெண்டிர் முகம்போலப் பொய்கைகளிலே தாம

ரைகள் மலர்ந்தன. மாந்தர் அனைவரும் தத்தம் நிலைமைக்கேற்ற முயற்சித் துறைகளில் ஊக்கம் உடையாராய் வேண்டுவன செய்யத் தொடங்கலாயினர். பாண்டிய நாட்டுத் தலைநகராகிய மதுரைமா நகரில், சிவாலயம், விஷ்ணு ஆலயம் முதலிய இடங்களில் காலையியங்களின் முழக்கம் எழுந்தது. அன்பர் எண்ணிறந்தார், பாண்டியர்தம் பொய்யாக் குலக்கொடியாகிய வையைமா நதியில் நீராடித் திருநீறு தரித்துச் சிவத்தியான பரராய் இறைவனை வணங்கி வாழ்த்தி மகிழ்ந்தனர்.

பாண்டிய மன்னர் அரண்மனையில் அறிவரும் முனிவரும் புலவரும் அமைச்சரும் பிறரும் கூடி, அன்று அரசற்கு முடி சூட்டுத் திருவிழா நிறைவேற்றும் கருத்தோடு நிறைந்திருந்தனர். முதுகுடுமி என்ற இளவரசன், சூரிய உதயத்தின் முன்பே உரிய பெரியார் உதவி பெற்றுப் பட்டாபிஷேகச் சடங்கிற்குரிய சமயத்தை எதிர்பார்த்து, முகமலர்ச்சியோடும் திருநீறும் கண்டிகையும் விளங்கும் திருக்கோலத்தோடும் அரசச்செல்வம் அடையும் நிலைபெற்றும் வணக்கம் மிகவும் வாய்க்கப் பெற்றவனாய் விளங்கினான். புரோகிதரும் பிற அந்தணரும் தமக்கென அமைந்த ஆதனங்களில் வீற்றிருந்தனர். அமைச்சர் தலைவர், ஆண்டிலும் அனுபவத்திலும் அரசியலறிவிலும் முதிர்ந்த பெரியாராகையால், அவரது ஆணைப்படியே உரிய வைதிகச் சடங்குகள் நிறைவேறின. புண்ணிய தீர்த்தங்கள் பலவும், தென்கடல் நீரும், கங்கை நீரும், காவிரி நீரும், வைகை நீரும், தாமிரபர்ணி நீரும் கொணர்ந்து, புரோகிதரும் பிறரும் அரசனாதற்குரிய முதுகுடுமியை மனமார வாழ்த்தி, அபிடே

கம் செய்வித்தனர். அமைச்சரும் சேனபதியரும் பிற தலைவரும் அபிடேகம் செய்தனர். மந்திர உச்சாரணம் செய்து வைக்கப்பெற்றிருந்த பொற்குட நன்னீரை அந்தணத் தலைவர் பாண்டிய சிம்மாசனதிபதி முதுகுடுமிக்கு அபிஷேகம் செய்தனர். பிறகு எங்கும் மங்கள வாழ்த்தும் வாத்திய முழக்கமும் உண்டாக, அரசன், உரிய சின்னங்களைத் தரித்துக்கொண்டு, சிங்காதனத் தமர்ந்தான். அவன் தலையின்மீது அன்பு பெருக முடி கவித்து, அமலன் அருள் பொழிக வென வாழ்த்தி, ஐம்பெருங்குழுவினர் அருகே நின்றனர். வணங்கற்குரியாரெல்லாம் தத்தமக்குரிய முறையிலே வந்து வணங்கினர். சிற்றரசுகளும் குறுநில மன்னரும் பிறரும் திறையளந்தனர். சேர சோழரும், வடவரசரும், அயலரசர் பிறரும் வந்து, தத்தமக்கேற்ற வண்ணம் வணங்கியும் வாழ்த்தியும் அரச மரியாதைகள் செய்து சென்றனர். முதுகுடுமி என்ற பாண்டிய மன்னன், முதுகுடுமிப் பெருவழுதி என்னும் பட்டப் பெயர் ஏற்றுக்கொண்டு, அரசுரிமை மேற்கொண்டான். அங்கு வந்திருந்த காரி கிழார், நெட்டிமையார், நெடும்பல்லியத்தனார் முதலிய புலவர்கள், அவனது வருங்காலப் பெருமையை அறிந்தார் போல, அவனை மனமார வாயார வாழ்த்தினர்கள். பேரிளம்பெண்டிர் பலர் குழுமிப் பல்லாண்டு பாடி ஆரத்தி எடுத்தனர்.

பட்டாபிஷேகம் செய்துகொண்ட பாண்டிய குல திலகனாகிய முதுகுடுமிப் பெருவழுதி, அன்று அங்குக் குழுமியிருந்த பெரியோர்களைப் பார்த்துப் பின் வருமாறு பேசினன்:

“ அமைச்சர்களே, அறிஞர்களே, புலவர் பெருமக்களே, குடிமக்களே, குலமக்களே, தவப்பெருஞ் செல்வர்களே, தாய்மார்களே, அன்பின் செல்வத்தில் தலைநின்ற உங்களது உதவியால் இப்பொழுது என் முன்னோர் காலம் முதல் அநேக ஆயிர ஆண்டுகளாக வழி வழி வந்த இவ்வரசுரிமையை ஏற்றுக்கொண்டு, என்னால் இயல்வன செய்ய முன் வந்துளேன். அறிவாற்றல்களாற் சிறியேனாகிய யான், அறிவரும் அமைச்சரும் ஆன்றமைந்தவருமாகிய உங்கள் அபிப்பிராயங்களுக்கிணங்க நடந்து, பண்டைய தமிழ் நாடாகிய இந்நாட்டுக்கு நலம் புரிய முயல்வேனாக. முடி சூட்டுத் திருநாளாகிய இன்று நம் நாட்டுக் குடி மக்களுக்கு நான் செய்தற்குரிய சிறந்த நன்மைகள் சில உள: நமது தாய் மொழியாகிய தமிழ் மொழியைப் பயில்விக்கும் கணக்காயர்க்கும், அவர்தம் ஆதரவில் நடைபெற்றுவரும் கலாசாலைகளுக்கும் உதவுமாறு நம் நாட்டுப் பொன்னாணயத்திலே ஆறாயிரம் நன்கொடை தருகின்றேன்; வைத்தியசாலைகள் வளம்படும் பொருட்டுப் பதினாயிரம் பொன் தருகிறேன்; புலவர் பலர் கூடி அரும்பொருள்களை ஆராய்ந்து நூல்களும் உரைகளும் செய்து, உலக உபகாரம் இயற்றலாம்படி அமைந்துள்ள சங்கத்துக்குப் பதினாயிரம்பொன் வருமான முள்ள இரண்டு கிராமங்களை அளிக்கின்றேன்; நம் நாட்டில் வாழ்வாரெல்லாம், தமர் பிறர் என்ற வேறுபாடின்றி, ஒற்றுமையாய் வாழவேண்டு மென்பதே எனது நோக்கமாம். அயல் நாட்டவர் சிலர் வியாபாரத்தின்பொருட்டு இந்நாட்டுக்கு வருகின்றனர். கடல் கடந்து பிற நாடுகளிலும் நம்மவர் வியாபாரம் செய்யப்போய், அங்குள்ள சிறிய தீபாந்தரங்களில் நிலைத்து வாழ்வது முண்டென அறிகின்றேன். அயல் நாடுகளுக்கு நாம் போய்ப் புகுந்து அந்நாட்டவர்க்கு உரிய உரிமைகளை நமக்கும் உரிமையாக்கிக்கொண்டு வாழவேண்டும் என்ற எண்ணம் நம் நாட்டு மக்களுக்கு உண்டாவது போல, நம் நாட்

டில் வந்து வாழும் அயல்நாட்டவர்க்கும் நம் நாட்டில் அவ்வுரிமைகளைப் பெற வேண்டுமென்ற எண்ணம் உண்டாதல் இயல்பே. ஆதலால், அவ்வாறு இங்கு வந்து வாழ்வோர்க்கு நாம் உறவின்முறையார் போலப் பழகி, வேண்டும் உதவிகள் செய்யவேண்டு மென்பதே, இந்நாட்டவர் அனைவரும் கடைப்பிடித்தற்குரிய அறநெறியாம். எத்தகையார்க்கும் நீதி ஒன்றே. உரிமைகள் ஒரு நிகரனவே. அறிவின் உயர்வும் கல்வியின் சிறப்பும் எக்குடியிலிருப்பினும் மதிக்கப்படும். ஆயினும், நம் முன்னோர் பின் பற்றி வந்த அறநூல் நெறிகட்கிணங்க நாமும் நடக்க வேண்டுவது முறையாதலால், படைப்பு முறையில் எங்கும் காணப்படும் உயர்வு தாழ்வுகள் போல அறிவு ஒழுக்கம் பழக்கம் முதலியவை காரணமாகப் பண்டே யமைந்த குலவொழுக்கங்களுக்கு மாறுபாடாக எவரும் செல்லலாகாது. அவரவர்க்கேற்ற கர்மானுஷ்டானங்களை முறை பிறழாது இயற்றி வரல் வேண்டும். தருமத்தையே அடிப்படையாய்க் கொண்ட நம் அரசியல், எல்லா இனத்தாரும் அவரவர்க்குரிய தரும நெறியில் நின்றாலன்றிச் சீர்ப்பாடு அடையாது. எங்கும் நலம் பொங்குமாறு இனியதும் சிறந்ததும் ஆகிய அறநெறியிலே அனைவரும் வாழ்வோமாக.''

அரசன் இவ்வாறு பேசி முடிந்ததும், புலவருள் நரைத்து முதிர்ந்த பெரியார் ஒருவர் எழுந்து, பின் வருமாறு வாழ்த்துக் கூறினர்:

'அருந்ததி யணங்கின் திருந்து திருப்பணி
உரிமையிற் பூண்ட பெருமையிற் சிறந்த
பாண்டியர் தோல்குடி பண்ணிய புண்ணியப்
பயனாத் தோன்றிய பாண்டிய மன்னவ,
விதுமரபு விளக்கும் முதுகுடுமிப் பெருவழுதி
அறநெறி புரிந்து மறநெறி கடிந்து

நல்லோர் போற்றும் நலத்தகை பொருந்திக்
கேள்வியிற் கிளர்ந்து வேள்விகள் இயற்றி
விண்ணவர் மண்ணவர் மிகுமகிழ் வெய்த
அரிய குணங்கட் காகர மாகி
நுதல்விழி நாட்டத் திறையோன் அருளால்
வாழி வாழி மலர்மகள்
ஊழிக் காலம் உரனொடு பொருந்தவே.'

புலவரும் அமைச்சரும் அறிவுடையார் பிறரும் இவ்வாழ்த்தின் பொருணயத்தை ஆய்ந்து மகிழ்ந்தனர். அறிவிற் சிறந்த அரசர் தலைவனும் இப்பாடல் பாடிய புலவர்க்கு நூறு பொன் பரிசில் அளித்துப் பொன்னுடை யொன்று போர்த்து, வேறு பல சிறப்புக்களும் செய்தான்; பிறகு அங்குக் கூடிய பலர்க்கும் அவரவர்க்கு ஏற்ற வண்ணம் சிறப்புக்கள் செய்தான். அதன் பின்னர் ஐம்பெருங்குழுவினர் புடை வர, அரசன் அரண்மனையிற் புகுந்து, அவர்களோடு சிறிது நேரம் மந்திராலோசனை செய்தான். மகுடாபிஷேகத்தின் பொருட்டுக் கூடிய மாந்தர் அனைவரும், மங்களப் பொருள்கள் பல பெற்றுக்கொண்டு, தத்தம் மனைக்குத் திரும்பினர்.

மந்திராலோசனை சபையில், நாட்டினர் நன்மைக்குரிய சில அவசியமான விஷயங்கள் பேசித் தீர்மானிக்கப்பட்டன. அரசன் குடிகள் நன்மையின்பொருட்டுச் செய்யக் கருதிய செயல்களெல்லாம் ஆலோசித்து அங்கீகரிக்கப்பட்டன. தாம் அன்று அங்குச் செய்தற்குரிய வினை நிறைவேறியதறிந்த அமைச்சர், புரோகிதர், சேனாபதியர், தூதுவர், சாரணர், மகாசனங்கள்,

மருத்துவர், நிமித்திகர், பார்ப்பார் என்ற பல வகையாரும் அரசனிடம் விடை பெற்றுத் தத்தம் இடங்கட்கு ஏகினர். அரசன் தனது அந்தரங்க ஸ்தலத்தில் மெய்காவலன் ஒருவனே அருகில் நிற்க, நின்றுகொண்டு, இறைவன் திருவருளை வியந்து, மனமுறத் தெய்வத் தோத்திரங்களைப் பாடி., மனத்தினுள் உருகிக்கொண்டிருந்தான். ஒற்றருட் சிலர், புதுவராய்த் தம்பதவிகளில் அமர்த்தப்பட்டார். ஆதலால், தத்தமக்குரிய அதிகாரப் பத்திரங்களைப் பெற்றுக்கொண்டு, அயல் நாடுகளுக்கும் உள் நாட்டுக்கும் செல்லக் கருதியவராய்த் தனித் தனியே ஒருவரை ஒருவர் அறியாது, அரசனிடம் ஆணை பெற வந்தனர். சில மறைக் குறிகளால் அவர்களை இன்னர் என அறிந்த அரசன், ஒவ்வொருவரும் தனித் தனியே வந்ததற் கேற்ப, அவர்கட்கு ஏற்ற வண்ணம் ஆணைகள் பிறப்பித்து, அதிகாரப் பத்திரமும் இராஜ முத்திரையோடு தந்து, உயிர் போவதாயிருக்கும் காலத்தும் அப்பத்திரங்களைப் பிறர் அறியாவண்ணம் காக்க வேண்டும் என்ற ஆணையும் இட்டு அனுப்பினன். இவ்வாறு அரசியற்குரிய பல வகை வேலைகளையும் ஒருவாறு அன்று தொடங்கி முடித்துவிட்டுச் சிறிது இளைப்பாறினன்.

உரிய காலத்தில் இறைவன் திருவருட் பேற்றை அடையும் கருத்தே பெரிதும் உடையனுயிருந்த காரணத்தால், முதுகுடுமிப் பெருவழுதி, அயல் நாடுகளில் நல்லரசு இல்லாதவற்றை அடக்கவும் ஆளவும் முறையில் நிறுத்தவும் கருதினன். ஒற்றரால் தான் அறிந்த உண்மைகளைக் கொண்டு தன் நாட்டிலும் பிற நாடுகளி

லும் தான் செய்தற்குரிய வேலைகளிற் சிறந்ததாக மறம் ஒழித்து அறம் வளர்த்தலையே அவன் எண்ணியிருந்தான். இவ்வாறு எல்லா வித நன்மைகளும் சிறப்பத் தோன்றிய அவன் அரசின் பெருமையைப் பின் வரும் செயல்களால் அறியலாம்.

# II

முதுகுடுமிப் பெருவழுதி, பாண்டிய நாட்டு அரசுரிமையை யேற்றுக்கொண்டு ஐந்து ஆண்டுகள் ஆயின. பாண்டிய நாடு முழுவதும் அவன் சுற்றிப் பாராத சிற்றூரு மில்லை; பேரூரு மில்லை. நகரங்கள் அவனது தர்ம தனத்தாலும் அரசாங்க ஆதரவாலும், அறநிலை, கலா நிலையம், நூல்நிலையம் முதலியவற்றைப் பெற்றன. கிராமங்களிலும் அறிவுடையார் அநேகர் வாழ்ந்தனராதலால், அவர்களது பேச்சு எழுத்து என்னும் இரண்டு வழிகளால், அங்குள்ளார் அனைவரும் தெய்வ நம்பிக்கை, இராஜ பக்தி, தேச பக்தி, எதிர் கால வாழ்வில் நாட்டம் முதலிய சிறந்த குணங்கள் உடையவராய் விளங்கினர். வாயில்லாப் பிராணிகளாகிய கன்று காலிகளைத் தெய்வங்களேபோலப் போற்றும் எண்ணம் எங்கும் பரவியதால், அவற்றுக்கு அவ்வக்காலங்களில் நேரிடும் சிறிய பிணிகளை ஒழிக்கவும் வருமவற்றை வராமற் போக்கவும் வேண்டும் உதவி செய்துகொண்டு, அரசாங்க அதிகாரம் பெற்ற சில மிருக வைத்தியர்கள் நாடெங்கும் சஞ்சரித்து வந்தார்கள். மும்மாரி பெய்வதும் முப்போகம் விளைவதும் எங்கும் இயற்கையாய் விளங்கின. நீர் நிலைகளுக்கு எங்கெங்கிருந்து நீர் சேர்த்துப் பயிர்களுக்கு உதவச் செய்யலாமோ, அதற்கு ஏற்ற முயற்சிகளை யெல்லாம் அரசன் அனுமதி பெற்ற

அதிகாரிகள் செய்ய லானார்கள். நகரங்களைக்காட்டிலும் கிராமங்களிலே திருவின் செல்வியும் கலையின் செல்வியும் ஒற்றுமையாய் வாழ்ந்து வருவதைக் காண்பது எளிதாயிற்று நகரங்களில் அவ்வப்பொழுது அவசியங் கருதி அறிவுடைப் பெரியார் பலர் கூடி உலகிற்குப் பொது நன்மைக்குதவும் அரும்பொருள்களை நூல்களாலும் உரைகளாலும் வெளியிட்டு வந்தனர். சங்கத்தார் ஆதரவும் அங்கீகாரமும் பெறாத எவ்வகை நூலும் நாட்டில் வழங்க இயலாமையால், எந்நாட்டுப் புலவரும் இந்நாடடைந்து, தம் செய்யுட்களின் சிறப்பைத் தமிழகத்துக்கு அறிவிப்பாராயினர்.

பாண்டிய நாட்டளவில் தன் ஆட்சி அடங்குவது பொருத்தம் இன்றெனை எண்ணித் தமிழ் வழங்கும் தென்னாடு முழுவதையும் அரசன் தன் ஆளுகைக்குள்ளடக்க முயன்றனன். சில சிறிய நாடுகளுக்குத் தன் சேனைத்தலைவரைப் பெருஞ்சேனையோடு அனுப்பினன். சென்றவிடமெல்லாம் வெற்றியே பெற்றுத் திரும்பிய சேனா நாயகர்க்கும் படைஞர்க்கும் ஏற்ற வரிசைகள் செய்தனன். வென்ற நாடுகளில் எல்லாம், முன்னிருந்த அரச பரம்பரையாரையே ஆள வைத்து அவர்களைத் தன்கீழ் அடங்கி யிருக்கச் செய்தனன். கோல் கோடிய அரசர் இருந்த நாடுகளைக் கைக்கொண்டு, அவ்வரசுரிமைக்குரியார் எவரேனும் இருப்பாராயின் அவர் அப்பதவி வகிக்கத் தகுதியுடையாரவென வாராய்ந்து, அறிவுடைப் பெரியார் பலரை அமைச்சர்களாயமர்த்தி, அவர்கள் உதவியைக் கொண்டு அறநெறிக்கு மாறுபாடின்றி அரசாள்கவென அமைத்தனன்; புல

வருட் பெரியார் தமிழகத்துள் எந்நாட்டுள் வாழ்வோ ராயினும் தன்னுட்டுக்கு வருவித்து வாழ வைத்தான்; நாட்டில் பல விடங்களிலுமுள்ள சிவாலயங்களுக்கு அநேக கிராமங்களை மானியமாக விட்டு, அவ்வவ்வால யங்களில் நித்திய நைமித்திகாதிகள் முறைமையே நடை பெறுமாறு வேண்டுவன செய்வித்தான். தமிழ் நாடு முழுவதும் தன்னையே அரசன் என்று கொண்டாடவும் தன் ஆணையே செல்லவும் செய்துகொண்டும் அவன் மனம் திருப்தியடையவில்லை. பயிற்சி பெற்ற படை ஞர்க்கும் படைத்தலைவர்க்கும் இன்னும் கொஞ்சம் போர் வினை கொடுக்கவேண்டுமென்று விருப்பம்கொண் டும், தமிழ் நாட்டுக்கு வடக்கிலுள்ள பிற நாடுகளையும் அடக்கவேண்டும் என எண்ணம் கொண்டும் மேன் மேலும் சேனைகளைச் சேகரித்துத் திக்விஜயம் செய்யப் புறப்பட்டான். உரிய நாளிலே நல்லோரையிலே பெரி யோர் ஆசிர்வாதமும் இறைவன் திருவருளும் பெற்றுத் தமிழ்நாட் டரசுரிமையை வகித்து வரும் பொறுப்பை அமைச்சருட் பெரியார் ஐவர் கையில் வைத்து வலி மிக்க சேனுதிபர் புடை சூழப் புலவர் பலர் உடன் வர வடநாட்டுப் போர்க்கு உரிய கோலம் கொண்டு எழுந் தான். புலவர் பலர் நெருங்கி நின்று, 'வேந்தே, வாழிய; வென்று மீளுக,' என வாழ்த்தி நின்றனர்.

சேனைகளெல்லாம் முன்னே அணி வகுத்துச் சென்றன வழி செல்வோர் படைஞர்க்கு முன்சென்று காடுகளைச் சீர்திருத்தி வழியமைத்தும் நதிகள் முதலிய வற்றைக் கடத்தற்குரிய சாதனங்களை அமைத்தும் சென்றனர். செந்தமிழ் நாட்டெல்லையைத் தாண்டி,

வெகு விரைவில் கொடுந்தமிழ் நாடடைந்தனர். அங்குள்ள சிறிய குறும்பர்கள் திறைகளோடு வந்து வணங்கினர். சிறு நாடுகளுக்குத் தலைவர்களாயிருந்த அரசர்கள் தங்கள் அமைச்சர்கள் ஆலோசனைப்படி கடல் புரண்டெழுந்து வருவது போல வரும் பாண்டியர் படைக்குமுன் எதிர்த்து நின்று அழிவதைக் காட்டிலும் வணங்குவதால் வாழ்வதே மேலென அறிந்து, "வாழிய வெங்கோ மன்னவர் பெருந்தகை, ஊழி தொறூழிதொ றுலகங் காக்க," என்று பாண்டியனை வாழ்த்தி வணங்கினர் சில மாதங்கள் இவ்வாறு பல அரசர்களையுந்தன் அடிப்படுத்திக்கொண்டு முன்னேறிச் சென்று கங்கைக்கருகில் உள்ள வடநாடடைந்தனன். மொழி பெயர் தேயத்தாராகிய ஆரியர் பலர் வாழ்ந்த அந்நாட்டை யடைந்த தமிழ் மறவர் தமது பண்டைப் புகழ் சிறக்குமாறு போர் செய்தனர் அரசனும் பின்னின்று ஊக்கியும் முன்னின்று நெறி செலுத்தியும் பெரும்போர் இயற்றினன். வடநாட்டு மன்னர் பலர் ஒன்று சேர்ந்து, "தென்னவன் ஒருவன் தன் நாட்டிலிருந்து நம் நாட்டுக்கு வந்து நம்மை வெல்வதா! சிங்கத்தை அதன் குகையிலேயே சிதற அடிப்பதா!" என்று கூறிக்கொண்டு, ஒன்று சேர்ந்து போரியற்றினர். எத்துணை மன்னவர் ஒன்று சேரினுமென்! வீரமும் வலியும் மிக்குப் பொலிந்தென்! வடவர் மடங்கினர்; தென்னவர் சிறந்தனர்; வெற்றித் திருவால் விளக்கம் பெற்றனர். இவ்வாறு வென்ற எல்லா மன்னரும் ஏற்ற வண்ணம் திறை யளக்கப்பெற்று அவரவர்க்குரிய நாட்டில் அவரவரை நிலைக்கச் செய்து, நல்லரசின் அமைதி

களை யெல்லாம் அவர்கட்கு நன்கு போதித்து, பாரத பூமியின் வடவெல்லையாகிய இமய வரையை அணுகச் சென்றனன் பாண்டிய மன்னன். வழிகளில் வென்ற மன்னரது உதவிப் படையும் பொருளும் விருதுகளும் பிறவும் பெற்றதால், பாண்டிய நாட்டிலிருந்து புறப் பட்டபோதிருந்ததைக் காட்டிலும் பன்மடங்கதிமாய் விருத்தி யடைந்திருந்த படையோடு இமய மலை அடைந்து, மலைச்சாரலில் சில நாள் தங்கிப் புண்ணிய க்ஷேத்திரங்களைத் தரிசித்து மகிழ்ந்து பாரத பூமி முழு வதையும் தன்னடிப்படுத்திய பெரு மகிழ்ச்சியோடு தெற்கு நோக்கிப் புறப்பட்டனன். திரும்புகாலில் வேறு வழியாய் வந்ததால் அங்கிருந்த சில நாடுகளையும் வென்று அடக்கித் தமிழ்க்கொடி பறக்கச் செய்தான். தமிழ்நாட் டெல்லைக்கருகில் நெருங்கி வந்துகொண் டிருக்கும் நிலையிற் சிற்றரசன் ஒருவன், இவன் செயலை நன்கு அறியானாய், அறிவுடையார் சொற்கேளானாய்த் தனது அரணை யடைத்து உள்ளிருந்தனன். அதனைக் கேட்ட பாண்டியன் புன்சிரிப்புக் கொண்டு, பின் வரு மாறு விளம்பரங்கள் எழுதுவித்து, பறவைகளாலும் பிற உதவிகளாலும் அந்நாட்டிற் பரப்புவித்தான் :

"பசுக்களும், பசுப் போன்ற நல்லோராகிய அந்தண ரும், பெண்டிரும், பிணியாளர்களும், பிதிர்களுக்குக் கர்மம் செய்தற்குரிய ஆண் மக்களைப் பெறாதவர்களும், தக்க காவ லிடங்களை நாடிச் சேர்க. நாங்கள் விரைவிலே அம்பு விடப் போகின்றோம்."

இவ்விளம்பரச் செய்தியை அறிந்த குடிகள் தக்க வாறு ஒதுங்கினர். பிறகு பெரும்போர் நிகழ்ந்தது.

பாண்டியன் வெற்றிவீரனாய் விளங்கினன். அவ்வரசனும் தன் அறியாமைக்கு வெட்கி வணங்கினன். அருளின் திறத்தை அறிந்த முதுகுடுமிப் பெருவழுதி அவனையும் அன்போடு ஆண்டனன்.

இவ்வாறு போர் நிறைவேற்றிப் பாண்டியன் தன் நாடு நோக்கித் திரும்பினன். குடி மக்கள் மகிழ்ச்சியின் மிகுதியால், பல நாளாகப் பிரிந்திருந்த மன்னவர் பெருந்தகையை மந்திரியோடு வந்து வரவேற்றனர். அவ்வமயத்தில் அமைச்சர் தலைவர், குடிகளின் சார்பாக அரசற்கு வரவேற்புபசாரம் கூறினர். அரசனுடன் கூடவே சென்று அவன் செய்த போர்களையெல்லாம் கண்டு மகிழ்ந்த நெட்டிமையார் என்ற புலவர், பின்வரும் கருத்தமைய ஒரு பாடல் பாடினர்:

"'பசுக்களும், பசுப்போன்ற இயல்புள்ள பார்ப்பன மாக்களும், பெண்டிரும், பிணியாளர்களும், அன்போடும் சிரத்தையோடும் பிதிர் லோகவாசிகட்கு உரிய கருமங்களை இயற்றும் ஆண் மக்களைப் பெறாதவர்களும் விரைவிலே எம் அம்புகளை ஏவப்போகிறோம் தத்தமக்கேற்ற காவலிடங்களிலே போய்ச் சேர்க,' என்று தர்ம மார்க்கத்தைச் சொல்லும் கொள்கையையுடைய வீரத்தாற் சிறந்து அரசுவாவின்மீது அமர்ந்து, வெண்கொற்றக்குடை கவிக்கப்பெற்று, மீனக்கொடிகள் ஆகாயவீதியில் நிழல் பரப்ப வருகின்ற எம் மன்னவன் வாழ்க; குடுமி என்ற பேரரசன் வாழ்க. செந்நிறமுடைய பசும்பொன்னைக் கூத்தர்க்கு வழங்கிய கடற்றெய்வத்திற்குரிய விழாவை நடத்திய நெடியோன் என்ற வழுதியர் பிரானால் அமைக்கப்பட்ட நன்னீர் நிறைந்த பஃறுளியாற்றில் உள்ள மணலினும் மிக்க எண்ணுள்ள ஆண்டுகள் வாழ்க."

அச்செய்யுள் வருமாறு :

"ஆவு மானியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
தென்புல வாழ்நர்க் கருங்கட னிறுக்கும்
பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்
எம்அம்பு கடிவிடுதும் நும்அரண் சேர்மின்என
அறத்தாறு நுவலும் பூட்கை மறத்திற்
கொல்களிற்று மீமிசைக் கொடிவிசும்பு நிழற்றும்
எங்கோ வாழிய குடுமி தங்கோச்
செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க் கீத்த
முந்நீர் விழவின் நெடியோன்
நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே." *

இச்செய்யுளைக் கேட்ட அரசன் மேலும் மனம் பூரித்து, ஆரிய நாட்டிலிருந்து தான் கொணர்ந்த அரும் பொருள்களிற் சிலவற்றை அப்புலவர் பெருமானுக்குப் பரிசிலாக அளித்தனன்; அங்கிருந்த வேறு பல புலவர்க்கு யானைப் பரிசிலும், பாணர்க்குப் பொற்பூ நல்குதல் முதலிய சிறப்புக்களும் செய்தனன். அக்காட்சியைக் கண்டு மகிழ்ந்த நெட்டிமையார், அரசனைப் பழிப்பதுபோலப் புகழ்ந்து, பின் வருமாறு பாடினர்:

"பாணர் தாமரை மலையவும் புலவர்
பூநுதல் யானையோடு புனைதேர் பண்ணவும்
அறனோ மற்றிது விறன்மாண் குடுமி?
இன்னா வாகப் பிறர்மண் கொண்(டு)
இனிய செய்திநின் னார்வலர் முகத்தே."

* புறநானூறு—செய்யுள், 9.

† புறநானூறு—செய்யுள், 12.

இச்செய்யுளைக் கேட்ட அரசன் மனம் பூரித்து, அப்புலவர்க்குச் சிறந்த தொருகளிறும் தேரும் நல்கி யுபசரித்தனன். அவரும் மேலும் மேலும் வாழ்த்தி மகிழ்ந்தனர். அரசன் பரிவாரங்கள் புடை சூழ அரண்மனையடைந்தான்; மங்கள கோஷங்களோடு அகம் புகுந்தான். தமிழ் மக்கள் எங்கும் சஞ்சரிக்க வேண்டுவன செய்தமைக்காக அவன் மன மகிழ்ந்து அரண்மனையில் தன் அந்தரங்க அறையிற் சிறிது இளைப்பாறலாயினன்.

# III

அரசர் பெருமானுகிய பாண்டியன், பாரத பூமி முழுவதையும் தன் ஆளுகைக் குள்ளடக்கி, குமரி முதல் வடவிமயம்வரை ஒரு மொழி வைத்து உலகாண்டு வரும் நாளையில், பாணரும், கூத்தரும், விறலியரும், வயிரியரும், புலவரும், பிறரும் அவனிடம் பல திசைகளினுமிருந்து வந்து தத்தமக்குரிய வரிசைகள் பெற்றுச் செல்வாராயினர். அவன் போரில் வென்ற நாடுகளையும் புலவர்க்கும் பிறர்க்கும் மனம் பூரிக்கக் கொடுத்தனன். நாடு அனைத்தையும் அடக்கி யாண்டும், கொடுக்கத் தக்கார்க்கு ஏற்ற வண்ணம் கொடுத்தும், இன்னும் தன் பிறப்பின் நோக்கம் நிறைவேற ஏதோ வொன்று குறையாய் நிற்பதாக அவனுக்குத் தோன்றியது: "அரசராவார் செய்தற்குரிய வினைகள் யான் செய்த இவையேயோ? இன்னும் வேறு யாவேனும் உளவோ? நாட்டிலே அமைதியை நாட்டினன்; கல்வியை வளர்த்தனன்; செல்வ நிலையைச் செழிக்கச் செய்துளேன்; அறிஞரை ஆயிரக் கணக்கில் நம் நகர் அடைவித்துளேன்; வேளாண்மையும் கைத்தொழிலும் என் இரு கண் மணியேபோலப் போற்றி வேண்டுவன செய்துளேன்; பகைவரும் கள்வரும் வன விலங்குகளும் நாட்டு மக்களுக்கு ஊறு செய்யும் வலிமை பெறு வண்ணம் அடக்கி விட்டேன். யானும் என்னைச் சார்ந்தாரும் என் கீழ் அதிகாரம் வகிப்போரும் எவர்க்கும் எவ்

வகைத் தீங்கும் இயற்ருது அற நெறி கடைப்பிடித்து அரசியற் குதவ வேண்டுவன செய்துளேன். அமைச்சரும் அறிவரும், புலவரும், படைஞரும், படைத்தலைவரும், பிறரும் செய்யும் உதவியால் எண்ணிய எண்ணமெல்லாம் நன்கு நிறைவேறியுள. இனி யான் செய்தற்குரியவை யாவை யுள என்பதே என் சிந்தையில் நிறைவதாம், '' என எண்ணினன்

இவ்வாறு அரசர் தலைவன் சில நாட்களாக எண்ணமிடுவதை அவன் முகக் குறிப்பால் அறிந்த புரோகிதர் தலைவர் அவனை அடைந்து, முக மலர்ச்சியோடு பின் வருமாறு கூறினர் :

' அரசரேறே, சந்திர வமிச சூடாமணியே, நாடுகள் பல நம் நாட்டுக் கடங்கவும், மொழிகள் பலவும் நம் மொழிக் கடங்கவும், அரசுகள் பிற நம் அரசுக் கடங்கவும் செய்து, கீர்த்தியும் பிரதாபமும் சிறப்பப் பெற்றனை. நின் முன்னோர்கள் சென்ற நெறியில் நீயும் சென்று, அறம் பொருள் இன்பம் என்ற மூன்று உறுதிப் பொருளும் பெற்ருய். இனி அடைய முயலவேண்டுவதா யிருப்பது நான்காவது உறுதிப்பொருளே. அதனை அடையும்பொருட்டுச் சொல்லப்படும் பல வகைத் துறைகளும் நம் நாட்டில் அறிவுடையார் பலரால் நன்கு விளக்கப்பட்டுள. முக்கியமாக இறைவன் திருவருள் வசத்ததாகிய வேதத்திலே விதிக்கப்பட்ட மார்க்கங்கள் மூன்று. அவை கர்ம மார்க்கம், பக்தி மார்க்கம், ஞான மார்க்கம் என்பன. கர்மமார்க்கத்தில் காம்ய கர்மம், நிஷ்காம்ய கர்மம் என்ற இரண்டு முறையிலும் பயின்று தேர்ந்து மனம் விடுதலைபெற்ற பிறகே ஞான மார்க்கத்தில் நுழையலாம். பக்தி மார்க்கம், இரண்டு வழிகளிலும் கலந்து அநேக ஜன்மங்களால் முயன்று பயனை அடைய உதவுவதாம். கர்ம மார்க்கம் மிகவும் கடினமா

னது.ஞானமார்க்கம் கர்ம வொழிவின் பிறகே வருவதாதலால், முன்னது முற்றிய பிறகே பின்னது வருதற்கு இடமுண்டு. கர்மங்கள், சத்கர்மங்கள் துஷ்கர்மங்கள் என இரு வகையாம். துஷ்கர்மங்களை யொழிக்கவே சத்கர்மங்களைப்பயில்கின்றோம். வேதத்திலே விதிக்கப்பட்ட குல முறை யறத்தைப் பின்பற்றி வாழ்ந்து வரும் நம் நாட்டு மக்கள் கர்ம முறையில் மிகவும் ஈடுபட்டவர்களாயுள்ளார்கள். 'மன்னன் எவ்வழி மன்னுயிர் அவ்வழி' என்பராதலால், அரசாங்கத்தை வகித்த காலத்தில் உன்னால் தெரிவிக்கப் பெற்ற உன் மனப்பான்மைக்குப் பொருந்திய தர்ம நிலையில் குடி மக்கள் வாழ்கின்றனர் நீயும் அரசர் தருமத்தை வேண்டு மளவு முறை கடவாது செய்தனை. அரசர் செய்தற்குரிய சிறந்த கர்மங்கள் வேறு சில உள. பல நாடுகளையும் நீ அடக்கி யாண்டு அரசர் பலரையும் அடிப்படுத்தியிருக்கின்றாயாகையால், 'இராஜசூயம்' என்றதோர் யாகமும், அசுவமேதம் என்றதோர் யாகமும் செய்து, இந்நாள்வரை மண்ணில மக்களைத் திருப்திப் படுத்தியதுபோல விண்ணவரை மகிழ்வுறுத்தக் கடமைப்பட்டிருக்கின்றாய். ஓதல், பொருதல், உலகு புரத்தல், படை பயிறல், ஈதல், வேட்டல் என்ற அரசர்க்குரிய அறுவகைத் தொழிலில் இந்நாள் வரை வேட்டல் ஒழிந்த ஐந்தே உன்னால் இயற்றப்பட்டு வந்துள. வேட்டல் என்ற தொழில் ஒன்றே விண்ணவர்க்கும் மண்ணவர்க்கும் உள்ள தொடர்பை வளர்ப்பதாம். அவ்வருந்தொழிலையும் இயற்றி, அறுதொழிலும் இயற்றிய அரசனாக உன்னை ஆக்கிக் கொள்வதே உனக்குப் புகழும் பெருமையுமாம். சில நாட்களாக ஏதோ மனக் கவலை யுடையாய் என எண்ணத் தக்கவாறு தோன்றியதால், ஒரு குறையும் இல்லாத உனக்கு வந்த குறை யென்னவென்று நாங்கள் ஆராயலாயினோம். இனி ஏதோ வொன்று இயற்றி நிறைவேற்ற வேண்டுமென்ற எண்ணம் உன் உள்ளத்திலிருப்பதாகத் தோன்றுவதால் இவ்வுலக

வாழ்வில் வேண்டிய வாழ்வெல்லாம் பெற்றுள்ள உனக்கு மேலுலக வாழ்வில் நாட்டம் உண்டாய் இருப்பது பொருத்தமே. அரசருள் உலகு மதிக்கத்தக்க புகழ் படைத்த நினக்கு இராஜ சூயமும் அசுவமேதமுமே இயற்றவுரிய வேள்விகளாம். அவற்றை முறைப்படி நிறைவேற்றி வைக்க அறிந்த பெரியார் பலரை அயல் நாடுகளிலிருந்தும் நம் நாட்டின் உட்பகுதிகளி லிருந்தும் வரவழைத்து வேண்டுமாறு செய்யலாம்.''

புரோகிதர் தலைவர் பேசிய பேச்சுக்களைக் கேட்ட முதுகுடுமிப் பெருவழுதி அகமிக மகிழ்ந்து, "அந்தணர் தலைவரே, நீர் கூறியது பொருத்தமே. சில நாட்களாக என் மனத்தில் ஒரு கவலை யிருந்ததுண்மையே. என் முன்னோர் பொருட்டும் என் நாட்டின் க்ஷேமத்தின் பொருட்டும், வேதங்களில் விதித்த வண்ணம் இனி நான் செயற்குரிய யாகங்கள் எவையேனும் உளவோ வென நான் எண்ணியதுண்டு. தேவரைத் திருப்தி செய்விப்பது அரசர் கடமைகளுட் சிறந்ததென்பதை யான் அறி வேன். நீவிர் கூறியது போல இராசசூயமும் அசுவமேத மும் இயற்ற முயல்வேன். அவ்வேள்விகள் இயற்று விக்கும் நெறி அறிந்தாரை இன்னரென அறிந்துள்ள உம்மைக் கொண்டே நன்கு நடத்திக் கொள்வேன்,'' என்று கூறினன்.

புரோகிதர் தலைவர் உடனே அரசனிடம் விடை பெற்று, அரண்மனையின் புறத்தே வந்து, அமைச்சரது மாளிகை யடைந்து, அமைச்சர் தலைவரிடம் அரசன் கருத்தைத் தெரிவித்தார். அவரும் சில நாளாக அவ் வுண்மையை ஒருவாறு அறிந்திருந்தாராகையால், அம் முயற்சி நிறைவேறுதற்கு வேண்டுவன செய்யத்

தொடங்கினர். அமைச்சரும் புரோகிதரும் ஆலோசனை செய்து நாடெங்கும் வேள்வி செய்விக்கும் திறம் வாய்ந்த வேதியர்க்கு நிருபம் போக்கினர். சில தினங்களில் மதுரை நகரில் அறிவுடை யந்தணர் பலர் கூடினர். அரசனும் நிமித்திகரைக் கொண்டு நல்ல நாள் ஒன்று தீர்மானித்து, யாக சாலை அமைக்கத் தொடங்கினன். பல யாக சாலைகளும் அரசன் மனத்துக்குப் பொருந்த அமைந்த பிறகு நன் முகூர்த்தத்திலே அவற்றுட் சிறந்ததோர் யாகசாலையில், முதன் முதலில் அசுவமேதம் செய்யத் தொடங்கினன்.

உயர்ந்த இலக்கணங்கள் பலவும் அமைந்த குதிரையொன்றை முகப் பட்டம் கட்டுவித்துப் பூப்பிரதக்ஷிணம் செய்ய அனுப்பினன். அப்பரியைப் பின் பற்றி அநேக வீரர் சென்றனர். பாரத பூமி முழுவதையும் சுற்றிச் சென்ற விடமெல்லாம் சிறப்புச் செய்யப்பெற்று அது திரும்பி வந்தது. யாக சாலையில் அந்தணர் கூட்டத்தோடு இருந்த அரசன் வேதமந்திரங்களைத் திருப்திகரமாக உரிய முறையிலே ஓதி, அக்குதிரையைக் கொண்டு முதன்மையான அந்த அசுவமேத யாகத்தை நிறைவேற்றினன். அது முடிந்ததும் சிவகங்கையாகிய வையை என்றபுண்ணிய நதியில் நீராடித் தக்கார் பலர்க்கும் பல வகைத் தானங்களும் தந்தனன். புலவர்க்கெல்லாம் அவரவர் தகுதிக்கேற்பப் பரிசில் பல வழங்கினன்.

பின்னர்ச் சில தினங்கள் சென்றதும் இராச சூய யாகம் ஒன்று நிறைவேற்ற முயன்றனன். அநேக அரசரையும் வென்று வந்திருந்தானாகையால், அவரனைவரும் அளந்திருந்த திறைகளைக் கொண்டு, வேத

முணர்ந்த அந்தணர் பலர் உதவியால், தான் அமைத்த பல யாக சாலைகளிலே இராச சூய யாகத்துக்கமைந்த இலக்கணம் அமைந்த ஒன்றில் இறைவன் திருவருளால் அவ்யாகத்தையும் இயற்றினன். அங்கும் புலவர்க்கும் பிறர்க்கும் அந்தணர்க்கும் அவரவர்க் கேற்ற வண்ணம் தருமமும் தானமும் வழங்கினன். அருகில் இருந்த புலவர் எல்லாம் இவ்வருஞ்செயல்களைக் கண்டு, அவனை வாயார மனமாரப் புகழ்ந்து வாழ்த்தினர். அரசரனை வரும் தன்னை வணங்க அவர்கட்கெல்லாம் தலைவன் என்ற பதத்தையும் பெற்றனன்.

இரண்டு யாகங்களை இவ்வாறு நன்கு நிறைவேற்றியதால் மனத் திருப்தி யடைந்த முதுகுடுமிப் பெருவழுதி மேன்மேலும் அசுவமேத யாகங்கள் செய்யலாயினன். நிருமித்த பல யாக சாலைகளிலும் அசுவமேதங்கள் நிறைவேறின. அந்தணரும் முனிவரும் அறிவரும் பிறரும் அவை நடைபெற வேண்டுமளவு உதவி செய்தனர். இச்சிறப்பை யெல்லாம் அருகிலிருந்தே அறிந்த அரசர் பலர், புலவர் பலர், பெரியோர் பலர் ஒருங்குதிரண்டு ஒருநாள் அரசனையணுகி அவனை மனமார வாயார வாழ்த்தினர். புலவருள் வயோதிகர் ஒருவர் எழுந்து, "இன்று முதல் எம் மன்னர் பெருமான், பாண்டியன் பல் யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்று பெயர் பெறுக," என்று எவரும் அறியக் கூறினர்.

பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்ற அத்தமிழ் மன்னன் இக வாழ்வும், பர வாழ்வும், சிறப்பும் பெற்று இவ்வாறு வாழ்வதை அறிந்த

புலவர் பலர் அவனருகடைந்து அவனைப் புகழ்வாராயி னர். நெட்டிமையார் என்ற பெரும்புலவர், பின் வரும் கருத்தமைந்த பெரும்பாடல் ஒன்று பாடினர் :

"விரைவாகச் செல்கின்ற தேர்கள் குழித்த தெருவின் கண்ணே, வெள்வாய்க் கழுதைகளை ஏரிற் பூட்டி யுழுது பகைவர்களது அகன்ற இடமுள்ள, அரண்களைப் பாழ்படுத் தினை. நின் பகை நாட்டில் புள்ளினம் ஒலிக்கும் விளை வயல்க ளில் வெண்ணிறமான தலையாட்டம் அணிந்த செருக்குமிக்க குதிரைகளின் கவிந்த குளம்புகள் பதியத் தேர் செலுத்தினை. அசையும் இயல்பும் பெரிய கழுத்தும் பரந்த அடியும் கோப முள்ள பார்வையும் விளங்கிய கொம்பும் உடைய களிற்றை அப்பகைவரது காவல்மிக்க குளங்களிலே படிவித்தனை. அத் தன்மையுள்ள சினமும் அதற்கேற்ற செய்கையும் உடையாய். ஆகையால், ஒளிமிக்க இரும்பாற் செய்த ஆணியும் பட்டமும் அறைந்த கேடகத்துடனே பிரகாசமிக்க நெடுவேல் ஏந்திப் பகைவரது ஒளி மிக்க படைக்கலங்களைத் தாங்கி முன்னே விரைந்து செல்லும் உனது முன்னணியின் வலிமையைக் கெடுத்தல் வேண்டித் தம் ஆசை தூண்ட முன்வந்த பகைஞர் கள், அவ்வாசை பின் ஒழிய வசை பெற்று வாழ்ந்தோராயி னர் பலரோ? குற்றமற்ற நல்ல தரும நூலிலும், நால்வேதத் திலும் சொல்லப்பட்ட அடைதற்கு அருமையான புகழ் மிக்க சமிதையும் பொரியும் கொண்டு நெய் மிக்க புகை மேல் எழும் பப் பலவகையாகிய சிறப்பு மிக்க யாகங்களை முடிக்கத் தூண் நடப்பட்ட அகன்ற வேள்விச் சாலைகள் பலவோ? இவற்றுள் யாவையோ பல? பெரும, புகல்வாயாக."

## செய்யுள்

" கடுந்தேர் குழித்த ஞெள்ளல் ஆங்கண்
வெள்வாய்க் கழுதைப் புல்லினம் பூட்டிப்

பாழ்செய் தனையவர் நனந்தலை நல்லெயில்;
புள்ளினம் இமிழும் புகழ்சால் விளைவயல்
வெள்ளுளைக் கலிமான் கவிகுளம் புகளத்
தேர்வழங் கினைநின் தெவ்வர் தேஎத்துத்
துளங்கியலாற் பணையெருத்திற்
பாவடியாற் செறனோக்கின்
ஒளிறு மருப்பிற் களிறவர
காப்புடைய கயம்படியினை
அன்ன சீற்றத் தனையை யாகலின்
விளங்குபொன் னெறிந்த நலங்கிளர் பலகையொடு
நிழல்படு நெடுவேல் ஏந்தி யொன்னார்
ஒண்படைக் கடுந்தார் முன்புதலைக் கொண்மார்
நசைதர வந்தோர் நசைபிறக் கொழிய
வசைபட வாழ்ந்தோர் பலர்கொல் புரையில்
நற்பனுவல் நால்வேதத்
தருஞ்சீர்த்திப் பெருங்கண்ணுறை
நெய்ம்மலி யாவுதி பொங்கப் பன்மாண்
வீயாச் சிறப்பின் வேள்வி முற்றி
யூப நட்ட வியன்களம் பலகொல்
யாபல கொல்லோ பெரும வாருற்று
விசிபிணிக் கொண்ட மண்கனை முழவின்
பாடினி பாடும் வஞ்சிக்கு
நாடல் சான்ற மைந்தினோய் நினக்கே.''*

புலவர் பெருமான் இவ்வாறு மனமுறப் புகழ்ந்து பாடிய பாடலை யேற்றுக்கொண்ட பாண்டியன் பல் யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதி, அவர்க்குத் தக்கவாறு

* புறநானூறு—செய்யுள், 15.

சிறப்புக்கள் செய்தனன். போர்க்களத்திலும் அவன் பெருமையைக்கண்டுணர்ந்த நெடும்பல்லியத்தனார் அவன் போர்ச் சிறப்பைப் புகழ்ந்தனர். நெட்டிமையார் அவன் யாகம் செய்த பெருமையைப் புகழ்ந்து மேலே காட்டிய பெரும்பாடலை இயற்றியது மற்றப் புலவரையும் அவனை மேலும் மேலும் புகழத் தூண்டியது. தானம் பெற்ற அந்தணர் எல்லாம் மனமுற வாழ்த்திச் சென்றனர். தேவரும் ஆவுதியால் மகிழ்ந்து புஷ்ப வருஷம் பொழிந்தது போல நாடெங்கும் மழை பொழிவித்தனர்.

பாண்டிய நாடெங்கும் தெய்வ மணம் கமழ்ந்தது. அரசருள் எல்லா வகை நற்குணங்களும் வாய்க்கப் பெற்ற அரசரைப் பெறுவது ஒரு நாட்டினர்க்கு முன்னைப் புண்ணியப் பயனன்றோ? அப்பயனைப் பெற்ற பாண்டிய நாட்டார் அடைந்த மகிழ்ச்சிக்கு ஓர் எல்லையுண்டோ? பஃறுளியாறு பாய்ந்த தென்கோடளவும் தன் நாட்டெல்லையைப் பரப்பிய பாண்டியன் பல் யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதி புரவலர் பணியவும் புலவர் புகழவும் தமிழெனும் மடந்தை தலை சிறந்தோங்கவும் நால்வகை வருணத்தாரும் தத்தம் நிலை வழுவாது காத்தலால் அறநிலை யறமும், நிரை மீட்டல் பகைவெல்லல் கடன் கழியாதாரைத் தண்டித்தல் என்ற முறையால் மற நிலை யறமும், தத்தம் நிலைக் கேற்ப நாட்டவர் பெறும்பொருளை வளர்த்தலால் அற நிலைப் பொருளும், பகைவர் பொருள் திறைப்பொருள் தண்டப்பொருள் சூதர் பொருள் என்ற நால்வகைப் பொருட்பேற்றால் மற நிலைப் பொருளும், குலமும் ஒழுக்கமும் குணமும் பருவமும் ஒத்த பெண்டிரை மணந்து நாட்டவரை

வாழச் செய்ததால் அறநிலை யின்பமும், இராக்கதமணமாதியவற்றை அனுமதித்ததால் மறநிலை யின்பமும் என்ற அறவகை அரசியலும் நாட்டகத்தில் ஓங்கி விளங்கவும் செய்து வாழ்ந்து வந்தான்.

## IV

"எம்மதத்தவரும் எந்நாட்டவரும் எந்நிலையினரும் இந்நாட்டில் அமைதியோடு வாழ்வெய்துக," என்று அரசர் பெருமான் சாசனத்தில் தெரிவித்த வண்ணம் பாரதபூமி முழுவதும் நாஸ்திகராயினும், ஆஸ்திகராயினும், கர்ம யோகியராயினும், ஞான யோகியராயினும், தமிழராயினும், பிற மொழியாளராயினும் ஒருவர்க்கொருவர் மன வேறுபாடின்றி வாழ்ந்து வந்தனர். பாண்டியன் பல யாகங்கள் செய்ததால் மகிழ்வுற்ற தேவர் தலைவன், நாடெங்கும் அறம் வளருமாறு மழை பொழிவித்தான். புண்ணிய பூமி கர்ம பூமியென்று புகழப்பெறும் பாரத பூமியிலே வைதிகர் அவைதிகராகிய பல வகை மதத்தவரும் தத்தம் மதங்களைத் தமது வாக்கு வளத்தால் நாடெங்கும் பரப்பி வந்தனர். முத்தமிழ்ப் புலவரும் குமரி முதல் இமயம் வரையில் தம் அரும்பொருளை எத்தகையோரும் வாரிக்கொள்ள ஈந்து வந்தனர். நாடெங்கும் அமைதி பெருகியுள்ள காலத்திலேதான் நூலாராய்ச்சி செய்யவும் மத வாதம் செய்யவும் இடமுண்டாகும்

பல் யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி வேத விதிகளைப் பூரணமாய் நம்பிய அரசனாயினும், வேதத்திற்குப் புறம்பாகவுள்ள மதத்தினைக் கைக்கொண்டவர்களை வெறுத்தானல்லன்; வைதிகச் சார்புள்ள மதங்களிலும்

தான் நம்பிய ஒன்றே சிறந்தது என்ற கருத்துக் கொண்டவனுமல்லன். 'மன்னன் எவ்வழி மன்னுயிர் அவ்வழி,' என்பராதலால், குடிகள் மத வாதங்கள் காரணமாக மன மாறுபாடு கொள்ளவில்லை. இவ்வாறு இருக்கும் நாட்களிலே, மதுரை நகரிலேயிருந்த பெரியதொரு மண்டபமாகிய பட்டி மண்டபத்தில், ஒரு நாள் எல்லா மதவாதியரும் கூடித் தத்தம் மதத்தைப்பற்றி விவகரிக்கலாயினர். பெரியதொரு திருவிழா நடப்பதுபோலப் பல்லாயிர மக்கள் அம்மண்டபத்திற் கூடினார்கள். அரசனும் பிரசன்னமாயிருந்தான். அறிவரும் அறிஞரும் புலவரும் துறவிகளும் ஆகிய பலர் அங்கு வந்து, தத்தமக்கு ஏற்ற ஆசனங்களில் அமர்ந்திருந்தனர். சிறிது நேரம் பல வகை வாத்தியங்களும் முழங்கின. பிறகு நிச்சப்தம் குடி கொண்டது. எல்லோரும் அரசன் முகத்தையே பார்ப்பாராயினர். அவன் பின் வருமாறு பேசினன்:

"பெரியோர்களே, இன்றே நன்னாள், நன்றே இந்நாள்! என் முன்னோர்கள் இப்பட்டி மண்டபத்தை நிருமித்த நோக்கமே இதுவாம். இந்நாட்டில் இக்காலத்தில் வழங்கும் மதங்கள் பலவாம். ஒவ்வொன்றையும் பற்றி வாழ்வோர் தொகையும் மிகுதியாம். எல்லா மதங்களுக்கும் அடி நடு முடிவு என்ற மூன்றும் ஒன்றே. இடையிலே தோன்றி விரிந்த கிளைகளே வேறுபாடுடையன என அறிஞர் கூறுவர். இங்கு நிறைந்திருக்கும் பல வகை மதத்தினரும் தத்தம் கொள்கைகளின் சாராம்சங்களைத் தெரிவிப்பாராகில், எல்லாவற்றிற்கும் உள்ள ஒற்றுமையை ஆராய்ந்துணர்தல் எளிதாகும். இவருள் நாஸ்திகரும் சிலர் இருக்கலாம்; ஆஸ்திகர் பலர் இருக்கலாம். எவரேயாயினும், தத்தம் கருத்தைச் சிறிதும் அச்சமும் கூச்

சமுமின்றி வெளியிட்டுரைக்க வேண்டுகின்றேன். எல்லார் கொள்கைகளையும் கேட்டு அறிந்து இன்புறஅறிவுடையார் பலரும் பொது மக்கள் எண்ணிறந்தாரும் இங்கே கூடியிருக்கின்றனர். அவரவர் பற்றியுள்ள கொள்கைகளில் உள்ள ஆழ்ந்த கருத்துக்களை யறியவும், அந்நியர் கொள்கைகளின் உட்கருத்துக்களையும் ஒற்றுமைகளையும் அறியவும் இத்தகைய பட்டி மண்டபப் பிரசங்கங்களே சிறந்த வழிகளாம்; அரசர் பற்றிய மதமென்று கருதி எமது மதத்தைப்பற்றிப் பாராட்டவும், நாம் தழுவாமையால் மற்றவற்றை உண்மை யாராய்ந்து கண்டிக்காமல் இழித்துரைக்கவும் எவரும் முற்படலாகாது. உண்மையாராய்ச்சி யொன்றே நோக்கமாக எவரும் வாதம் செய்யலாம்.

"காய்தல் உவத்தல் அகற்றி யொருபொருட்கண்
ஆய்தல் அறிவுடையார் கண்ணதே — காய்வதன்கண்
உற்ற குணந்தோன்றா தாகும் உவப்பதன்கண்
குற்றமும் தோன்றாக் கெடும்."

என்று புலவர் பெருமக்கள் கூறிய உண்மை இங்குள்ள அறிஞர் பலரும் அறிந்ததே. இனி வாதங்கள் தொடங்கலாம்."

சங்கங்கள் சிறிது நேரம் முழங்கின. வேறு பல இயங்களும் இயம்பின. பிறகு பலவகை மதவாதியரும் தத்தம் கொள்கைகளை விரித்துரைக்கலாயினர். வேதத்திற்குப் புறம்பாகவுள்ள சார்வாகரும் சமணரும் பௌத்தரும் முதற்கண் தம் கருத்தை வெளியிட்டனர். பிறகு மற்றவர் தம் கொள்கைகளை விளக்கி யுரைத்தனர்.

இனி மத வாதம் நிகழ்ந்தவாறு சுருக்கி யுரைக்கப் படும்:

சார்வாகர்:—" கண்டதே காட்சி; கொண்டதே கோலம்; பஞ்சேந்திரியங்களால் உணரும் உணர்ச்சியன்றி வேறொன்

றிருப்பதாய் எண்ணுவது அறிவின்மையே. பிரத்தியக்ஷம் ஒன்றே பிரமாணம். இல்லாத ஒன்றைப்பற்றி ஊகிப்பதும் பிறர் சொல்லைக் கேட்டு நம்புவதும் குற்றமே. தெய்வம் என்பது உள்ள பொருளாய் இருந்தால், நம் கண்ணுக்குத் தோன்ற வேண்டும். எவரோ உண்முகப் பார்வையாற் கண்டார் என்று கூறுவதெல்லாம் மயக்கம். எல்லா இந்திரியங்களும் நன்கு இயங்கும்போது காணப்படாத பொருளை அவை அடங்கிய போது காண்பது என்று கூறுவது மலடி மகன் ஆகாயப் பூவைக்கொய்து முயற் கொம்பிலே சூட்டிய வண்ணமேயாம். வேறோர் உலகம் உண்டு என்பதும், இங்குள்ள இன்ப துன்பங்களின் பயனும் காரணமும் அவ்வுலகத்தில் அறியப்படும் என்று கூறுவதும் பிரத்தியக்ஷ சித்தமல்ல. இவ்வுலகில் உள்ள இன்பங்களை ஐந்து இந்திரியங்களாலும் வேண்டுமட்டும் அனுபவிப்பதே உயர் வாழ்வு. அவ்வாறு இன்புறாது வருந்திக் கழிவதே இழிவாழ்வு. இவற்றின் வேறாக வாழ்வு தாழ்வுகள் இங்கும் எங்கும் இல்லை. பிறந்தவன் வாழ்வும் தாழ்வும் அவன் இறப்போடு ஒழிந்தன. அதற்குமேல் ஒன்றும் இல்லை.''

சமணர்:—''வாலறிவன், மலர்மிசை யேகினான், வேண்டுதல் வேண்டாமையிலான், இருள் சேர் இரு வினையும் சேரா இறைவன், அறவாழி யந்தணன், எண் குணத்தான் என்ற சிறப்புப் பெயர்களைத் தனக்கு உரிமையாய்க் கொண்டவனும், எல்லாக் கர்மங்களையும் வேருடன் களைந்தவனுமாகிய ஜிநேந்திரனைத் தெய்வமாய்க் கொண்டதும், நவ பதார்த்தங்களைக் கொண்டதும் எங்கள் கொள்கையாம். ஸம்ஸாரம் என்ற கொடிய நோயை ஒழித்து, மோக்ஷம் என்ற ஆனந்தத்தைப் பெற முயல்வதே ஜீவனது கடமை. அதற்கு வழி, தூய காட்சி, தூய அறிவு, தூய ஒழுக்கம் என்ற மும்மணிகளே. இம்மூன்றில் ஒன்றும் தனித்து நின்று பயன்தரவல்லதன்று. இம்மூன்றும் ஒன்று சேர்ந்தே உயர்ந்த பயனை அளிக்க வல்லவையாம்.

நோயாளிக்குத் தன் பிணிக்கு மருந்துண்டு என்ற நம்பிக்கையும், மருந்தின் தன்மையைப்பற்றிய அறிவும், மருந்தை உட்கொண்டு பத்தியம் அனுசரிக்கும் ஒழுக்கமும் இருந்தாலன்றி அவன் நோய் நீங்கிச் சுகம் பெறுதலாகிய பயனை யடையான். ஆகையால், இந்த மும்மணிகளையும் மோக்ஷ மார்க்கம் எனக் கொண்ட எங்கள் மதம் கேவலம் பக்தி, ஞானம், ஒழுக்கம் என்ற மூன்றில் ஒவ்வொன்றே வழியாம் என்று கொண்ட பிற கொள்கைகளைக்காட்டிலும் சிறந்ததாம்.''

பௌத்தர்:—''புத்ததேவர் எங்கள் மத ஸ்தாபகர். இவர் ஜீவகாருண்யமே ஸ்வரூபமாயுள்ளவர். பல்வகைப் பிறவிகளிலும் பிறந்து, அவ்வப்பிறவிகளில் ஜீவர்களுக்கு உள்ள சுக துக்கங்களை அளந்து அறிந்தவர்; தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர்; அருளறம் பூண்டவர்; அறக்கதிர் ஆழி திறப்பட வுருட்டிக் காமனை வென்ற வாமர். துக்கங்களை ஒழித்து நிர்வாணம் பெறுதலே எங்கள் முக்கியக் கொள்கை. புத்த சரித்திரமும் பௌத்த தர்மமும் பௌத்த சங்கமும் எங்களுக்கு மும்மணிகளாம். புத்தரையும் புத்த தர்மத்தையும் சங்கத்தையும் தியானம் செய்வதே முக்கிய மந்திரமாம். நிர்வாணம் அடைய வேண்டின், துக்கம், துக்கோத்பத்தி, துக்க நிவாரணம், துக்க நிவாரண மார்க்கம் என்ற நான்கையும் அறிய வேண்டும். பேதைமை, செய்கை, உணர்வு, அருவுரு, வாயில், ஊறு, நுகர்ச்சி, வேட்கை, பற்று, பவம், தோற்றம், வினைப்பயன் என்ற பன்னிரண்டு சார்பையும் அறியவேண்டும். பிறப்புக்குக் காரணம் அவாவும் பற்றும் ஆகையால், அவற்றை யொழிக்கத் துறவு பூண்டலும் பல பிறவிகள் பிறந்து கருமக் கட்டறுத்தலும் துறவுள்ளத்தால் மெய்யுணர்வு பெற்று நிர்வாணம் எய்துதலும் எங்கள் நோக்கங்களாம்.''

வைதிக மார்க்கப் பிரமாண வாதி:—எமக்கு உரிய பிரமாணங்கள் பத்தாம்: வேறு விதமும் கூறுவர்: அவை பிரத்தி

யக்ஷம், அனுமானம், உவமானம், ஆகமம், அருத்தாபத்தி, ஸ்வ பாவலிங்கம், ஐதிஹ்யம், அபாவம், பாரிசேஷம், சம்பவம் என்ற பத்தாம். பிரத்தியக்ஷம் ஐம்புலவறிவால் உணர்ந்த இன்ப துன்பங்கள் அடையுநிலை; அனுமானம், பொது எச்சம் முதல் என மூவகைப்படும். பொதுவென்பது, காட்டில் யானைப் பிளிற்றொலி கேட்டு யானையுண்டு என அறிதல். எச்சம் என்பது, வெள்ளம் வருவதைக் காண்பதால் மழையுண்டு என அறிதல். முதல் என்பது, கருக்கொண்ட மேகத்தைக் கண்டு இது மழைபெய்யும் என்பது. இவ்வாறு கண்டவொன்றைக் கொண்டு காணுப்பொருளின் உண்மையை ஊகித்துணர்வது அனுமானமாம். உவமானமாவது, ஒன்றுபோல ஒன்று இருப்பதால் உணர்தல். ஆகமப் பிரமாணம், ஆப்த வாக்கியமாகிய வேத சாஸ்திரங்களிற் கூறப்பட்டிருப்பவற்றை நம்புதல். அர்த்தாபத்தி, 'கங்கையின்கண் இடைச்சேரி' என்றாற் கங்கைக் கரைக்கண் இடைச்சேரி என்று உணர்தல். ஸ்வபாவலிங்கம் என்பது யானையின் மேலிருப்பவன், 'ஒன்று தா,' என்றால், தோட்டியைத் தந்து உதவுதல் போல உள்ள இயல்பாம். ஐதிஹ்யம் என்பது, உலகத்தார் பேச்சு. 'இம்மரத்திலே ஒரு பேய் உண்டு,' என்று உலகினர் கூற, பலர் அஃது உண்டெனத் தெளிதல் போலாம். அபாவம் என்பது, ஒரு பொருள் இல்லையென்று உணர்தல். பாரிசேஷம் எனப்பட்ட மீட்சி யென்பது, "இராமன் வென்றான் என்றால், இராவணன் தோற்றான் என்று அறிதல் போல்வது. சம்பவம் என்பது, இரும்புக் கம்பியின் சலனத்தால் காந்தம் அடையப்படும் என உணர்தல் போல்வது. இயற்கைப் பொருளை இற்றெனக் கிளத்தல் என்பதும் இதுவே. இனிப் பிரமாணுபாசங்கள் எட்டு உள. அவை சுட்டுணர்வு, திரியவுணர்தல், ஐயம், தேராது தேளிதல், கண்டுணராமை, இல்வழக்கு, உணர்ந்ததை யுணர்தல், நினைப்பு என்பன.

சுட்டுணர்வு என்பது, எல்லாப் பொருளையும் உள்ள வளவில் அறிதல். திரிபுணர்ச்சி என்பது, இப்பியை வெள்ளியென்று உணர்தல் போல்வது. ஐயம் என்பது, 'தறியோ! மகனோ!' என்று நிச்சய மற்ற உணர்ச்சி பெறுதல். தேராது தெளிதல் என்பது, வெட்ட வெளியில் தறியை மகன் என்றெண்ணல். கண்டுணராமை என்பது, புலி முதலியவை வந்தும் அறியா திருப்பது போல்வது. இல் வழக்கு என்பது, முயற்கோடு என்று ஒரு பொருள் இல்லையாயினும், சொல்லளவால் உணர்தல். உணர்ந்ததை யுணர்தல் என்பது, பனிக்குத் தீச்சேர்ப்பது மருந்தாம் என்று எண்ணல் போல்வது. நினைப்பு என்பது, காரணம் அறியாமலே நினக்கு இவர் தாயும் தந்தையும் என்று பிறர் கூறக் கேட்டு அறிதல் போல்வது லோகாயதர், பௌத்தர், சாங்கியர், நையாயிகர், வைசேடிகர், மீமாஞ்சகர் என்போர் கொண்ட பிரமாணங்கள் பிரத்தியக்ஷம், அனுமானம், சாப்தம், உபமானம், அர்த்தாபத்தி, அபாவம், இவையே லோகாயதர் பிரத்தியக்ஷம் ஒன்றே கொள்வர். பௌத்தர் பிரத்தியக்ஷமும், அனுமானமும்; சாங்கியர் பிரத்தியக்ஷம், அனுமானம், சாப்தம் என்ற மூன்றும், நையாயிகர் உபமானத்தொடு நான்கும்; வைசேஷிகர் அர்த்தாபத்தியோடு ஐந்தும்; மீமாஞ்சகர் அபாவத்தோடு ஆறும் கொள்வர்."

சைவ வாதி :—" சூரியன், சந்திரன், பிராணன், பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் என்ற எட்டு வகையும் உயிரும் உடம்புமாய் அமைந்திருப்போனும், சாஸ்திரங்களே உருவமாக உடையவனும், உயிர்களைப் படைத்துக் காத்துத் துடைத்து விளையாடும் பரம்பொருளும், தன்னின் வேறாகப் பொருள் ஒன்று இல்லாதவனும் ஆகிய சிவபெருமானே இறைவன். அவனைவணங்குதலாற் பசுக்களாகிய ஜீவர்கள், பாசம் ஒழிந்து, அவன் அருள் வயப்படுவார்கள். அதுவே வீடு-வீடாமே."

பிரமவாதி:—' உலகமெல்லாம் தேவன் இட்ட முட்டை. அவனே தலைவன்.'

வைணவவாதி:—'உலகமெல்லாம் நாராயணன் காவலுள் அடங்குவது.'

வேத வாதி:—'கற்பகம், கை; சந்தசு, கால்; சோதிடம், கண்; நிருத்தம், செவி; சிக்ஷை, மூக்கு; வியாகரணம், முகம்; இத்தகைய உருவம் உடைய அநாதியாய வேதமே தெய்வம்.'

சாங்கிய வாதி:—"யாகாதிகளைச் செய்வது ஸம்ஸார துக்கத்தை யொழிக்கக் காரணம் ஆகாது. துக்கம் நீங்கிச் சுகம் பெறும் வழி தத்துவ ஞானம் ஒன்றே. தத்துவங்கள் இருபத்தைந்து. மூல தத்வம் பிரகிருதி. பிரகிருதி நித்தியம். அதன்கண் முக்குணங்களும் ஒரு நிகராய் இருக்கும். பிரகிருதி ஒருவர் படைப்பன்று; அசேதனமாம். மற்றத் தத்துவங்கள் இதிலிருந்தே பிறந்தன. அவையும் அசேதனமே. இவையன்றி நித்தியமாகவும் சேதனமாகவும் செயலற்றதாகவும் உள்ள புருஷன் என்ற ஒரு தத்துவம் உண்டு. புருஷதத்துவம் எண்ணற்றது. எல்லாச் செயல்களும் பிரகிருதி சம்பந்தம் உடையவையேயன்றிப் புருஷ சம்பந்தம் உடையவையல்ல. கேவலம் சேதனமயமாய் உள்ளது ஆத்துமா. சுக துக்கங்களில் அதற்குச் சம்பந்தம் இல்லையாயினும், இருப்பது போலத் தோன்றுகிறது. இவ்வாறு சேதன ஸ்வரூபியான புருஷன், அசேதனப் பிரகிருதியைப் பற்றிக்கொண்டு, கர்ம பந்தத்தில் உழலும் நிலையிலிருந்து விலகுவதே மோக்ஷம். பிரகிருதியும் புருஷனும் ஈஸ்வர சிருஷ்டியல்ல வாகையால், பிரகிருதியிலிருந்து தோன்றிய உலகமும் உயிர்களும் ஈஸ்வர சிருஷ்டியல்லவென்பதே சித்தாந்தம். ஈஸ்வரன் என்ற ஒன்று இருக்க இடமில்லை."

யோகி:—"யோகம் எட்டு அங்கங்களை யுடையது. அவை இமயம், நியமம், ஆசனம், பிராணயாமம், பிரத்தியாஹாரம், தாரணை, தியானம், சமாதி என்பன. இவற்றை

முறையறிந்து பயில்வதால், எட்டு வித விபூதிகளும் பலிக்கும். அவற்றால் மயங்காமல் மேல் நோக்கிச் சென்றால், ஸர்வ ஸங்க விமுக்தனாகி ஆத்ம ஸ்வாதந்தர்யம் கிடைக்கும். அதுவே மோக்ஷம்."

நையாயிகர்:—'தர்க்க முறைகளைக் கொண்டு உண்மையுணர்வதால் பல பொருள்களையுடைய உலகமும் ஜீவர்களும் படைக்கப்பட்டனவாகத் தோன்றும் என்றும், படைப்புக்குரிய கர்த்தா ஈஸ்வரன் என்றும், பரமாணுத் தொகுதியிலிருந்து உலகை அமைத்தலும் கர்மம் காரணமாக ஜீவர்களுக்குச் சரீரம் அளித்தலும் அவன் செயலாம் என்றும், சரீரமும் உலகமும் மூல பரமாணுக்கள் ஆகச் சிதறிவிடுதல் அழிவு என்றும், இவை தோன்றி மறையக் காரணமாய் உள்ள அணுக்களும் ஜீவ ராசிகளும் நித்தியமாம் என்றும் நாம் உணர்ந்திருக்கின்றோம்.'

வைசேடிகர்:—'திரவியம், குணம், கர்மம், சாமான்யம், விசேஷம், சமவாயம் எனப் பதார்த்தங்கள் ஆறு. திரவியம் என்பன, குணமும் தொழிலும் உடையனவாய் எவ்வகைப் பொருளுக்கும் காரணமாய் உள்ள ஒன்பதாம். மண், நீர், தீ, வளி, ஆகாயம், திசை, காலம், ஆன்மா, மனம் என்பன அவை. இவற்றுள் மண் ஐந்து புலனு முடையது. மற்றவை ஒவ்வொன்று குறைவாக உடையன. பொருளின் குணங்கள் பல வகையாம். பொருளும் குணமும் கருமத்தைச் செய்தற்கு உரிமையுடையன. பொருளின் பொதுத் தன்மை சாதலும வாழ்தலுமாம். பொருள் அணுக்களின் கூட்டம். அது குணியாம். மற்றவை எமக்கும் நையாயிகர்க்கும் பொதுவே.'

பூத வாதியர்:—"ஆத்திப் பூவும் கருப்புக் கட்டியும் கலந்து மேலும் கூட்டற்குரியவற்றைக் கூட்டினால், மதுவின் மதசக்தி தோன்றுவதுபோல, ஐந்து பூதங்களின் சேர்க்கை

யால் அறிவு உதிக்கும். பூதங்கள் பிரிந்தால், அறிவும் ஒழியும். உயிரற்ற உணர்வில்லாத பூதமும் உயிருள்ள உணர்வுள்ள பூதமும் அவ்வப்பூதங்களின் வழியிலே பிறந்து வளர்ந்து பிரிந்து அழியும். இதுவே உண்மை. இம்மையும் இம்மைப் பயனும் இப்பிறவியிலேயே காணல் உண்டு. மறுமை ஒன்று உண்டாய் வினைப் பயன் துய்த்தல் என்பது பொய்யே.''

மீமாஞ்சகர்:—"நித்தியம், அபௌருஷேயம் எனப்பட்ட வேதங்களை ஓதித் தர்மம் யாதென ஆராய்ந்தறிலே நமது முதற் கடமை. தர்மம் என்பது வேதத்தில் சொல்லப் பட்ட யாகாதிகளைச் செய்தலே. விரும்பப்பெறும் பலனுக் கேற்றவாறு கர்மத்தைச் செய்ய வேண்டும். தர்ம முறைப்படி கர்மம் செய்தால், அபூர்வம் என்ற அதீந்திரிய சக்தி ஒன்று பிறக்கும். இதனுதவியால் ஜீவனுக்கு இஷ்டப் பிராப்தி ஆகும். அநந்தமாகவும் விவிதமாகவும் வெவ்வேறாகவும் நித் தியமாகவும் உள்ள ஜீவ ராசிகளுக்குத் தர்மமே கர்த்தவ்யமாம். ஒவ்வொரு ஜீவனும் ஈஸ்வரானுக்கிரகம் எதிர் பாராமலே கர்மப்பயனாகக் கதி வேறுபட்டு மோக்ஷ சாம்ராஜ்யம் அடைய லாம்.''

வேதாந்தி:—"நித்தியப் பொருள் ஒன்றே. அஃது ஆத்துமா என்பது. நீ நான் என்ற வேற்றுமை யுணர்ச்சியும், பரமாத்துமா ஜீவாத்துமா என்ற வேற்றுமை யுணர்ச்சியும் அஞ்ஞானத்தால் ஆவன. ஞானம் உதயமானதும், ஒன்றே உண்டு என்பதும், அஃது ஆத்துமாதான் என்பதும் விளங் கும். பிரம்மம் என்பதும் அதனை அறிபவன் அறிவு என் பதும் வெவ்வேறெனக் கொள்வது மயக்கமாம். ஒரு பொருளே சத்து, சித்து, ஆனந்தமாய் விளங்குவது. அது குணங்களற்றது; குண சம்பந்தத்தால் மயங்கிய நிலையில் ஜீவ ஸ்திதியில் உள்ள நம்மால் அறியப்படாதது. மாயை

ஒழிந்து ஆத்தும ஸ்திதி யடையும்போது உண்மை விளங்கும். தோன்றும் பொருள்களைப்பற்றி உண்மை யாராய்ந்தால் அன்றி இந்நிலை கிட்டுவது எளிதன்று. பரிசுத்தாத்துமாவாகிய பிரம்ம வஸ்து, மாயா சம்பந்தப்பட்டு இயற்கைக் குணம் மாறும்போது ஈஸ்வரனுவன். ஈஸ்வரனே சிருஷ்டி கர்த்தா. இது சகுணப் பிரம்மம் சரீரங்களில் அகப்பட்டிருக்கும் ஆத்துமா, தன் சுய நிலை மறந்து மயங்கிய வாழ்வினின்று நீங்கி உண்மை யுணர்ந்து, 'நானே பிரம்மம்' என்று உணர்வதே மோக்ஷம். ஈஸ்வர ஸ்தோத்திரம் செய்தலும், யாகாதிகள் செய்தலும், வியாவஹாரிக தசையில் பொருத்தமே; பாரமார்த்திக தசையிற் பொருந்துவனவல்ல. சகுணப் பிரம்மமாகிய ஈஸ்வரனும் கற்பிதனே யாகையால், அழிவுடையவனே. ஆகையால், ஆனந்த மயமாகிய அத்விதீய பிரம்மத்தை அறிந்து, அது தானேயாக இருக்கும் நிலை அடைய முயல்வதே இம்மதத்தின் முக்கிய நோக்கம். இதுவே மோக்ஷ மார்க்கம்.''

அறிஞர்களாகிய பலவகை மதவாதியர்களும், இவ்வாறு தத்தம் கொள்கைகளை விளங்க வுரைத்த உண்மைப் பொருளுரைகளை அமைதியோடும் முக மலர்ச்சியோடும் கேட்டுக்கொண்டிருந்த பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி ஆனந்த மேலீட்டால் தனது ஆதனத்தினின்று எழுந்து நின்று, அறிஞர்க்கெல்லாம் உபசாரம் செய்வித்துப் பின் வருமாறு பேசினன்:

" அன்பர்களே, அறிஞர்களே, பல வகை மதங்களிற் பற்றுக் கொண்ட புண்ணிய சீலர்களே, நீவிர் பேசிய பொருளுரைகளால் யான் அறிந்துகொண்ட உண்மைகள் பலவாம். பிரத்தியக்ஷம் ஒன்றையே பிரமாணமாய்க் கொண்ட சிலரை

யொழிய, மற்றவர் எல்லாம் நாட்டுக்கு நன்மைவிளைப்போரே. பிரத்தியக்ஷப் பிரமாணம் கொண்டவர்களும் நாட்டுச் சட்டங்கட்கு உட்பட்டுத் தரும நெறி பிறழாது நடக்கும்வரையில் நமக்கு அவர்கள்மேற் பகை கொள்ள உரிமையில்லை. ஆயினும், அவர்களே மேலும் மேலும் உண்மையை ஆராயக்கூடிய அறிவாளர்களாகையால், இந்நிலையிலேயே நிற்பார்கள் என நான் நினைக்கவில்லை. பொது வகையில் மனிதன் தன்னிலும் உயர்ந்ததொரு பொருளைத் தேடி அறிய முயல வேண்டுவதேன்? தன்னையும் தன்னைச் சுற்றியுள்ள உலகங்களையும் உயிர்களையும் அவன் பார்த்ததும், காரணப்பொருளாக ஒன்று இருக்க வேண்டும் என அறிவால் ஆராய்ந்தறிய நேர்ந்தது. அவரவர் அறிவின் அளவுக் கேற்ப ஆராய்ச்சியும் உண்மையுணர்ச்சியும் தோன்றலாயின. அதனால், மதங்கள் பலவாயின. உலகில் வாழும் நிலையில் தருமம் அதருமம் என்ற நெறியை உணர்ந்து, நன்னெறியிற் செல்லும்பொருட்டுத் தூண்டுவது ஒவ்வொரு மதத்துக்கும் முக்கிய நோக்கமாம். இந்நோக்கம் நிறைவேறுமாயின், நாஸ்திக மதமும் நாம் விரோதிக்கத் தக்கதன்று. எவரெவர் கொள்கை எவ்வெந்நிலையில் இருந்தாலும், ஒரு பெரிய நாட்டின் குடிகள் என்ற நிலையிலும் மக்கட்டொகுதியில் ஒரு பெரும்பகுப்பினர் என்ற நிலையிலும் நாம் அனைவரும் ஒரே எண்ணம் உடையவர்களாய் நல்வாழ்வுபெற நாட வேண்டுவதே நம் கடமையாம்.''

அரசர் பெருமான் பேசி முடிந்ததும், அரசவைப் புலவர் தலைவர் எழுந்து நின்று, பின் வருமாறு பாடினர் :

ஒன்றே பலவோ வுளதோ விலதோ
எனவே யெவரும் எய்யாப் பொருளின்
உண்மை நிலையினை யுய்த்துணர் கருத்தாற்

பெரியார் பலர்பலர் பொருளுரை செவிக்கொளப்
பட்டிமண் டபத்துப் பாங்குற வடைந்தருள்
பல்யாக சாலைப் பாண்டிய மன்னன்
முதுகுடுமிப் பெருவழுதி முறைசெயூஉப் புரக்கும்
பழந்தமிழ் நாடும் பாரத தேயமும்
அறமும் அன்பும் அருளும் மெய்ம்மையும்
நாற்பெருஞ் செல்வமா நயமுறப் பெற்று
நல்லோர் உறையுளாய் நாடா வளத்தவாய்
வாழிய வாழிய வாழிய வூழியே.

இதனுடன் அன்று பட்டி மண்டபத்தில் நிகழ்ந்த மத வாத சபை நிறைவேறியது. அரசரும் பிறரும் தத்தமக்குரிய வாகனங்களில் இவர்ந்து தத்தம் இருக்கைகள் எய்தினர்.

புலவராற் பாடப்படுவது அரசர்க்குப் பெருமையாகும். இயற்கைப் பொருளை யிற்றெனக் கிளக்கும் இயல்பு வாய்ந்த நல்லிசைப் புலவர் வாக்கால் ஒரு செய்யுளேனும் பெறுவது, தமிழ மன்னர்க்கும் வள்ளலர்க்கும் மிகவும் உவப்புக் குரியதா யிருந்தது. ஆயிரக் கணக்கான புலவரை ஆதரித்துத் தமிழணங்கின் திருக்கோயிலாகிய தமிழ்ச்சங்கத்தைப் பரிபாலித்த பாண்டியமன்னர் பரம்பரையிலே பிறந்த பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி இவ்வியல்பு வாய்க்கப்பெறாதிருப்பானோ? முன்னே இரண்டொருமுறை நெட்டிமையாரும் நெடும்பல்லியத்தனாரும் பாடியருளிய பாடல்களை அவன் விருப்போடு சூடி, அவர்களை அன்போடு உபசரித்த செய்தியைக் கேட்டோம். வேறு பல புலவரும் இவ்வாறு எண்ணிறந்த பாடல்களைப் பாடிக்கொண்டு வந்து, அவனைக்கண்டு பரிசில் பெற்றுச் சென்றனர்.

இவ்வாறு இம்மன்னர்பிரான் புலவர்க்குப் புரவலனாக இருப்பதைப் பற்றிக் காரி கிழார் என்ற வேளாளப் புலவர் ஒருவர் செவியுற்றார். அவர் செவ்விய இனிய சிறிய சொற்களால் அரும்பொருள்களை அமைத்துக் கவி செய்வதிற் சிறந்த அனுபவம் உடையவர்; உண்மையை உள்ளவாறுரைக்கும் உறுதி படைத்தவர்; வாழ்விலும் தாழ்விலும் மாறாத மன மாண்பினர்; நாடெங்கும்

சஞ்சரித்து, நல்லோர் பலர் கூட்டுறவுபெற்று,நற்குணங் கட்கெல்லாம் நிலைக் களமாய் இருந்தவர்; புலமையின் சிறப்பை உலகறியச் செய்யும் வறுமையும் தம் உரிமை யாய்ப் பூண்டவர்; இறைவன் திருவருள் வயத்தால் இன்ப துன்பங்கள் எய்துவனவென்று எண்ணி எவர்க் கும் தெய்வத்திறத்தை அறிவிக்கும் ஆற்றல் வாய்ந்தவர்; வேதங்களையும் வேத வொழுக்கத்தையும் அதனைப் பின் பற்றி யிருப்போரையும் பெரிதும் புகழ்ந்து போற் றும் இயல்பினர். இத்தகைய பெரியார், ஒருவரையே னும் வறிதே புகழும் தன்மை யின்மையால், புகழ்தற் குரிய குணங்கள் வாய்ந்தவனாகிய பல்யாகசாலை முதுகுடு மிப் பெருவழுதியை அடைந்தார்.

புலவருட் பெரியாராகிய காரி கிழார் வருகையைச் செவியுற்ற அரசர்பிரான் அரண்மனையின் ஒரு பகுதியா கிய புலவர் அவைக்களம் அடைந்து, தகுந்த ஆதனத் தில் அமர்ந்து, அங்கு முன்னே வந்தமர்ந்து நூலா ராய்ச்சி செய்துகொண்டிருந்த அறிஞர் பலராலும் வாழ்த்தப் பெற்றான். இந்நிலையில் புரவலனும் பிற புல வரும் புலக்களத்தில்அமர்ந்திருக்கும்போது உரியவரால் வழி காட்டப்பெற்றுக் காரி கிழார் அங்கு வந்தார். அர சன் அவர்க்கு நல்வரவு கூறித் தனக்கு அருகிலிருந்த தோர் ஆதனத்தை அளித்தனன். ஆங்கிருந்த பிற புல வர்களும் அவரை முக மலர்ச்சியோடு வரவேற்றனர்.

பாண்டியன் முகமலர்ச்சியோடு அவரை நோக்கி, "பெரியீர், தமிழ்ச்செல்வத்தை எம் போன்றார்க்கு உத வும் பெருந்தகைமை வாய்ந்த வள்ளலாகிய நும் போன் றாரைக் காணக் கிடைப்பதே எமது பாக்கியம். நுமது

வரவு நல்வரவாகுக. செல்வத்துட் செல்வமாகிய செவிச் செல்வத்தை நும்போன்ற பெரியாரிடமன்றி வேறு எங்குப் பெறலாகும்? தமிழணங்கின் தவப்பேறே, வரந்தர வந்த செல்வமே போல வந்த நுமக்கு என்ன உபசாரம் கூற வல்லோம்?'' என்றான்.

காரி கிழார் வணக்க வொடுக்கமாகத் தம் ஆதனத் தருகில் எழுந்து நின்றுகொண்டு, இரு கரங்கூப்பி அரசனை வணங்கி, "மன்னர் ஏறே, செந்தமிழ்ப்புலவர் செஞ்சொலமுதுக்குச் செவியினை நல்கிய செழியர் பிரானே, பொதியப்பொருப்பின் புகழொடுபொருந்தியபுண்ணியர் குடியிற் பூத்த புரவல, இரவலராகிய எம் போல்வார்க்குப் புரவலன் எனவும் தமிழணங்கின் திருத்தளியை அமைத்தோர் வழித்தோன்றல் எனவும் வேள்விகள் பல செய்து விண்ணவரையும் மண்ணவரையும் மகிழ்வித்தவன் எனவும் பிறாற் கேள்வியுற்று நேரிற் கண்டு இன்புறலாமென அணுகினேம். தமிழ்ப் பணி பூண்ட பெரியார் பலர் பிறந்த குடியிற் பிறந்துளோம் என்ற தொரு பெருமை எமதாம். அத்தகையார் பலரை ஆதரித்தார் வழி வந்த பெருமை உனதாம். ஆகையால், இறைவன் திருவருள் கூட்டி வைக்க இங்கடைந்தோம். நாட்டின் நலத்தின்பொருட்டும் உலக வாழ்வின் உயர்ச்சியின்பொருட்டும் அறம் வளர்ந்து மறம் தளரும்பொருட்டும் நினது செங்கோல் செழிப்பதாக,'' என்று கூறி, ஆதனத் தமர்ந்தார்.

பாண்டியன் புலவரை நோக்கி, "பெரியீர், நுமது வாழ்த்துரை இறைவ னருளால் இந்நாட்டுக்கு நன்மை பெருக அமைவதால், அஃது எந்நாட்டுக்கும் நன்மை

விளக்கும் எனக் கொள்கின்றேன். நும்மைப்போன்ற சான்றோர் வாக்காற் செய்யுள் பெறுவது எம் குடிக்குப் பெருமை யன்றோ? வாழ்த்துரை செய்யுளாயமையுமாயின், உலகம் உள்ளவளவும் அழியாதன்றோ? நல்லோர்கள் வாக்கால் வாழ்த்தப் பெறுவது நாட்டுக்கும் உலகத்துக்கும் நன்றே யன்றோ?'' என்று கூறினன்.

## VI

காரி கிழார் மறு முறை யெழுந்து, வாழ்த்துதற் கேற்ற வண்ணமாய் இரு கரங்களையும் அமைத்துக் கொண்டு, பின் வரும் செய்யுளைப் பாடினர்:

"வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்
தெனுஅ(து) உருகெழு குமரியின் தெற்கும்
குணுஅது கரைபொரு தொடுகடற் குணக்கும்
குடாஅது தொன்றுமுதிர் பௌவத்தின் குடக்கும்
கீழது, முப்புணர் அடுக்கிய முறைமுதற் கட்டின்
நீர்நிலை நிவப்பின் கீழும் மேல(து)
ஆனிலை யுலகத் தானு மானு(து)
உருவும் புகழும் ஆகி விரிசீர்த்
தெரிகோல் ஞமன்ன் போல வொருதிறம்
பற்றல் இலியரோ நிற்றிறஞ் சிறக்க
செய்வினைக் கெதிர்ந்த தெவ்வர் தேஎத்துக்
கடற்படை குளிப்ப மண்டி யடர்ப்புகர்ச்
சிறுகண் யானை செவ்விதின் ஏவிப்
பாசவற் படப்பை யாரெயில் பலதந்(து)
அவ்வெயிற் கொண்ட செய்வுறு நன்கலம்
பரிசின் மாக்கட்கு வரிசையின் நல்கிப்
பணியிய ரத்தைநின் குடையே முனிவர்
முக்கட் செல்வர் நகர்வலஞ் செயற்கே
இறைஞ்சுக பெருமநின் சென்னி சிறந்த

நான்மறை முனிவ ரேந்துகை யெதிரே
வாடுக விறைவநின் கண்ணி யொன்னார்
நாடுசுடு கமழ்புகை யெறித்த லானே
செலிய ரத்தைநின் வெகுளி வாலிழை
மங்கையர் துனித்த வாண்முகத் தெதிரே
ஆங்க, வென்றி யெல்லாம் வென்றகத் தடக்கிய
தண்டா வீகைத் தகைமாண் குடுமி
தண்கதிர் மதியம் போலவும் தெறுசுடர்
ஒண்கதிர் ஞாயிறு போலவும்
மன்னிய பெருமநீ நிலமிசை யானே.'' *

செய்யுளைப் பாடி வரும்போது அவைக் களத்திலிருந்த புலவர் அனைவரும் அதன்கண் உள்ள சொற்பொருளமைதியில் ஈடுபட்டு, ஆனந்தித்திருந்தனர். அரசனும் அது தன் புகழாய் அமைந்திருப்பினும் புலவரது புகழையும் விளக்குவதாகையால், மகிழ்ச்சியோடு கேட்டு அவரை நோக்கி, "புலவரேறே, அருங்கருத்துக்கள் பலவற்றை எளிய சிறிய இனியசொற்களில் அமைக்கும் திறம் வாய்ந்த நும்மைப்போன்ற பெரியோர்களே நம் நாட்டுக்குப் பெருங்கொடையாளர். நும் வாக்கில் இருந்து பிறந்த அமுத மொழிகளே இனி வருங்காலத்தில் தமிழ் நாட்டின் பண்டைப் புதையற் பொருளாய் வழங்க வுரியனவாம். எம்முடைய சிற்றறிவில் நீவிர் அமைத்திருக்கும் கருத்துக்கள் அனைத்தும் விளங்காமையால், அவை விளங்குமாறு சிறிதளவு எடுத்துரைக்க வேண்டுகின்றேன். செய்யுள் செய்தவரே பொருளும் உரைத்தல் சிறப்பன்றோ?'' என்றான்.

---

* புறநானூறு - செய்யுள், 6.

புலவர் பெருமான் எழுந்து நின்று, பின் வருமாறு பிரசங்கித்தனர்:

"அரசர் தலைவ, யாம் இச்செய்யுளிற் பண்டைப் பழங் குடியாகிய நினது குடிப்பெருமையையும், நினது புகழையும் விளக்கும் கருத்தால் அறம் பொருள் இன்பம் வீடு என்ற நால்வகை உறுதிப் பொருள்களையும் அமைத்திருக்கின்றேம். அது வருமாறு:

"நினது புகழும் பிரதாபமும், வடதிசையில் இமய மலைக்கு வடக்கிலும், தெற்கிலே குமரிக்குத் தெற்கும், மேற்கிலே மேல் கடலின் மேல்பாலும், கிழக்கிலே சகரர் தொட்ட கடலின் கீழ்பாலும், கீழே சுவர்க்க மத்திய பாதாளம் என்ற மூன்று உலகங்களில் நிலவுலகத்தின் கீழும், மேலே கோலோகத்தின் மேலும் பரவியுளது என்றமைக்கப்பட்டுளது. இஃது எவ்வாறெனில், பாரத தேயம் முழுவதும் வென்று ஒரு குடைக்கீழ் ஆளும் சக்கரவர்த்தியாகையால், உனது புகழ் உன் நாட்டினுள் அடங்காமல் அயலவர் நாட்டிலும் பரவ வேண்டுவது முறையே யெனவும்; யாகாதிகள் செய்து தேவர்களைத் திருப்திப்படுத்தி யிருப்பதால், மேலுலகங்களிற் பரவியுள தெனவும்; கடற்கப்பால் உள்ள அயல் நாடுகளிலும் தமிழ் நாட்டு மாக் கலங்கள் சென்று உனது புகழையே நாட்டுவதால், கடற்கப்பாற் பரவியதெனவும்; இமயமலையின் வடவெல்லையில் கயற்பொறி பொறித்து அதற்கு வடபால் உள்ள நாட்டவரும் எச்சமயத்தில் நம்மை எதிர்த்துப் போர் செய்து அடக்க வருவனோ என்று எண்ணித் திகிற்படுமாறு செய்து வந்துளாயாகையால், இமயத்துக்கு வடபாலும் பரவியுள நினது கீர்த்தியும் பிரதாபமும் எனக் கூறினேம்.

"இவ்வாறு, புகழ் பரவிய மன்னனாயிருப்பினும், இனியும் சிறப்புப் பெறுமாறு வாழ்தற்குரிய நன்னெறியைக் கடைப்

பிடிக்கவெனப் பின் வரும் கருத்துக்களை அமைத்துளோம். நியாய பரிபாலன விஷயத்தில் துலைக் கோலின் முள்ளைப் போல ஒருபாற் கோடாது நடுவு நிலை கொள்க. அவ்வாறு கொள்வதாற் சிறப்புறுக எனவும் யமதருமனைப் போல நடுநிலை கடை பிடிக்கவெனவும் பொருள் செய்யுமாறு முதற்கண் அமைந்தது. அரிய அரண்கள் பலவற்றை அடக்கிக் கொண்டு அவற்றில் உள்ள அரும்பொருள்களை வறியோர்க்கு வழங்குக, புலவர்க்குப் பரிசிலாக அளிக்கவெனவும்; நினது குடை வேறெங்கும் பணிவில்லதாய் ஓங்கி யுயருமாயினும், முனிவரையும் சிவாலயங்களையும் வலம் வரும்போது பணிகவெனவும்; எவர்க்கும் வணங்காத நினது முடி நான்மறை ஓதிய அந்தணர் ஆசியோடு ஏந்திய கையின் எதிரே வணங்குக எனவும்; நினது மாலை வாடாத பெருமைத்தாயினும், பகைவர் நாடுசுடு புகையில் வாடுகவெனவும்; பகைவர்முன் அடங்காத கோபத்தை யுடையாய் ஆயினும், நினது சினம் பெண்டிர் பிணக்கின் முன் மாறுக வெனவும்; பல வகை வெற்றிச் சிறப்பையும் கொண்ட வள்ளன்மை சிறந்த பாண்டிய மன்ன, நீ சூரிய சந்திரர்போல உலகில் வாழ்கவெனவும் வாழ்த்துக் கூறினேம்.

"ஒருபாற் கோடாத நடுவு நிலைமையைப் பற்றுவதாலே அரசர்க்கு எல்லா வாழ்வும் பெருகும்; படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் என்ற ஆறும் வளரும். அயல் நாடுகளை வெல்வதால் அடையும் பொருளைப் பரிசிலர்க்கு வழங்கும் முறையிலும் உரிய உபசாரங்களோடும் ஆதரவோடும் வழங்க வேண்டும். வரிசை தவறினுற் பெரிதும் வறுமையுடையாராயினும் பரிசில் பெறார். பரிசில் வாழ்நராகிய புலவர் புகழ்வது அரசர் வழி வழிச் சிறக்க வுதவும் சிறந்த வுதவியாம். ஆதலாலும், வரிசையறிதல் அரிது, ஈதல் எளிது என்பர் ஆதலாலும், வரிசைக்கு ஏற்ப ஈகை கடமையாக் கொள்க எனப்பட்

டது. நினது குடை பாரததேயம் முழுவதும் நிழல் செய்வதாய் வடவரும் பிறரும் வணங்கத் தக்கதாய் ஓங்கி யுயர்ந்ததாய் இருப்பினும் என்ன வுயர்வு ஏரினும் பணிதற்குரியாரைப் பணிதலும் அரசர் கடமையாம் ஆதலால், சிவாலயப் பிரதக்ஷிண சமயத்திலும், முனிவரை வணங்கும் காலையிலும் பணிகவென வமைத்தது,

'எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்
செல்வர்க்கே செல்வம் தகைத்து.' *

என்ற உண்மையைக் கருதியே யாகும். எந்நாட்டவரும் தம் அரசன் பிறர்க்கு வணங்கா முடியனாய் இருப்பதே பெருமையெனக் கருதுவாராயினும், அவன் முடியும் வணங்கற்குரிய இடம் உளது என அவன் அறியற்பாலனாகையால், எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு ஒழுகும் அறவோராகிய அந்தணர் ஏந்து கையெதிரில் அவரது வாழ்த்துப் பெறுமாறு இறைஞ்சுக வென்று கூறப்பட்டது. வேத விதிபற்றி நாட்டவர் நடக்கவென ஆணை பிறப்பித்ததோடு வைதிக முறையால் அநேக யாகங்களையும் நிறைவேற்றிய மன்னனாகிய நின்னை நான்மறை முனிவரை வணங்கி வாழ்வு பெறுகவென்று கூறியது பொருத்தமேயன்றோ? நின் தலை மாலை நாண்மலர் மாலையாய் வாடா மாலையாய் இருக்கவெனப் பிறர் வாழ்த்துவாராயினும், புலவர்பலர்க்கும் ஈந்துவக்குமாறு வேண்டியபொருளைப் பெறக்கருதி அயல் நாடுகளோடு நீ போர் செய்கையில் முறையறியாதாரைக் கண்டித்து நல்வழிப்படுத்தும் பொருட்டுத் தீயார் வாழும் இடங்களில் தீயிட வேண்டி நேரிடுமாதலால், அவ்வாறு எழும் புகையால் கண்ணி வாடுக என அமைக்கப்பட்டது. இவ்வாறு அறமும் மறமும் புரிந்து பொருள் பெறும் நினக்கு இன்பவாழ்வும்நன்கமைகவெனப் பெண்டிர்பிணக்கின்

* திருக்குறள்—செய்யுள், 125.

முன் சினம் மாறுகவென அமைக்கப்பட்டது. 'வென்றி யெல்லாம் வென்று அகத்தடக்கிய தண்டா வீகைத் தகைமாண் குடுமி,' என்று விளித்து, அகம்புற வெற்றி இரண்டும் அமைத்துக்குணமாண்பும் புகழப்பட்டது. நீடுவாழ்க வென வாழ்த்தும் கருத்தால் சூரிய சந்திரர் உள்ள காலம் எல்லாம் உலகமுள்ள காலம் எல்லாம் உயிர்கள் உள்ள காலம் எல்லாம் அறமும் அருளும நெறியும் உள்ளகாலம் எல்லாம் வாழ்க வென வாழ்த்தியாவாறும். இவற்றில் நான்மறை முனிவர் ஏந்து கையெதிரே இறைஞ்சுக வென்பதால் அறமும், நாடு சுடு கமழ் புகையால் வாடுக நின் கண்ணியென்பதாற் பொருளும், மங்கையர் துணித்த வாண்முகத்தெதிரே செவியர் நின் வெகுளி யென்பதால் இன்பமும், முக்கட் செல்வர் நகர் வலஞ் செயற்குப் பணியியர் என்பதால் வீடும் கூறப்பட்டன.

"அரசரேறே, இவ்வாறு நாற்பொருள்களையும் விளங்க வைக்கும் இச்செய்யுளையும் நின் புகழோடு இணைத்து மார்பகத்தில் அணிந்துகொண்டு எமை ஆதரிக்க வேண்டுகிறேம்."

காரி கிழாரது பிரசங்காமுதத்தைச் செவி வாயாக உள்ளம் களனுகப் பருகிய புரவலனும் பிற புலவர்களும ஆனந்த மேலீட்டால் சிறிது பொழுது பரவசப்பட்டு மௌனமா யிருந்தனர். பிறகு அரசவைப் புலவர் தலைவர் எழுந்து நின்று, "மன்னர் பிரானே, புலவருட் புலவரே, இவ்வருங்கருத்துக்களை யமைத்துச் சின் மென் மொழியாற் செய்யுள் செய்து அரசர்க்கு அறிவுரை அறவுரை வாழ்த்துரை கூறிய இவரே புலவர்! இவர் வாய்ப்பிறந்த இம்மொழி யமுதமே செய்யுள்! இவரது இயல்பை அளந்தறிந்து பரிசில் தர வல்ல பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியாகிய பாண்டியனே புரவலன். வேறு யாம் கூற என்னவுளது? உம்ப

ருலக வாழ்வும் இவ்வின்ப வாழ்விற் சிறந்ததாகாது என்பது அறிவுடையோர் கொள்கையன்றோ? இன்றே தமிழ்த் தெய்வத்தின் பெருந்திருநாள் என்னலாம்,'' என்று கூறி ஆதனத் தமர்ந்தார்.

அரசன் அவர்க்கு முக மலர்ச்சியால் உபசாரம் செய்த பிறகு காரி கிழாரை பார்த்து, "புலவர் தலைவரே, நுமது செய்யுளேயே சிறந்ததென்கோ! அதற்கு நீவிர் உரைத்த உரையையே சிறந்ததெனப் பாராட்டுகோ! நாட்டின் நன்மையின்பொருட்டு நும் போன்ற பெரியோர்கள் வாழ்த்துரை கூறுவது சிறப்பேயன்றோ? இச்செய்யுள் எனக்கு வேண்டுமளவு அறவுரை கூறுவதாய் அமைந்திருப்பது கண்டு ஆனந்திக்கின்றேன். நும்மனைய பெரியார் துணிந்து இவ்வாறு அறிவுரை புகன்றிலரென்றால், அரசென்னும்? அரசன் என்னுவன்? குடி மக்கள் வாழ்வு என்ன ஆகும்?'' என்றான்.

காரி கிழார் மறு முறையும் எழுந்து, "அரசே, இச்செய்யுள் நின்னை வாழ்த்தவே எழுந்ததாயினும், நின் நிழலின்கீழ் வாழும் குடி மக்களையும் வாழ்த்துவதாம் அரசன் உயிரும் குடிகள் உடலும் ஆக அமைவராகையால் உயிரை வாழ்த்துவது உடலுக்கும் அமைவதன்றோ? உயிராகிய அரசன் அற நெறி கடைப்பிடித்துப் பொருள் வளஞ் சிறந்து இன்ப வாழ்வு பெற்று வீட்டின்பம் பெற வுரியனாகுக வென்று வாழ்த்துவதால், உடலாகிய மக்களும் அவ்வாழ்வு பெறுகவென வாழ்த்தியதேயாம் அன்றோ? அரசனிடம் அறமில்லையென்றால், நாட்டில் நிலைக்குமா? அவ்வாறே பிற வுறுதிப் பொருள்களும் அவனை அடிப்படையாய்க் கொண்டன்றோ உலகிற்கு வருவன? ஆகையால், இச்செய்யுள்

தமிழ் நாடெங்கும்,—ஏன்?—இப்பாரத பூமியெங்கும் நின் குடையின்கீழ் வாழும் குடிகள் அனைவரையும் வாழ்த்தியதாம். அரச வாழ்த்தே அவன் ஆளுகைக் குட்பட்ட மக்களுக்கும் வாழ்த்தாம் என்பதே அறிவுடையார் கொள்கையாம்,'' என்று கூறினர்.

இவ்வுரையைக் கேட்ட புலவ ரவைக்களத்தார் அனைவரும் பேரானந்தம் எய்தினர். 'பெரியோர் வாக்கிலன்றிப் பெரும்பொருள் வெளிப்படுமோ?' என்று அனைவரும் ஒரு முகமாய்க் கூறினர். அரசனும் மனமகிழ்ச்சியோடும் முக மலர்ச்சியோடும் நுழைநூற் பட்டால் நெய்து பொன்னூலால் அழகிய பூத்தொழில் செய்யப் பெற்றதொரு பெருமதிப்புள்ள பட்டாடையைக் காரி கிழார்க்குப் போர்த்து, பொற்கலத்திலே ஆயிரம் பொற்காசுகளை வைத்து, "பெரியீர், நும் செய்யுள் அமைவின் சிறப்பை யான் இவ்வளவேயாக மதித்தேன் என்று எண்ணாது, நுமது அருளுரையே அறிவுரையாக்கொண்டு யான் வாழக் கருதியுள்ளதைத் தெரிவிக்கும் முகத்தால் நுமக்குக் கொடுக்கும் கையுறையாக இதனை யேற்றுக்கொள்ள வேண்டுகின்றேன்,'' என்று கூறிக் கொடுத்தான். புலவர் அதனை முகமலர்ச்சியோடு பெற்றுக்கொண்டு வந்தனம் கூறினர்.

பிறகு அரசன் அங்கு வந்திருந்த புலவர்க்கெல்லாம் உபசார மொழிகள் கூறிப்புலவர் புடைசூழவெளியேறி ஆத்தான மண்டபம் அடைந்து, அமைச்சரோடு வீற்றிருந்து, அரசியல் வினையைக் கவனிக்கலாயினன். அன்று முதல் காரி கிழார் பாண்டிய நாட்டுப் புலவராகவே வாழ்ந்து, உரிய காலங்களில் அரிய செய்யுட்களைச் செய்து, உலகை வாழ்வித்து வந்தனர்.

இவ்வாறு பல ஆண்டுகள் கழிந்த பிற்பாடு அரசன் தன் நாட்டின் அரசியற் பொறையைத் தலை மகனிடம் தந்து, வனஞ் சென்று தவமியற்றிச் சிவபிரான் திருவருட் பெருமையைச் சிந்தித்து வந்தித்திருந்து, எவரும் எளிதிற் பெறுப் பேறாகிய பேரின்ப நெறியைக் குறுகினன்.

## 2. பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன்

### I

தமிழுணங்கின் தலை மகனாகிய அகத்தியனார் வாழும் பொதிய மலையின் சாரிவிலுள்ள தவச்சாலை யொன்றில் பொன்னிறமாகிய மாலை வெயிலின் எழிலைக் கண்டு மன மகிழ்வு மிகப் பெற்ற முனிவர் ஒருவர் அமர்ந்திருந்தார். இயற்கைச் செல்வியின் இனிய தோற்றத்தைத் தம் உள்ளத்தாற் கொள்ளை கொள்வாராய் இருந்த அத்தவச் செல்வர், இனிய நீர்ப் பெருக்கும் இன்கனி வளமும் மண மிகு தென்றலுங் கொண்ட அம்மலை வாழ்வை விடுத்து மன்னர் மன்னனாய் இருக்கும் வாழ்வையும் விரும்பார் எனவே அவர் முகத் தோற்றம் விளக்கியது. ஆயினும், அவர் முகத் தோற்றம் அறிவால் முதியவர் என அவரைத் தெரிவித்ததாயினும் ஆண்டினால் முதியவரென விளக்கவில்லை. சமீபத்திற் சென்று பார்ப்போர்க்கு அவரை யௌவனப் பருவம் கடவாதவர் என்றே மதிக்கத் தோன்றும். இளமையும் இளமைக்கேற்ற எழிலும் அவரிடம் பொருந்தியிருந்தவாயினும், உலக நிலையில் அவ்விரண்டாலும் அடைதற்குரிய அறப் பயனை அவர் விலக்கி வந்து வன வாழ்க்கை பூண்டிருந்ததால், அவர் உடம்பின் நிறமும் பொன்னிறமாய் விளங்கியது. எழுமையும் ஏமாப்பு உதவுவதாகிய அறத்தைக் கொண்டு ஆமை போல ஐந்தும் அடக்கக் கருதி

அவர் ஆங்கு வாழ்ந்தனர் எனத் தோன்றியது. இத் துணைச் சிறந்த இன்பப் பேற்றை அடைந்து வாழ்ந்திருந்த அம்முனிவர் சடுதியில் எழுந்து நின்றார். அவர் அவ்வாறு நின்றதற்குக் காரணம் அவரருகில் அவரளவே வயதுள்ள சிறந்த போர் வீரன் ஒருவன் வந்து நின்றதேயாம். அவன் வில்லும் அம்பறாத் தூணியும் வாளும் தோலும் தாங்கி, மிகவும் கம்பீரமாய் விளங்கினன்.

தவச் செல்வர் அவனைக் கண்டு எழுந்து நின்றது என்ன காரணத்தால் என்பது அவ்விருவர்க்கும் இடையில் நிகழ்ந்த பின் வரும் சம்பாஷணையால் விளங்கும் :

முனிவர் :—வருக ! வருக !! மாற, வருக ! நின் வரவு நல்வரவாகுக. சமீப காலத்தில் உனது நிலைமை சிறிது மாறுபாடு அடைந்திருப்பதாகத் தோன்றுகிறது. அதற்கு ஏற்ப நான் வரவேற்கக் கூடாமைக்கு மன்னிக்கவும்.

மாறன்:—முனிவரே, தற்காலம் இருக்கும் நிலையில் நான் நும்மை முன்புபோல் உரிமை முறையால் அழைக்கக் கூடாதாயினும், நான் வேண்டும் வரத்தைப் பெற்றுக்கொண்டு போகலாமன்றோ ?

முனிவர்:—அன்ப, மாற, நீ கேட்கும் வரம் கொடுக்கத் தக்க தவச்சிறப்பை நான் இன்னும் தேடிப் பெற்றிலேன். நமது ஆசிரியரிடம் கல்விச் செல்வம் பெறும் பணி நிறைவேறிய பிறகு நம் நாடு முழுவதையும் சுற்றிப் பார்க்கச் சென்றேன்; பல புண்ணிய க்ஷேத்திரங்களை யடைந்து, மூர்த்தியைத் தரிசித்தேன்; தீர்த்தங்களிலே ஆடினேன்; மோன விரதம் பூண்ட பெரியார் பலரையும், அடைந்தார்க்கு அவரவர் பக்குவ நிலைக்கேற்ப அருள் பொழியும் ஆன்றோரையும் தரிசித்தேன்; நம் நாட்டிலே பல விடங்களிலும் சென்று

அறிதற் கரும்பொருளாகிய ஆத்மானந்தத்தை அறிவிப் பாரிடம் அறிய முயன்றேன்; அனுபவத்தில் அப் பெரும்பேற்றை யடையவெண்ணியே இங்கு அடைந் தேன். இவ்விடத்தில் சாமானியர் கண்கட்குப் புலப் படாத பெரியார் பலர் வாழ்கின்றனர். இயற்கைச் செல்வியும் இங்கு அரசு புரிகின்றாள். இனி என் சிந்தை இன்றிருந்து நாளை யழியும் வாழ்வை நாடாது; கணத்திலே தோன்றி யழியும் இன்பத்தில் ஈடுபடாது; ஒருவகை நிலையுமற்ற செல்வத்தினைத் துய்ப்பதிற் செல் லாது; என்னால் இந்நிலையில் உனக்குக் கொடுக்கக் கூடிய வரம் ஒன்றும் இல்லை யென்பதை நீயே ஊகித் துணரலாம்.

மாறன்:—ஐய, உமது முன்னோர் தேடி வைத்த பெருஞ்செல்வத்தையும் நீவிர் அநேக ஆண்டுகளாய்த் தேடிய அரும்பெற லறிவையும் நீவிர் பிறந்த நாட்டுக் குப் பயன்படுமாறு உதவல் செயற்கருஞ்செயலோ? நான் கேட்க எண்ணி வந்த வரம் இதுவே.

முனிவர்:—வாராணவஸி க்ஷேத்திரத்தில் விசுவ நாதரைத் தரிசனம் செய்துகொண்டிருக்கையில் என் மனமார என் முன்னோர் தேடிவைத்த நிலம் பொன் முத லிய எல்லாப் பொருள்களையும் என் நாட்டுக்கென்றே அர்ப்பணம் செய்துவிட்டேன். என் பொருள் என் நாடு என்று கூற எனக்கு இனி ஒன்றும் இல்லை. 'உலக முழுவதும் என் நாடே; உயிர் கள் எல்லாம் என் உயிரே' என்ற உண்மையைப் பெரியோரால் நன்கு அறிந்துகொண்டேன். என் னுடைய அறிவு என்று சொல்ல என்னிடம் ஒன்றும் இல்லை. இருப்பதாகப் பிறர் எண்ணுவது அழிவுள்ளது. அறிவு தன் உருவமாகக் கொண்ட பொருளை அறியும்

அறிவே அறிவாமாகையால், அவ்வறிவை இன்னும் பெருத யான் அறிவுள்ளேன் என்று எவ்வாறு கூறிக் கொள்வது? ஆகையால், என் நாடு என்று ஒரு நாடு இல்லாத யான் என்னிடம் இல்லாத அறிவைப் பயன் படுத்துவது என்பது எவ்வாறு என்று எனக்குத் தோன்றவில்லை. எல்லாவுலகங்களும் எல்லாவுடம்பு களும் எவனுக்கு ஆலயமோ, அவனே அறிவின் உரு வம்; அவனே அறியப்படும் பொருள். அறிபவனும் அவனேயாவன். இவ்வுண்மை வாசா கயிங்கரியம் ஆகாது, அநுபவ முதிர்ச்சியாகவே இங்கு முயற்சிசெய்ய வந்தேன். இவ்வுடம்பைக் கொண்டு பெறலாகும் பயன் இதுவே. இது பெற்ற பிறகு இவ்வுடம்பு இருக்குமா யின், எந்நாட்டுக்கும் எவ்வுலகத்துக்கும் எவ்வுயிர்க்கும் உரிமையே. அப்பயன் பெறுங்காறும் இவ்விடத்தை விட்டு அசையுங் கருத்திலேன்.

மாறன்:—இவ்வுயர்ந்த நோக்கம் கொண்ட நும்மை இவ்விடத்தினின்று அகற்றுவதும் எனக்குப் பெருமை தராது. இளம்பருவத்திலே ஒரு சாலே மாணவராய்ப் பயின்றேமாகையால், அவ்வுரிமை கருதி இப்பொழுது எனது அரசியற் பொறையைத் தாங்கி யுதவும் அமைச்சரா யிருக்குமாறு வேண்டிக்கொள்ள லாமோவென இங்கு வந்தேன். இங்கிருந்த வண் ணமே எல்லாவுயிர்க்கும் ஏமமாகிய அருந்தவம் இயற் றக் கருதியிருக்கும் நுமக்கு அரசனாகிய அடியேனும் இயன்ற வுதவி செய்யக் கடமைப்பட்டவனே. இத் தகைத் துறவுள்ளங் கொண்ட பெரியார் என் நாட்ட கத்திருப்பதே எனக்குப் பெருமையாம். அவகாச காலங் களில் வந்து தரிசனம் செய்துபோக அனுமதி கொடுத் தால் அதுவே போதுமானது. பெரும்பொறை வகித்

திருக்கும் எனக்கு ஏற்ற அறவுரை பெரியார் வாக்காற் பிறப்பது எனது மேம்பாட்டுக்கு அறிகுறியாம் அன்றோ?

முனிவர்:—அன்ப, மாற, நீ முடி சூடிய செய்தி இப்பொழுதே அறிந்தேன். இறைவன் அருள் வயத்தால் எல்லா நலமும் எய்துக; எல்லா வுயிர்க்கும் இன்பம் வளர்க்கும் இயல்பினன் ஆகுக. அரசின் சிறப்பு அறத்தில் அடங்கும். ஒறுக்கப்படுமாறு வந்து நிற்கும் குற்றவாளியும் ஒறுப்பவனாக இருக்கும் அதிகாரியும் அதற்கு வேண்டிய அறநெறி யமைத்த அரசனும் அரசர்க் கரசனாகிய அவன் முன்னிலையில் ஒரு நிகரே. எள்ளளவு தவறு நேரிடுமாயினும் அறம் என்னும் தெய்வம் அதனைக் காத்திருந்த அரசனையே அழித்துவிடும். ஆகையால் அறத்தெய்வத்தின் ஆணை கடவாது நல்வாழ்வெய்த முயல்க.

மாறன்:—முனிவரே, பாண்டிய நாட்டில் பழையதொரு பெருங்குடியாகிய நுமது குடும்பம் இவ்வாறு நும்மோடு முடிவடைகின்றதாயினும், இதுவும் அக்குடிக்கு ஒரு பெருஞ்சிறப்பே. அமைச்சரும் புலவரும் அறநெறி யறிந்த பெரியாரும் கூறும் அறவுரைகளைச் செவியேற்று அரசியல் நடத்தி யான் நமது நாட்டுக்கு நலமியற்ற முயல்வேன்; எப்பொழுதேனும் அறியாமை அயர்ச்சி முதலிய காரணங்களால் சிறிதேனும் பிறழ்வேனாயின், நும்மைப்போன்ற பெரியோர் தவத்தால் யான் அடையும் பேறு என்னைக் காத்தளிக்கும் என்றே நம்பியிருக்கின்றேன்; மதுரை நகர் செல்கின்றேன்; விடை பெற்றுக் கொள்ளுகின்றேன்.

முனிவர்:—அவ்வாறே செய்க.

இச்சம்பாஷணை முடிந்த பிறகு போர் வீரன் போல வந்த பாண்டிய மன்னன் நன்மாறன் என்பான்

தனது அரசிருக்கை நகராகிய மதுரையை நோக்கித் திரும்பினன். விரைந்து செல்லும் பரிமா ஒன்றின் மீது இவர்ந்து மெய் காவலர் இருவர் அருகிலே பின் பற்றி வர, நால்வகைக் கதிகளாலும் அதனை நடத்திக் கொண்டு போயினன்.

இடையிலே சில இடங்களிலே தங்கி இளைப்பாறி நாட்டு வளத்தையும் கண்காணித்துக்கொண்டு இரண்டு தினங்களில் மதுரை நகர் வந்து அடைந்தான்; வெளிப் படையாக வரவேற்றல்முதலிய ஆடம்பரங்கள் ஒன்றும் இல்லாது அடக்கமாக அரண்மனைக்குட் சென்றான்; தன் அந்தரங்க அறைக்குச் சென்று இளைப்பாறினன்.

பின்னர் நன்னீராடி நல்லுடை யுடுத்து நம்பனைத் தொழுது, மலர் தூவிப்பணிந்து, உண்டியயின்று வெள் ளடை பாகு தின்று, முக வாசங் கொண்டு, அறிஞர், புலவர், அமைச்சர், தண்டத்தலைவர், முதலியோர் தன்னை எதிர் பார்த்துக் காத்திருந்த ஆஸ்தான மண்டபத்தை அடைந்தான். அங்கிருந்தார் அனைவரும் அரசனைக் கண்டதும் எழுந்து, தத்தம் நிலைக்கு உரிய முறையால் வணங்கினர். மாறன், மாகதர் வாழ்த்த வந்தியர் பாடத் தனது அரியணை யடைந்து அதன்மீது ஏறி யமர்ந்தனன். சிறிது பொழுது சென்றதும் அவைக் களத்தார் அனை வரும் தத்தமக்கு ஏற்ற ஆதனங்களில் அமர்ந்தனர்.

அமைச்சர் தலைவர் எழுந்து, "மன்னர் பெரு மானே, தாங்கள் சென்றிருந்த அரும்பணி எவ்வாறு ஆயதோ வென அறிய யாம் பெரிதும் ஆவல் உடை யோம்," என்றார்.

அரசன்:— ஒரு வகையில் வெற்றியும் மற்றொரு வகையில் தோல்வியுமாயின. எவ்வாறெனில், நமது மூதாதையர் காலம் முதல் அமைச்சர் தலைவராயிருந்து

வரும் குடியிலே பிறந்த குணசாகரனார் அப்பதவியை ஏற்றுக்கொள்ளுமாறு நாம் வேண்டியும் மறுத்தார். அவர் தவச் செல்வத்தையே நாடி நின்றார். அவரது அருளும் அன்பும் நமக்குக் கிடைத்தன. அன்றியும், அவரது குல தனமாகிய பெருஞ்செல்வம் நம் நாட்டுக்குப் பொதுப்பொருளாயிற்று. அவரது பெரிய மாளிகையும் அரசாங்கத்திற் குரியதாயிற்று.

அமைச்சர்:—இவ்வாறு நேர்ந்தது கருதி மகிழ்வதோ, வருந்துவதோ என்பது தோன்றவில்லை. அறிவு விளக்கப் பெருங்கடலாகிய அமைச்சரை யிழந்தது இந் நாட்டுக்குப் பெருத்த நஷ்டமே. ஆயினும், அவரையே ஒரு பெருமுனிவராகப் பெறுவது உலகத்துக்கே பெருத்த லாபமாகும். அவரது பூரம்பரைச் செல்வம் நல்வகையில் விநியோகிக்கப்படுதல் நலம்.

அரசன்:—அதற்கும் நாம் ஒரு யோசனை செய்து முடிக்கலாம். கல்விப் பெருஞ்செல்வர் குடியாகிய குணசாகரர் குடிப்பொருள் கல்விப் பொருளை வளர்க்க வுதவுவது சிறப்பன்றோ? நமது அவைக்களப் புலவராகிய நக்கீரனார் கருத்தென்ன ?

நக்கீரர்:—அரசரேறே, புரவலர்க்குக் கருத்து எதுவோ அதுவே புலவர்க்கும் கருத்தாம். குணசாகரர் குடிப்பொருளைத் தமிழ்க்கல்வி வளர்ச்சிக்குக் கொடுப்பதோடு அவரது மாளிகையைப் பெரியதொரு தமிழ்க் கல்விச்சாலையாக்கி, நூற்றுக்கணக்கான இளஞ்சிறார்களை உண்டியும் உடையும் நல்கிக் கல்வி கற்கச் செய்தல் சிறப்பாம்.

அரசன் :—நக்கீரனார் கூறியது நல்ல யோசனையே. அப்பொருளில் ஒரு சிறிதும் அரசாங்கத்துக்கு வேண்டா. எல்லாம் அறமுறைக் கல்வி வளர்த்தற்கே ஆதல்

நலம். மாளிகையை என்செய்யலாம் என்று நாம் யோசனை செய்திருந்தபோது புலவர் கூறியது பொருத்தமாயமைந் தது. அவ்வாறே முடிவு செய்து விடுவோம்.

அமைச்சர் :—அவ்வாறே ஆகுக. இன்றே இதற்கு அமைந்த அரச விளம்பரங்களை நாடெங்கும் பரப்பு விக்க வேண்டுவன செய்கின்றேன்.

அரசன்:—இஃது இவ்வாறிருக்க. தண்டத் தலை வரே உமக்கு யாம் கொடுத்த பணி என்ன ஆயிற்று ?

தண்டத் தலைவர்:—மன்னர் மன்னரே, நம் படை நாம் எதிர் பார்த்த அளவுக்குமேல் மும்மடங்கு வளர்ந்து விட்டது. நம் நாட்டில் உள்ள ஆண் மக்களிற் பெரும்பாலார் படைப்பயிற்சி உடையராயினர். இத னால், நாட்டுக் காவற்குவேண்டுமளவு நிலைப்படையிருப்ப தோடு அயல் நாடுகள்மேற் சென்று போர் இயற்றவும் போதுமான வீரரும் படைக்கலங்களும் பரிகளும் தேர் களும் களிறுகளும் பிறவும் நம்மிடம் உள்ளன. நாளைக்கே வேண்டுமாயினும், அயல் மன்னரை அடக் கப் புறப்படலாம்.

அரசன் :—அவ்வாறாயின், சோழர் சேரர் முதலிய அரசர்களை முதற்கண் எதிர்த்துப் போராடித் தமிழ் நாடு முழுவதையும் நமது ஆட்சிக்குள் அமைப்போம். குறுநில மன்னர் இச்செய்திகளைக் கேட்டால், தாமே அடங்குவர்.

தண்டத் தலைவர்:—அவ்வாறே செய்யலாம்.

அரசன்:—அமைச்சரே, இது நுமக்கும் சம்மதந் தானே!

அமைச்சர்.—இந்நாட்டில் உள்ளார் அனைவருக்கும் சம்மதமே.

அரசன்:—புலவருக்கோ? போர் என்றால் புலவர் வெறுப்பரோ?

நக்கீரர்:—அரசே, அவ்வாறு புலவரை எண்ணலாமோ? அறநெறி வழுவிய அரசரை அறநெறி நிறுத்தவும், தம் நாட்டின் செல்வத்தை வளர்க்கவும் அரசர் போர் செய்தல் முறையேயன்றோ? இருந்ததைக் கொண்டு அமைவது அரசர்க்கு ஏற்ற குணமென அறநூல்கள் கூறவில்லையே!

அரசன்:—இவ்வாறு எல்லார்க்கும் சம்மதமாயிருப்பதால் யாம் தமிழ் நாடு முழுவதையும் நம் ஆளுகைக்குள்ளடக்கப் போர்புரியத் துணிந்தோம். அதற்கு நீவிர் அனைவீரும் இயன்ற வுதவி புரிவீராக.

நக்கீரர் :—எம்மால் இயன்ற வுதவியை இப்பொழுதே யாம் செய்கின்றோம். அரசே, ஆனேற்றை வெற்றிக் கறிகுறியாகக் கொடியெனப் பிடித்த நெருப்புப்போல் நிறம்உள்ள சடையினையுடைய விலக்கற்கரிய மழுப் படையைத் தாங்கிய நீல கண்டனும், கடலில் வளர்கின்ற வலம்புரி சங்கம்போன்ற மேனியையுடைய வலிமை மிக்க கொடிய கலப்பைப் படையும் பனைக் கொடியும் உடைய பலராமனும், கழுவிய அழகிய நீல மணி போன்ற மேனியையுடைய விண்ணில் உயர்ந்து பறக்கும் கருடக்கொடியினையுடைய வலிமை மிக்க திருமாலும், மயிற்கொடியை யெடுத்த மாறாத வெற்றியையுடைய அம்மயிலாகிய வாகனத்தையுடைய செவ்வேளாகிய முருகனும் என்ற உலகங் காக்கும் வலிமை சிறந்த நால்வருள்ளும், மாற்றலரிய சினத்தால் நீ சிவபிரானை நிகர்ப்பாய்; வலிமையால் பலராமனை நிகர்ப்பாய்; புகழால் இகழ்வாரை அடும் திருமாலை நிகர்ப்பாய்; நினைத்ததை முடிப்பதால் முருகனை நிகர்ப்பாய்; அவ்வாறு அந்நால்

வரையும் அவ்வக்குணங்களால் நீ நிகர்ப்பாய் ஆதலால், உன்னால் ஆகாததோர் அரிய செயலும் உளதோ? அதனால், இரவலராய் வருவார்க்கு அருங்கலங்களைக் குறைவின்றி ஈந்து, யவனர் நல்ல கலங்களிலே தந்த மணமிக்க தேறலைப் பொற்கலங்களிலே ஏந்தித்தினந்தோறும் பெண்டிர் கொடுப்பப் பருகி மகிழ்ச்சி மிக்கு அவ்வாறே இனிது வாழ்க. ஓங்கிய வாட்படை தாங்கிய நன்மாறனே, அகன்ற இடமுள்ள விண்ணகத்தில் பரந்த இருளை அகற்றும் சூரியன்போலவும் சந்திரன்போலவும் இவ்வுலகம் உள்ள காலம் எல்லாம் நின்று நிலைபெறுவாயாக.

அரசன்:—புலவரேறே, நும்மால் ஆகும் உதவி இவ்வளவேயோ? இக்கருத்துக்கள் செய்யுளில் அமைவது சிறப்பாய் இருக்குமே! நுமக்கும் எமக்கும் பெயர் சிறப்ப எதிர்காலத்திற் பிறர் எண்ணி யியம்ப ஏற்றவுதவியாகவும் இருக்குமே!

நக்கீரர்:—அவ்வாறே செய்யுளில் அமைத்துக் கூறுகின்றோம்; செவி சாய்ப்பாயாக:

“ ஏற்றுவலன் உயரிய எரிமருள் அவிர்சடை
மாற்றருங் கணிச்சி மணிமிடற் றோனும்
கடல்வளர் புரிவளை புரையும் மேனி
அடல்வெந் நாஞ்சிற் பனைக்கொடி யோனும்
மண்ணுறு திருமணி புரையும் மேனி
விண்ணுயர் புட்கொடி விறல்வெய் யோனும்
மணிமயி லுயரிய மாறா வென்றிப்
பிணிமுக வூர்தி யொண்செய் யோனுமென
ஞாலங் காக்குங் கால முன்பிற்
றோலா நல்லிசை நால்வ ருள்ளும்
கூற்றொத் தீயே மாற்றருஞ் சீற்றம்

வலியோத் தீயே வாலி யோனைப்
புகழொத் தீயே யிகழுந ரடுநனை
முருகொத் தீயே முன்னியது முடித்தலின்
ஆங்காங் கவரவ ரொத்தலின் யாங்கும்
அரியவும் உளவோ நினக்கே யதனால்
இரவலர்க் கருங்கலம் அருகா தீயா
யவனர், நன்கலந் தந்த தண்கமழ் தேறல்
பொன்செய் புனைகலத் தேந்தி நாளும்
ஒண்டொடி மகளிர் மடுப்ப மகிழ்சிறந்
தாங்கினி தொழுகுமதி யோங்குவாள் மாற,
அங்கண் விசும்பின் ஆரிரு ளகற்றும்
வெங்கதிர்ச் செல்வன் போலவும் குடதிசைத்
தண்கதிர் மதியம் போலவும்
நின்று நிலைஇய ருலகமோ டுடனே."*

அரசன், "உரை நடையைக் காட்டிலும் அருங் கருத்துக்களை அமைத்து அழியாது போற்றச் செய்யுள் நடையே சிறந்தது என்பது இதனால் விளங்குகின்றது. புலவரேறே, இவ்வுதவியைக் காட்டிலும் சிறந்த வுதவி வேறு என்னுளது? இங்கு நம் நாட்டிலேயே யிருந்து பரம்பரையாய்த் தமிழ்ப்பயிரை வளர்த்துவரும் நுமக்கு யாம் உபசாரம் கூறுவதும் குற்றமேயாம். இச்சிறு பொருளைப் பரிசிலாய் ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்," என்று கூறி ஆயிரம் பொன் பரிசில் உதவினன்.

பிறகு இனி ஆவனவற்றிற்கு வேண்டும் முயற்சி செய்யக் கருதிய அமைச்சரும் தண்டத் தலைவரும் பிறரும் அரசனிடம் உத்தரவுகள் பெற்றுக்கொண்டனர். அரசனும் எல்லோர்க்கும் விடை கொடுத்து, அரண் மனைக்குட் சென்றான்.

* புறநானூறு - செய்யுள், 56.

# II

சோழ மன்னனும் சேர·வரசனும், பாண்டியன் நன்மாறன் பெரும்படை திரட்டிக்கொண்டு தம்மோடு போர் செய்ய வருவதாய் அறிந்தனர். சோழன் கரிகாற் பெருவளத்தான் குடித்தோன்றல் போருக்குப் பின்னிடைவனோ? இமயவரம்பன், வானவரம்பன் முதலிய சிறப்புப் பெயர்கள் பூண்ட சேரனும் சிறுமை பெறுவனோ? இருவரும் தத்தம் படைகளைத் திரட்டினர்; தம்மிருவர்க்கும் பகையாய் வரும் பாண்டியனைத் தாமிருவரும் ஒன்று சேர்ந்தே எதிர்த்துப் போரியற்றத் துணிந்திருந்தனர். இச்செய்தியை ஒற்றர் மூலம் அறிந்த நன்மாறன், "தனித்தனி ஒவ்வோரரசரை வெல்வதைக்காட்டிலும், இருவரையும் ஒரு சேர வெல்வதே நமக்குச் சிறந்த வெற்றியும் புகழுமாம்," என்று எண்ணினன்.

பாண்டிய சேனை விரைவிலே போர்க்குப் புறப்பட்டது. படைத் தலைமை பூண்ட வீரர் பலரும் தத்தம் அணிகளை முறையே வகுத்துக்கொண்டு முன்னே நடத்திச் சென்றனர். தண்டத் தலைவர் இன்ன இன்ன இடத்தில் இன்ன இன்ன படைஞர் இவ்வண்ணம் நின்று போர்புரிய வேண்டும் என்று ஆணை பிறப்பித்துக் கொண்டு பின்னே சென்றனர். புலவர் சிலர் உடன் வர,நன்மாறனும் போர்க்கோலம் பூண்டு கூழைப்படைக்கும் இடைப்படைக்கும் இடையிலே சென்றுகொண்டிருந்தான். வழியெல்லாம் இருந்த வயல்களிலும் தோட்

டங்களிலும் பாண்டியன் படை யானைகள் வேண்டுமளவு தமக்குரிய உணவைக் கொண்டு மேற் சென்றன. வீரர் கள் வழியில் உள்ள ஊரவர் உபசரித்திடும் உணவை உட்கொண்டு செல்வா ராயினர். பாண்டிய நாட்டி லிருந்து இப்படையோடு புறப்பட்டு வந்த பண்ட சாலை வண்டிகளும் படைஞர்க்கு வேண்டுவன தந்தன. இவ் வாறு இவர்கள் சென்று சேரர் படைஞரும் சோழர் படைஞரும் இவர்களை எதிர் பார்த்திருந்த போர்க்களத் தைக் குறுகினர்கள்.

பாண்டியன் நன்மாறன் ஒரு தூதனை யழைத்து, "சேரனும் சோழனும் நம் அடியில் வந்து பணிந்து, நம் மைத் தமிழ் நாட்டுப் பேரரசன் என அங்கீகரிக்கின் றனரா என்று கேட்டு வருக," எனக் கூறி அனுப்பி னன். அவர்கள் அத்தூதனிடம், "நாங்கள் போர் என்று கேட்ட வளவில் அஞ்சிப் பதுங்கும் அடிமைக ளல்லேம்; எங்கள் முன்னோர் பெருமையைப் போற்ற வும் எங்கள் நாட்டைப் பாதுகாக்கவும் எங்களில் ஒரு வீரன் உயிரோடு இருக்கும் அளவும் போர் புரிவோம்; படைகளும் படைஞரும் உள்ளவளவும் எவர்க்கும் பணியோம். சமாதானமாகக் கருதி எம்மையும் தம் மோடு ஒப்பாக மதித்து நட்புச் செய்துகொள்ள நும் மரசர் கருதுவாராயின், எமக்குச் சம்மதமே அப்படி யன்றி, யாம் அவர்க்குக் கீழ் அடங்கித் திறையளக்கும் நிலைமையை உவப்போடு ஏற்றுக்கொள்வோம் என அவர் எண்ணியது தவறென யாம் தெரிவிக்கின்றோம்," என்றனர்.

இச்செய்தியைத் தூதன், பாண்டியன் நன்மாறனி டம் வந்து தெரிவித்தான். அவன் அது கேட்டதும்

போர் தொடங்குக என ஆணையிட்டான். போர் முழக்கம் இப்படையில் முரசு எக்காளம் முதலிய வாத்தியங்களால் எழுந்தது. கொடிகளும் யானைகள்மீது பிடிக்கப்பட்டன. வீரர் படைக் கலங்களை வீசத் தொடங்கினர். இதனை அறிந்த சேர சோழரும் தம் படைகளை ஊக்கி முன்னே செலுத்தினர். போர்க் களத்தின் நடுவிலே இரு படைகளும் கைகலந்தன. இரவுக்காலத்தில் ஓய்வு பெற்றுக் குடை கொடி முதலிய ஆடம்பரங்களை இரு திறத்தாரும் உரிய இடங்களில் நிறுத்திக்கொண்டு ஏழு நாட்கள் போர் புரிந்தனர். இரு திறத்துப் படைஞரிலும் எண்ணிறந்தார் வீர சொர்க்கம் புகுந்தனர்.

பாண்டிய நாட்டுப் படைஞர் போர் வெறி கொண்டு மேன்மேலும் பாய்த லாயினர். சேரர் படையும் சோழர் படையும் சிறிது தளர்ந்தன. அப்படைஞரின் தலைவரும் தம்மால் இயன்றவளவு அவரை ஊக்கி முன் செலுத்தினர். உடம்பெங்கும் அம்பு துளைத்து ஆயிரம் புண்களாய் இருக்கும்போது மனோ தைரியமும் ஊக்கமும் எவ்வளவிருந்தும் என் செய்யலாம்? மேன்மேலும் பாய்ந்து சென்ற சிறந்த வீரர் பலர் விழுப்புண் பட்டு மாய்ந்தனர். தம் படையில் நேர்ந்த இந்நிலையைக் கண்டு சேரனும் சோழனும் சிந்திக்க லாயினர். இவ்விருவரும் தாமே முன்னணியில் வந்து போர் புரிந்தனர். பாண்டியன் நன்மாறன் அவ்விருவரொடும் ஒருவனாய் நின்று போர் செய்தனன். ஒரு நாள் முழுவதும் போர் நிகழ்ந்தது. பாண்டியன் சிறிதும் தளர்ச்சியடையவில்லை. சேர சோழர் அம்பு துளைத்த புண்கள் பெருகச் சோர்வு அடைந்தனர்; இரவிலே பாசறை

யடைந்து, "இறைவன் திருவருள் என்ன ஆகுமோ! நாளைக்கும் முயன்று பார்ப்போம்!" என்று பேசிக் கொண்டிருந்தனர்.

இவர்கள் இவ்வாறு இருக்கையில், பாண்டியர் படையிலிருந்து ஒரு தூதன் சேர சோழர் பாசறைக்கு வந்தான். அவன் தனது அரசர் ஆணையென்று பின் வரும் செய்தியைக் கூறினன் :

"மாட்சி மிக்க மன்னர்காள், நாம் முதற்கண் அமைதியை நாடினும். நீவிர் போர்க்குத் துணிந்தீர். எத்துணைப் படை வீரர்களை இழந்தீர்! எத்துணை வீரர் குடிகளை ஆண் மக்கள் அற்றவையாய்ச் செய்தீர்! நுமது மனவுறுதியால் வந்த ஊதியம் என்ன? ஓர் ஆண் மகன் உள்ள வளவும் போராடுவோம் என்றீர்! இன்னும் அத்துணிவு உம்உள்ளத்தில் உள்ளதா? இந்த ஒரு வார காலம் போர் செய்ததால் நீவிர் அறிந்த உண்மை யென்ன? இன்னும் எத்தனை மாதங்களாயினும் யாம் போரியற்றத் துணிந்திருக்கிறோம். ஆயினும், வீணாக நும் இருவருடைய பிடிவாதத்தால் அநேக ஆயிரவுயிர்கள் அழிவது எமக்குத் திருப்தி யளிக்கவில்லை. இப்பொழுதும் நும்மிருவர்க்கும் மரியாதையான நிலைமை தருகின்றோம். இன்று எம்மை வணங்கி எமக்குக் கீழ் அடங்குவதால் உமக்கு வரும் இழிவென்னை? தமிழ்நாடு முழுமைக்கும் ஒரு பேரரசன் இருந்து அரசாள்வது பல சிற்றரசர் தனித்தனி சிறு சிறு நாடுகளை ஆள்வதைக்காட்டிலும் சிறப்பன்றோ? அயல் நாட்டவர் நம்மை எதிர்க்க வருவாராயின், நாம் ஒரு நாட்டவராய் இருப்பதை அறிய நேரிடுமன்றோ? நாம் ஓர் அரசும் ஒரு நாடுமாய் இருப்பதால் வட நாட்டிலிருக்கும் பிற அரசுகளையும் வென்று அடக்கல் எளிதாமன்றோ? நும் முன்னோர் எம் முன்னோர்க்குக் கீழே அடங்கியிருந்தவரலாறுகளும் உண்டுஎன்பது நீவிர்

அறியாததன்றே? ஆகையால், இன்னும் அதிக நஷ்டம் அடையாமல் நாட்டில் நன்கு வாழ எண்ணம் இருப்பின், இன்று இரவே சமாதானத்துக்கு வரலாம். இல்லையென்றால், நாளைக் காலையில் மறுபடியும் போர்க்கு வந்து, எது விளையுமோ அதனைப் பெறலாம். தம் பெருமையைக்காட்டிலும் நாட்டின் நன்மையைப் பெரிதாய்க் கருதி அமைதிக்கு வருவீர்கள் என்பதே எமது நோக்கமாம்."

சோழனும் சேரனும் இவையனைத்தையும் கேட்டுச் சிறிது நேரம் தனித்து யோசனை செய்து ஒரு தீர்மானத்துக்கு வந்தனர். பிறகு தூதனை முன்னே யனுப்பித் தாமும் பின்னே புறப்பட்டுப் பாண்டியன் பாசறையடைந்தனர். இவ்வாறு நேரிடும் என்பதை முன்னே எதிர்பார்த்திருந்த நன்மாறன் தனது பாசறை வாயிலில் வந்து நின்று இருவரையும் முக மலர்ச்சியோடு வரவேற்றான்; உள்ளே அழைத்துச் சென்று, அவ்விருவர்க்கும் தக்க ஆசனங்களை அளித்துத் தானும் தன் ஆசனத்தில் அமர்ந்தான். பாண்டிய நாட்டுத் தண்டத் தலைவரும் அங்கு இருந்தனர். பிறகு பின் வரும் சம்பாஷணை நிகழ்ந்தது:

பாண்டியன்:—மன்னர்காள், நும் வரவு நல்வரவாகுக. நுமது நாட்டின் நலத்தைக் கருதி எமது வேண்டுகோளைப் பொருட்படுத்தியதற்காகப் பெரிதும் உம்மைப் பாராட்டுகின்றோம்.

சோழன்:—மன்னர் பிரானே, நாட்டின் நலத்தைக் கருதுவதே நம் நாட்டம் என்பதை நான் கூற வேண்டா! மானம் படவரின் வாழாமை யினிதன்றோ? வணங்கா முடி மன்னராய் இருக்கும் வாழ்வு ஒரு

பேரரசன்கீழ் அடங்கி யிருப்பதைக்காட்டிலும் சிறந்த தன்றோ ?

பாண்டியன்:—ஒரு பேரரசன் கீழ் அடங்காவிடினும், ஒரு பேரரசனோடு சமாதான உடன்படிக்கை செய்துகொண்டு ஒருவர்க்கொருவர் வேண்டும்போது உதவத் தக்க நிலையில் சகோதர பாவம் கொண்டாடலாமன்றோ ? ஒவ்வொரு சிறு நாடும் தனித்தனி தலைமை கொள்வதாயின், அயலவர் எளிதிலே அழித்துவிடக் கூடும் அன்றோ ? தமிழ் வழங்கும் நாடு முழுவதும் அவ்வாறு அழிந்துபோகாமல் இருக்கவும் நாட்டுமக்கள் அடிக்கடி போராற் கலங்காதிருக்கவும் என்ன செய்யலாம் என்பதை நீவிர் கருத வேண்டும்.

சேரன்:—தமிழ் மன்னரே, தமிழ் வழங்கும் நாடு முழுவதும் ஒரு தலைமைக்குள் அடங்கி ஓரே முறையான் அறநெறியைக் கடைப்பிடித்து வாழ்வது நலமே. ஏன்? இப்பாரத பூமி முழுதும் ஓர் அரசுக்குள் வரக் கூடுமாயின், அதுவும் நலமே. ஆயினும், அது சுலப சாத்தியம் அன்றே! பல வகை வேறுபாடுகள் நமக்குள் உண்டே !

பாண்டியன்:—நாம் அனைவரும் அறநெறி யொன்றாக அரசியல் லொன்றாக ஓர் அரசு கொள்ளுதல் எவ்வாறு சிரமமாம் ? நம்முடைய மொழியும் குலமும் மதமும் தெய்வமும் வாழ்வும் நோக்கங்களும் எல்லாம் ஒன்றே யன்றோ ? இவ்வாறு இருக்க, நாம் நம் தமிழ் நாட்டுக்கு ஒரு தலைமையை நாட்ட வியலாது என்று கூறலாகுமா?

சோழன்:—சிறிது சிரமத்தின்மேல் நிறைவேற்றலாம். இப்பொழுது நாங்கள் இருவரும் நமது படை

யோடு எம் படையைச் சேர்த்து நட்பாளர் ஆய்விடுகின்றோம். நாம் மூவரும் ஒன்றாய்விட்டோம் என்று அறிந்தாற் பிற குறுநில மன்னர் தாமே வந்து வணங்கிவிடுவார். வேறு போரியற்ற வேண்டும் அவசியமும் இராது. தமிழ் நாடு முழுமைக்கும் தலைவராகியிருக்கும் பெருமை எம்மிருவரையும் ஒருவராய் நின்று எதிர்த்து வணங்க வைத்த உமக்கே ஏற்றதாம்.

சேரன்:—எனக்கும் அது சம்மதமே. அதற்கு அடையாளமாக எம் நாட்டுக்குரிய விற் கொடியைக் கயற்கொடியோடு சேர்க்க அனுமதி யளிக்கின்றேன்.

சோழன்:—எனது சம்மதத்தையும் புலிக்கொடியை அதனோடு சேர்ப்பதால் நாடறிய வெளியிடுகின்றேன்.

பாண்டியன்:—இனித் தமிழ் நாடெங்கும் நலம் பெருக நாம் மூவரும் ஒரே மனத்தோடு அற நெறி கடைப்பிடித்து அரசாள வேண்டும் என்பதே எமது நோக்கம். குறுநில மன்னர் விரைவிலே வந்து பணிவர். அவரைப்பற்றி நாம் அதிகம் கவனிக்க வேண்டா. சந்தர்ப்பம் நேரிடும்போது வட நாட்டவரோடு போர் புரிந்து வெற்றி பெற நாம் அனைவரும் சித்தமாய் இருக்க வேண்டும். நீவிர் இருவீரும் இனி விடை பெறலாம்.

சேரனும் சோழனும் உரிய மரியாதைகளைப் பெற்றுத் தம் பாசறை யடைந்து அன்றோடு போர் முடிந்து சமாதானம் நிலை பெற்றதாக விளம்பரம் செய்வித்தனர். படைஞர் எல்லாம் முழுச்செய்தியையும் அறிந்து தாம் பெரிய தேர்ப் படையிலே உறுப்பின ரானதைப்பற்றி

மகிழ்ச்சி மிகப் பெற்று, அன்று இரவைக் கவலையற்ற உறக்கத்திலே கழித்து மறுநாட் காலையில் தத்தம் ஊர்க்குத் திரும்பினர். மன்னர் இருவரும் பரிவாரங்களோடு தத்தம் அரசிருக்கைகட்குப் புறப்பட்டனர். பாண்டிய மன்னனும் படையோடு பாண்டிய நாடு சென்றான். போர்க்களத்திற்கு அரசனோடு வந்திருந்த பலரும் மதுரைக்குத் திரும்பினர்; இரண்டு தினங்களில் மதுரையை யடைந்தனர். நாட்டு மக்களுட் பெருமை மிக்க அறிவுடையோர் பல்லோர் வெற்றி பெற்றுத் திரும்பி வரும் தம் மன்னனை வரவேற்று உபசரித்தனர்; வீதிகளிலெல்லாம் தோரணங்களும் கொடிகளும் கட்டிப் பாண்டியன் நன்மாறனை வரவேற்றனர். பாண்டிய மன்னன் தண்டத் தலைவரோடும் புலவர் பெருமக்களோடும் அமைச்சரோடும் அரண்மனையடைந்து ஆத்தான மண்டபத்தில் அரியணைமீது அமர்ந்தான். அங்கு வந்தடைந்த அனைவரும் தத்தமக்குத் தகுந்த ஆதனங்களில் அமர்ந்த பிறகு, அமைச்சர் தலைவர் எழுந்து பின் வருமாறு பேசினர்:

“ அரசர் தலைவரே, அறிஞர்களே, இன்று நம் நாட்டின் சரித்திரத்தில் ஒரு சிறந்த நாள் ஆகும். சில தினங்களின் முன் நாம் இங்கே ஆலோசனை செய்த விஷயம் நன்கு நிறைவேறியுள்ளது. நமது அரச பரம்பரையினர், பூர்வத்தில் இப்பாரத பூமி முழுவதையும் அடக்கி யாண்டு, ஏக சக்ராதிபத்தியம் நடாத்தியதுண்டு சில காலம் நம் அரசரின் ஆதிக்கம் குறைந்திருந்தது. பண்டைய வரலாறுகளை யறிந்த எமக்கு அது பெரிதும் வருத்தம் தருவதாயிருந்தது. அவ்வருத்தத்தைத் தவிர்க்கப் பிரகிருதத்தில் நம் அரசராய் இருக்கும் வழுதியர்

குலத் தோன்றல் வேண்டுவன செய்யத் தொடங்கி யிருக்கின்ருர். மும்மண்டலங்களாகிய தமிழ் நாடு முழுமைக்கும் தலைவராய் முக்கொடியும் ஒன்ருக்க வல்ல வேந்தராய் நம் அரசரை நாம் பெற்றது நம்மனேர் பாக்கியமே. இப்பொழுது நடந்து முடிவு பெற்ற போரின் பயனுக நமது கயற்கொடி, விற்கொடியையும் புலிக்கொடியையும் தன்னுள் அடக்க வல்லதாயிற்று. இவ்வாறே இனி நாடு முழுவதும் சென்று, இமய மலையில் நமது நாட்டுக் கயல் பொறிக்கப்படுமாறு இறைவன் திருவருள் பொழிக.''

உடனே மங்கள வாத்தியங்கள் பல முழங்கின. அங்கு வந்து நிறைந்திருந்த அறிஞரெல்லாம் புலவர் குழுவை நோக்கினர். வாத்திய முழக்கம் நின்றதும், மதுரை மருதன் இளநாகனுர் என்ற புலவர் எழுந்து பேசியதன் சுருக்கம் வருமாறு:

"மகா மேரு மலையாகிய வில்லிலே வாசுகியாகிய நாணைக் கோத்து, ஒப்பற்றதோ ரம்பைச் செலுத்தி, மூன்றுமதில்களையும் எய்து, மிக்க வலிமையுடைய தேவர்க்கு வெற்றி தேடிக் கொடுத்த கறைமிடற்றண்ணலது அழகிய நெற்றியில் விளங்கும் ஒரு கண் போலச் சேர சோழரைக்காட்டிலும் மேம்பட்டு விளங்கும் நன்மாற, மிக்க சினமுடைய போர்க்களிறுகளும், விரைந்துசெல்லும் குதிரைகளும், நெடுங்கொடிகளைக் கட்டிய பெரிய தேர்களும், உரம் மிகுந்த போர் விருப்பங் கொண்ட வீரரும் என்ற இந்நாற்படையால் சிறப்புற்றதாயினும், அரசினது வெற்றி அறநெறியை முக்கிய காரணமாய் உடையதாம். ஆகையால், இவர் நமர் என எண்ணி அவர் செய்த குற்றத்துக் கேற்ற தண்டம் விதியாமலும், இவர் பிறர் என எண்ணி அவரிடம் உள்ள குணத்தை மறந்து அநீதி இயற்ருமலும், சூரியன் போன்ற வெந்திறல் ஆண்மையும் சந்திரன் போன்ற

குளிர்ந்த பெருங்குணமும் மேகம்போன்ற வண்மையும் என்ற மூன்று குணங்களையும் உடையவனாக இல்லாதவர் இல்லையாம்படி. நெடுந்தகாய், ஆழ் நீர்க்கடலின்கண் வெண்மை நுரைத் தலையுடைய அலைகள் மோதும் திருச்செந்தில் நகரின் முருக வேள் திருக்கோயிற் றுறையில் பெருங்காற்றுற் றிரண்டு குவிந்த அநேகம் வடுக்களையுடைய மணல் மேட்டிலுள்ள மணலைக்காட்டிலும் பல காலம் வாழ்வாயாக.

"அரசே, சிவபிரானுக்குள்ள மூன்று கண்களில், மேம்பட்டது சிறந்தது என்ற கருத்தாலன்றே சந்திரன் சூரியன் என்ற மற்ற இரண்டும் இடக்கண் வலக்கண்ணாய்க் கீழிருக்கக் கனற்கண் நெற்றியில் நிலைபெற்றது. அதுபோல, சேர சோழர் வணங்கத் தக்க மேம்பாடு பெற்ற நீ, உலகம் தொழத் தக்க பெருமை பெற்றனை யன்றோ? படைப் பெருக்காற் பிறரை வென்று உயர்நிலை யடைந்தனையாயினும், அயல் நாட்டவரையும் நினது ஆளுகைக்குள் அடக்கியிருக்கும் இக்காலத்தில், நமர் பிறர் என்று அறநெறிக்கு மாறாக ஆதரிப்பதும் ஒறுப்பதும் செய்வாயாயின், அரசினும் பெரிதாகிய அறத்தெய்வம் நினக்குப்பகையாம். ஆகையால் அறநெறியைக் கடைப்பிடித்து நாற்படை வலியைக்காட்டிலும் அதுவே அரசுக்குச் சிறந்த வலியெனக் கருதி நின்கீழ் வாழும் எவரும் நின்னைத் தாயும் தந்தையும் என மதிக்கத் தக்கவாறு அரசியற்றுவாயாக. அரசற்கு ஆண்மை எவ்வளவு சிறந்ததோ, அவ்வளவிற் சிறிதும் குறையாது கருணையும் வண்மையும் வேண்டப்படுவனவே. ஆகையால், யாம் நின்னை எல்லா நற்குணங்களும் நிரம்பி நாடனைத்துக்கும நலம் புரிந்து வாழ்கவென வாழ்த்தினம்."

நக்கீரர்:—ஐய, அன்பரே, இவ்வாழ்த்தைச் செய்யுளாய்ச் செய்திடின், தேயம் எங்கெங்கும் உள்ள அரசர்க்கும் ஓர் அறவுரையாய் அறிவுரையுமாய் இலங்குமே!

மருதனிள நாகனுர்:—அவ்வாறே செய்கின்ருேம்:

“ ஓங்குமலைப் பெருவிற் பாம்புஞாண் கொளீஇ
ஒருகணை கொண்டு மூவெயில் உடற்றிப்
பெருவிறல் அமரர்க்கு வென்றி தந்த
கறைமிடற் றண்ணல் காமர் சென்னிப்
பிறைநுதல் விளங்கும் ஒருகண் போல
வேந்துமேம் பட்ட பூந்தார் மாற,
கடுஞ்சினத்த கொல்களிறும்
கதழ்பரிய கலிமாவும்
நெடுங்கொடிய நிமிர்தேரும்
நெஞ்சுடைய புகல்மறவருமென
நான்குடன் மாண்ட தாயினு மாண்ட
அறநெறி முதற்றே யரசின் கொற்றம்;
அதனல், நமரெனக் கோல்கோடாது
பிறரெனக் குணங்கொல்லாது
ஞாயிற் றன்ன வெந்திறல் ஆண்மையும்
திங்கள் அன்ன தண்பெருஞ் சாயலும்
வானத் தன்ன வண்மையும் மூன்றும்
உடையை யாகி இல்லோர் கையற
நீ,நீடு வாழிய நெடுந்தகை தாழ்நீர்
வெண்டலைப் புணரி யலைக்கும் செந்தில்
நெடுவேள் நிலைஇய காமர் வியன்றுறைக்
கடுவளி தொகுப்ப வீண்டிய
வடுவாழ் எக்கர் மணலினும் பலவே.” *

* புறநானூறு - செய்யுள், 55.

இச்செய்யுளை அவர் பாடக்கேட்ட அரசன், அவர்க்குத் தக்கவாறு உபசரித்துப் பரிசில் அளித்தனன். வந்திருந்தோர்க்கெல்லாம், அவரவர்க்கு ஏற்ற மரியாதைகள் நடந்தன. பிறகு அரசனிடம் அனைவரும் விடை பெற்றுக்கொண்டு எழுந்தனர். அரசனும் அரண்மனைக்குட் சென்றனன். அமைச்சரும் தண்டத் தலைவரும் பிற அதிகாரிகளும் தத்தம் காரிய நிலயங்கட்கு ஏகினர். புலவர்கள் சங்கத்துக்குப் போயினார்கள். மங்கள வாத்திய முழக்கத்தோடு அன்று சபை கலைந்தது.

# III

போர் என்பது இருவகையாம். அவற்றை அறப்போர் மறப் போர் என்பர். பாண்டியன் நன்மாறன் செய்த போர் எவ்வகையைச் சேர்ந்தது என்பது ஆராய்ச்சிக் குரியது. அவன் தன் நாடு கல்வி செல்வங்களாற் பெருகவும், நில வளமும் புனல் வளமும் பெற்றோங்கவும் வேண்டுவன செய்யக் கடமைப்பட்டவனே. ஆயின், அதன்பொருட்டு அயலரசர்களோடு போர் இயற்றி, அவர்கள் தலைமையைக் குறைக்க வேண்டும் என்ற அவசியம் என்ன? எவரேயாயினும், அவரவர் தத்தம் உரிமைகளைப் போற்றி அமைதியோடு வாழ்க என்று விட்டுவிடுவதன்றோ அறமாவது என்று கேட்க இடம் உண்டு. சேர சோழரோடு நடந்த சம்பாஷணையில் இக் கேள்விகளுக்கு ஒருவாறு விடை கூறப்பட்டுள்ளதாயினும், இங்கும் இரண்டொரு சமாதானங்கள் கூறப் படும்:

பாரத பூமி பெரியதொரு கண்டம். அதில் உள்ள பேரரசுகளே ஐம்பத்தாறு என்பர். அவற்றுள் அடங்கிய சிற்றரசுகள் நூற்றுக் கணக்காக இருக்கும். வேளிரும் பிற குறுநில மன்னரும் இத்துணையர் என எண்ணல் எளிதன்று. ஒவ்வோரரசும் தனித்தனி தலைமை பூண்பது அவ்வவ்வரசுக்குப் பெருமையை விளக்குமேயாயினும், அவை ஒன்றோடொன்று போர்

இயற்றுமை அயலவர் போரெதிர்ந்தால் ஒன்று சேர்ந்து தாங்குதல் முதலிய உடன்படிக்கைகள் செய்துகொண் டிருந்தாலன்றி இத்துணை யரசுகள் இருப்பதால் விளையும் நன்மையைக்காட்டிலும் தீமை அதிகம் அன்றோ? பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி பாரத பூமி முழுவதையும் ஒரு குடைக்கீழ் ஆண்டதால், நாடெங்கும் ஒரு மொழி தலையெடுத்தோங்கவும் அற நெறி ஒரு படித்தாய் எங்கும் ஆணை நடத்தவும் செய்து அரசியற்றினன். அவ்வாறு இல்லாத பிற பாண்டியர், தாம் இருந்த இடமும் பெயரும் பிறர் அறியா வண்ணம் மறைந்தனர். இவ்வுண்மையை யுணர்ந்த நன்மாறன் போராற் பிறரைத் தனக்குக் கீழ் அடக்கி நாடெங்கும் ஒரு குடையும் ஒரு கொடியும் ஓர் அரசும் ஆக்கத் துணிந்தது பொருத்தமேயன்றோ?

மும்மலையும் முந்நதியும் முப்பதியும் முக்கொடியும் மூவரசும் கொண்ட மூன்று நாடுகட்கும் நன்மாறனே தலைவனாயினன். எஞ்சியிருந்த சில தமிழ வரசரோடு போரியற்றத்துணிந்து தண்டத்தலைவர் ஆணைக்கடங்கும் பெரும்படை யொன்றை அனுப்பினன். அப்படை தமிழ் வழங்கும் நாடுகளில் தனித் தலைமை கொண்ட ஒவ்வொரு சிறு நாட்டையும் தாக்கிப் போர் செய்து சென்ற விடமெல்லாம்சிறப்பும் வெற்றியும் பெற்று, நாடு நோக்கி வந்தது. இவ்வாறு போர் செய்து அடக்கப்பட்ட நாடுகளில் உள்ள பல புலவரும் தத்தம் நாடுகளில் தாம் தாம் காண நேரிட்ட போர்த் திறங்களைப்பற்றிப் புனைந்து பாடுவாராயினர். அவர் தம்மை யாதரித்த சிறு சிறு தலைவர்க்கு நேர்ந்த நஷ்டத்தைக் கண்டு பெரிதும்

மனமுளைந்தனராயினும், தமக்கெலாம் பெருந்தலைவனாகத் தமிழ் மன்னனாகப் பேரரசன் ஒருவன் அமைந்ததைக் கண்டு மகிழ்ந்தனர். அவ்வண்ணம் மகிழ்ந்த புலவர்களுள் ஒருவர் காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக் கண்ணனார் என்பவர். அவர் பாண்டிய நாடு நோக்கி வெற்றியோடு திரும்பி வரும் படைகளோடு தாமும் நன்மாறனைக் காண வந்தனர்.

போர்ச் செய்தி இவ்வாறு நன்று நிறைவேறியது கேட்ட பாண்டியன், வேறொன்றிலும் நினைப்பிலனாய், மேலும் மேலும் போரியற்றி அயல் நாடுகளையும் வெல்ல இயலுமோ என்று ஆராயும் கருத்தினனாய், அரசவையில் அமர்ந்திருந்தான். அமைச்சரும் தண்டத் தலைவரும் அரசன் கருத்துக்கு மாறுபடா நிலையில் ஆலோசனை கூறிக்கொண்டிருந்தனர். அரசன் இந்நிலையில் இருக்கையிற் காரிக்கண்ணனார் அரண்மனை வாயிலுக்கு வந்து, தமது வருகையை யவனர் மூலம் தெரிவித்தனர். புலவர்களைஎக்காலத்தும் வரவேற்கும் இயல்புடையனாய் இருந்தானாகையால், மன்னன் அவர்க்கு அங்குவர ஆணையனுப்பினன். பல திறப்பட்ட வாயில்களிலும் உள்ள காவல்களைக் கடந்து, அரசன் அமைச்சரோடு இருந்த ஆலோசனை மண்டபத்தை அடைந்தனர் புலவர். சோணாட்டுப் புலவராகையால், சோழனையே மனமார வாழ்த்தும் இயல்பு உள்ளவராய் இருத்தல் பொருத்தமே யாயினும், தமிழ் நாடு முழுமைக்கும் தலைமை பூண்ட தமிழ் மன்னனிடம் தம் அன்புரிமையைத் தெரிவிக்கச் சந்தர்ப்பம் அதுவே எனக் குறித்து, அவர் அங்கு வந்தார். அரசன் அவரைக் கண்ட

தும், உவப்போடு வரவேற்று, நக்கீரனாரையும் மருதனிள நாகனாரையும், பிற புலவர்களையும் அழைத்து வருமாறு ஆட்களை யனுப்பினன். அவர்களும் சமீபத்திலேயே யிருந்தன ராகையால், விரைவிலே அங்கு வந்தடைந்தனர். மந்திராலோசனை மண்டபமே புலவர் அவைக் களமாக மாறியது. அங்குப் பின் வருமாறு சம்பாஷணை நிகழ்ந்தது:

நன்மாறன்:—புலவரேறே, வருக! வருக!! நும் வரவு நல்வரவு ஆகுக! நமது படைஞர்கள் அயல் நாடுகளை வென்று புகழ் பெற்று வந்துள செய்தியைக் கேட்ட இவ்வமயமயத்திலே நும்மைக்காண நேரிட்டது நமது பாக்கியமென்றே எண்ணுகின்றோம்.

காரிக்கண்ணனார்:— இவ்வமயத்தில் நின்னைக் காண நேர்ந்தது எமக்கும் பெரும்பேறேயாம். தமிழ் நாடெங்கும் கயற்கொடி பறக்க வைத்த நின்னைக்கண்டு பாட வாய்த்த இந்நாளே எம் வாழ்வில் நன்னாள்.

நக்கீரனார்:—புரவலரே, புலவரே, இவ்வரும்பேரமயத்துக் கேற்பப் புலவர் புரவலரைப் போற்றுவது பொருத்தமே யன்றோ?

மருதனிள நாகனார்:—சோழ நாட்டுப் புலவர் இவ்வாறு பாண்டியர் வெற்றியினைப் பாராட்டுவாராயின், இவ்வமயத்துக்கு மிகவும் பொருத்தமாம்.

காரிக் கண்ணனார்:—எம் நாட்டின் தனித் தலைமையை இழந்தேம் ஆயினும், எமக்குத் தமிழ் மன்னன் தலைமை கிடைத்தது. வழுதியர் பிரானே, அளக்கலாகா அருங்குணம் அமைந்த திருமாலைப்போல நீயும் எம்போற் புலவ ராவார்க்கு இனியனாயும், அடைதற்

கெளியனும், நின்பகைவர்க்கு வலியனும்அரியனும் இருக்கின்றாய். நினது புகழை அளந்து பாட வல்லுநர் சிலர் உளரேல், அவர் வாக்களவில் நின் புகழ் அடங்கு வதோ? பாட அறியாராயினும், அவர் அன்போடு அமைத்த பாடலின் அளவில் நின் புகழ் அடங்கு வதும் உண்டே! நின்னிடம் யாம் கூறுவது ஒன்று உண்டு. நின் படைஞர் பிறர் நாடு கவர்ந்த பெருமை யால் மகிழ்ந்திருக்கும் இவ்வமயத்தில் அது கேட் டற்குரிதாம்! பாண்டிய நாட்டு மறவர்கள் அயல் நாடுகளை வென்று அடக்கும்போது, அப்பகைவர் நாடு களில் உள்ள சாய் கதிர்க் கழனிகளைக் கவர்கின்றனர்; பெரிய ஊர்களிலே தீயிடுகின்றனர். மின்னொளியுடைய நின்னுடைய வேற்படை பகைவரை அழிக்கும். இவ்வா றெல்லாம் நிகழினும் நிகழ்க. ஆயினும் அவ்வந்நாடுகளிற் புறத்துள்ள காவற் காடுகளில் நின்று நிலைத்த கடி மரங் களை வெட்டும் வழக்கத்தை நிறுத்தி விடுமாறு ஆணை யிட வேண்டுகிறோம். ஏனெனில், நினது போர்க் களிறு கள் தம்மைக் கட்டி வைத்த கட்டுத் தறிகளுள் அடங்கி நில்லாது அவற்றை முறித்துவிடு மாகையால், அவ்வாறு முறித்துக்கொண்டோடும் களிறுகளைக் கட்டி வைக்க மேற் குறித்த கடி மரங்கள் உதவு மன்றோ?

நக்கீரனார்:—புலவரேறே, நீவிர் கூறுவதைக் கவனித் தால் நம் நாட்டுப் படைஞர் அயல் நாடுகளிலே நெல் விளை கழனிகளைப் பாழ்படுத்தி ஊர்களிலே தீயிட்டு அழித்துப் பகைவரை வென்று வந்துள்ளார் என்றும், அநேக இடங்களிற் காவற் காடுகளில் உள்ள கடி மரங் களையும் வெட்டியிருக்கிறார்கள் என்றும் அறிய நேரிடு கிறது.

மருதனிள நாகனார்:—அந்நாடுகளுக்கு இனிமேற் கடி மரங்கள் வேண்டுவதில்லை. நம் அரசர் தலைமையின் கீழ் அடங்கியுள்ள நாட்டை எதிர்க்கப் பகைஞர் இருக்க வியலாதாகையால், பகைவர் வருகையை அறிதற் பொருட்டு உதவுவதாகிய கடிமரம் இனிவேண்டியிராதன்றோ? நம் அரசர் ஆணை செல்லும் இடங்களில் அவர் ஆணையே அறந் துணையாகக் காவல் செய்யும் ஆகையால், காவல் மரமாகிய கடி மரம் வேண்டுவதில்லை.

காரிக் கண்ணனார்:—ஆயினும், நாம் அமைத்த கருத்தையும் சிறிது கவனிக்க வேண்டுகிறோம். இவர்கள் கடி மரத்தைத் தடிவராயின், தமிழ் நாட்டரசின் படையில் உள்ள களிறுகள் கட்டுத் தறியின்றிக் காட்டில் ஓடிவிட நேரிடும் அன்றோ?

நன்மாறன்:—சோழ நாட்டுப் புலவராகிய நீவிர் கூறிய கருத்தும் நம் நாட்டுப் படைக்குப் பெருமையே விளக்கின்றது. ஆகையால், நம் படைஞர் பெருமை எதிர் காலத்தும் அறியலாம்படி தாம் கூறிய பொருள் அமையத் தக்கது என எண்ணுகிறோம்.

நக்கீரனார்:—அன்பரே, நம்மனோர் பெருமை எதிர் காலத்து வழங்க வேண்டுமாயின், இத்தகைய கருத்துக்கள் செய்யுள் உருவம் பெறலே சிறப்பாம். நீவிர் இங்குப் பேசிய பேச்சைப் பிற்காலத்தார் வேறு எவ்வழியால் அறிய வியலும்?

மருதனிள நாகனார்:—புலவர் பேசியதே செய்யுள் போல இருந்தது. செய்யுள் என்பது, உள்ளக் கருத்தை ஒளியாது உலகிற்கு உணர்த்துவதற்கு உள்ள ஒரு வழிதானே!

காரிக் கண்ணனர் :—நீவிர் எல்லீரும் கருதுமாறு செய்துவிடுகின்றேம். அரசரேறே, இச்செய்யுளை யேற்றுக் கொள்க:

"வல்லா ராயினும் வல்லுந ராயினும்
புகழ்த லுற்ரோர்க்கு மாயோ னன்ன
வுரைசால் சிறப்பிற் புகழ்சால் மாற,
நின்னொன்று கூறுவ துடையேன் என்னெனில்
நீயே, பிறர்நாடு கோள்ளுங் காலை யவர்நாட்
டிறங்குகதிர்க் கழனிநின் னிளையருங் கவர்க
நனந்தலைப் பேரூர் எரியும் நக்க
மின்னுநிமிர்ந் தன்னநின் னொளிறிலங்கு நெடுவேல்
ஒன்னார்ச் செகுப்பினுஞ் செகுக்க வென்னதூஉங்
கடிமரந் தடித லோம்புநின்
நெடுநல் யானைக்குக் கந்தாற் றாவே." *

நக்கீரனர்:—நாம் கூறிய கருத்துக்களை ஒருவாறு ஏற்றுக்கொண்டு மறுத்தது போலச் செய்யுள் அமைந்திருக்கிறது.

நன்மாறன்:—புலவரேறே, நும் கருத்து நன்கு அமைந்துளது. இச்சிறிய பொருளைப் பரிசிலாகப் பெறுக.

காரிக் கண்ணனர்:—அன்போடு புலவர்க்கு உதவும் அருங்குணத்துப் பெருந்தகைமை வாய்ந்த அரசாகையால், நீ தருவது எவ்வளவிற்றேயாயினும், நமக்கு உவப்பே விளக்கும். இனி யாம் விடை பெற்றுக் கொள்கிறோம்.

* புறநானூறு - செய்யுள், 57.

நன்மாறன்:—அவ்வாறே போய் வருக. நீவிர் இருக்கும் நாட்டில் தமிழ்ப் பயிரை வளர்க்கும் திருப் பணி நுமதேயாம்.

நக்கீரனார்:—

'உவப்பத் தலைக்கூடி யுள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்.'

என்பர் பெரியோர்.

மருதனிள நாகனார்:—

'தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்.'

என்பதும் பெரியோர் திருவாய் மொழியே.

நன்மாறன்:—அமைச்சர்காள், பெரும்புலவர்காள், தண்டத் தலைவீர், நாமோ அயல் நாடுகளோடு போர் தொடங்கிஒவ்வொரு நாடாக நம் ஆளுகைக்குள் அடக் கத் தொடங்கி விட்டோம். இதனால், எத்துணையோர் களின் மனக் கலக்கத்தை விளைப்போமோ! எத்துணை யோரது மன மாறுபாட்டைத் தேடிக் கொள்வோமோ? எது விளையினும் விளைக. நம்மால் இயன்ற வளவுக்கும் ஆளுகைக் கடங்கிய நாட்டுள் வாழ்வார் யாவரேயாயி னும், அவர்க்கு நன்மை புரியவே எண்ணினேம். இனி யும் மேலும் மேலும் போர் புரியவே நேரிடுமாகையால், சமாதான காலத்தில் நடைபெறக் கூடிய சில காரியங் களை இனி நாம் கவனிக்க வியலாது. சங்கத்தையும் சங்கப் புலவரையும் நாம் தக்கவாறு ஆதரிக்கின்றோம் என்ற எண்ணம் நமக்கும் இல்லை; புலவர்க்கும் இல்லை. நம்மைத் தேடி எவரேனும் புலவர் வந்தால், வந்த அவ சரத்தில் ஏதாவது மரியாதை செய்து அனுப்பு

கின்றோமே யல்லாமல், நூற்றுக் கணக்கான புலவர்களைக் கூட்டி நூல் இயற்றவும் உரை செய்யவும் நூலாராய்ச்சி செய்யவும் உதவி செய்யக்கூடிய நிலையில் நாம் இப்போது இல்லை. நமது குலத்தினரில் முன்னிருந்தோரிற் சிலர் செய்யுள் செய்யும் திறமும் வாய்ந்தவராயிருந்தனர் என்று கேள்வியுற்றிருக்கிறோம். நம் வழி வருவோரும் அவ்வாறு பலர் இருக்கக் கூடும். ஆயினும் நாம் சதா காலமும் போரிலும், நாட்டின் எல்லையை வளர்த்தலிலும், இவ்விரண்டுக்கும் வேண்டிய முயற்சிகளிலும் ஈடுபட்டிருத்தலால்தமிழ்த் தெய்வத் திருப்பணி இயற்றுதற்குச் சிறிதளவேனும் அவகாசம் பெறாதிருக்கின்றோம். இனி இவ்வளவோடு நமக்கு வயதேற வேற நமது குண வேறுபாடு முதலியவற்றால் வேறே சில தோற்றங்களும் உண்டாகலாம். அரசியற் கருமங்களில் ஈடுபடுவர்க்குப் பொழுது போக்கு என்பது வேறு வழியிலில்லை. நாமும் அரசியற் பொறையை யேற்றுக்கொண்டு பல ஆண்டுகள் ஆயின. இறைவன் திருவருளால் இனியும் நம் எண்ணம் நிறைவேறவே முயல்வோமாக.

அமைச்சர்:—அரசர் பெருமானே, இப்பொழுது தொடங்கிய முயற்சி யன்றே இது! நீவிர் அரசுரிமை யேற்றுக்கொண்ட அன்றே தொடங்கிய தன்றோ? இஃது இவ்வாறே மேன்மேலும் வளர்ந்து நம் நாட்டின் புகழைப் பாரத பூமி முழுவதும் பரப்பச் செய்யும் காலம் வரும் வரையில் நாம் முயல வேண்டும்.

தண்டத் தலைவர்:—பெருமை மிக்க பேராசே, நம் முன்னோர் காலத்திலே நிகழ்ந்ததுபோல நாமும் இம

யத்திற் கயல் பொறித்த பிறகே இம்முயற்சியை நிறை வேற்றிவிட்டதாய் எண்ணக் கூடும். அதுவரையில் முன் வைத்த காலைப் பின் வைக்க லாகாது.

நக்கீரர்:—அரசே, இவ்வாறெல்லாம் சிந்திப்ப தால் இனி வரும் புலவர்கள் பரிசில் பெறாது திரும்ப நேரிடுமோ என்று நாங்கள் சந்தேகிக்கின்றோம்.

மருதனிள நாகனார்:—நாமும் அவ்வாறே எண்ணுகி ரேம். ஏனெனில், எல்லார் உள்ளமும் போர்க்குத் திரும்பிவிடின், இயற்புலவரை ஏன் என்று திரும்பிப் பார்க்க எவருக்கும் அவகாசம் இராதன்றோ? அர சர்க்கு அவகாசம் இராதபோது வாயில் காவலர் புலவர் உள்ளே வர எளிதில் விடார்.

நன்மாறன்:— அவ்வாறெல்லாம் ஆகாதிருக்கவே இறைவனை யான் வேண்டுகின்றேன். எல்லாம் இறை வன் செயல். இனி இச்சபை கலையலாம்.

## IV

அறிவிற் சிறந்த அமைச்சரும், தண்டத்தலைவரும், மாசனத்தாரும் பிறரும் அவ்வவ்வமயங்களிற் கூறும் அறைவுரைகளைச் செவியேற்று அரசு புரிந்து வந்த பாண்டியன் நன்மாறன், நல்லோர்க்கு நாயகனாய், அல்லோர்க்கு அற மகனாய் அநேக ஆண்டுகள் தமிழ்நாட்டுக்குத் தலைமை பூண்டிருந்தான்; ஆண்டில் மூத்தானாயினும், அறிவிலும் ஆண்மையிலும் சிறிதும் தளர்ச்சி யெய்தினானில்லை. போர் என்றால் விரைந்து முன் சென்று ஆவன செய்யும் தன்மை இளமைப் பருவத்தில் இருந்தது போலவே இப்பொழுதும் இருந்தது. வயதேறவேற ஒரு மாறுபாடு விளங்கலாயிற்று: புலவருடன் பயிலும் பழக்கம் அதிகமாயிருந்தது மாறிச் சிறிது சிறிதாய்க் குறைந்துகொண்டே வந்து, இக்காலத்தில் அநேகமாய் இல்லையென்று சொல்லும் நிலைக்கே வந்துவிட்டது. எப்பொழுதும் தூதரோடும் அமைச்சரோடும் தண்டத்தலைவரோடும் இருந்து மந்திராலோசனை செய்வதே பொழுது போக்காயிற்று. இடையிடையே அவகாசம் கிடைத்தால், அயல் நாடுகளிலிருந்தும் உள்நாட்டிலிருந்தும் வரும் ஒற்றர்கள் கொணரும் செய்தியைக் கேட்டு, அவர்கட்கு வேண்டும் ஆணை பிறப்பித்து, அவரவர்க்கு அமைந்த இடங்கட்கும் வினைகட்கும் அனுப்புவதில் அச்சிறு பொழுதும் கழிவதாயிற்று. இந்நிலையில் வாழ

நேர்ந்த நன்மாறன், மதுரையிற் பரம்பரைக் கணக்கா யராய்த் தமிழ்ப் பயிரை வளர்த்து வந்த நக்கீரனுரையும் மதுரை மருதனிள நாகனுரையும் பிறபுலவரையும் பார்த்துப் பேசியே அநேக மாதங்கள் ஆய்விட்டன. இவன் இந்நிலையில் இப்பொழுதிருக்கும் உண்மையை அறியாத சோணாட்டுப்புலவர் சிலரும் சேரநாட்டுப் புலவர் சிலரும் இவனைக் கண்டு பரிசில் பெறக் கருதிப் பாண்டிய நாட்டுக்கு வந்து, தாம் எதிர் பார்த்த பயன் பெறாது மனஞ் சோர்ந்து மீண்டனர்.

சோணாட்டுப்புலவருள்ளே ஆவூர் மூலங்கிழார் என்பவர் மிகச் சிறந்த இயற்றமிழ்ப் புலவர்; அரும்பெருங் கருத்துக்களை அழகுறத் தெரிவிக்கும் செய்யுள் இயற்ற வல்ல சீரியர்; வறுமையினைத் தமக்கு அணியெனத்தாங்கிய புலவருட் பெரியார்; குமண வள்ளலது உண்மைப் பெருமையை உலகறியச் செய்த பெருந்தலைச் சாத்தனார்க்குத் தந்தையார். இத்தகைய பெரியாரது புகழ் நாடெங்கும் பரந்திருந்தது. தமை நன்கு ஆதரித்திருந்த சோணாடு நீங்கிப் பாண்டிய நாட்டின் கொடைக் குணத்தளவை அளந்தறிய வந்தார் போல மதுரை நகர் நோக்கி வந்தார். மதுரை நகர்ப் புலவரெல்லாம் அவரைக் கண்டு மிகவும் போற்றிப் பாராட்டினர். அரசரது ஆதரவைப் பெற்றாலன்றிப் புலவர்க்குப் பெருமையில்லையாகையால், பாண்டியன் நன்மாறனைக்கண்டுபொடிப்பரிசில் பெறுமாறு வந்திருப்பதை ஆவூர் மூலங்கிழார் மற்றப் புலவர்களிடம் கூறினர். மற்றப் புலவர்கள் தற்காலம் பாண்டியன் இருக்கும் நிலையை அறிந்தவர்களாகையால், ஆவூர் மூலங்கிழாரிடம் இன்னது சொல்வது என்று அறியாது

இருந்தனர். தமிழ் நாடெங்கும் புகழ் பெற்ற பெரும்புல வராகையால், ஒரு வேளை அவரை யேற்று உபசரித்து அனுப்பும் எண்ணம் அரசனுக்குத் தோன்றினும் தோன் றலாம் என்ற எண்ணம் அவர்கள் உள்ளத்தில் உதித் தது. அதனால், மதுரைப் புலவர் எல்லாரும் ஆலூர் மூலங்கிழார்க்கு உரிய மரியாதைகள் செய்து, அரண் மனைக்கனுப்பினர்.

சோணாட்டுப் பூஞ்சாற்றூர்ப் பார்ப்பான் கௌணி யன் விண்ணந்தாயனைப் பாடிய பார்ப்பன வாகைச் செய் யுளால் தமது புகழை வளர்த்துக்கொண்ட ஆலூர் மூலங்கிழார், மதுரை யரண்மனை யடைந்தனர் வாயிற் காவலர் அவரதுமுகப்பொலிவால் அவர் பெரும்புலவரா கவே யிருக்கவேண்டும் என அறிந்தனர். ஆயினும், முன் போலத் தடையின்றிப் புலவர்களை அரண்மனைக்குட் புகவிட அனுமதி பெறாதிருந்தனராதலால், இன்னது செய்வதென அறியாது சிறிதுநேரம் தயங்கிப் புலவரை இரண்டாவது வாயில்வரையிற் செல விட்டு, அரசன் கருத்தையறிய ஒரு காவலன் முன்னே விரைந்து சென் றான். நன்மாறன் அமைச்சரோடும் தண்டத் தலைவரோ டும் முன்னாள் ஆலோசனை செய்த பெரியதோர் அரசி யல் வினையைப்பற்றித் தனித்துச் சிந்தனை செய்து கொண்டிருந்தான்; வாயிற் காவலன் வந்து சொல்லிய செய்தியைக் கேட்டான் ; புலவரை வரவேற்கும் வழக் கத்தை யொழித்து அநேக ஆண்டுகள் ஆயின வாயினும், ஆலூர் மூலங்கிழார் என்றபெயரைக் கேட்டதும் அவரை எவ்வண்ணம் வரவேற்காது அனுப்புவது என்ற எண் ணம் தோன்ற, அரசியல் சம்பந்தமாக எண்ணியிருந்த

சிந்தனையைச் சிறிது நேரம் நிறுத்தி, அவரை வரவேற்கச் சித்தமாயினன். வாயிற் காவலன் புலவரை உள்ளே அழைத்து வர அனுமதி பெற்றுச் சென்றனன்.

வாயிற் காவலன் புலவர் வரும் வழிக்குச் சென்று அவரை உரிய மரியாதையோடு அழைத்து வந்தான். நன்மாறன் இருந்த அறைக்குப் புலவர் வந்து சேர்ந்தனர். அவன் முக மலர்ச்சியைக் காட்டி, "புலவரேறே, வருக! வருக!!" என்று கூறி வரவேற்றனன். அவரும் அரசனைத் தம் நிலைமைக்கேற்ப வாழ்த்தி வணங்கி, "வழுதியர் தலைவ, தமிழர் இறையே, எத்துணையோ புலவர்களை ஆதரித்து எண்ணிறந்த தமிழ்ச் செய்யுட்களை உலகிற்குதவிய பாண்டியர் குடியிலே தோன்றிய நின்னை இந்நாள்காறும் நேரிற் கண்டு புகழ்ந்து பாடும் பேறு பெற்றிலேம். சோழ நாட்டுப் பிறந்து வாழ்வேமாகையால், இந்த இன்பப்பேறு கிடைக்க எமக்கு இத்துணை நாள் ஆயது. இன்றே எம் வாழ் நாளிற் சிறப்புற்ற நாளாம். தமிழ் நாடெங்கும் ஒரு தலைமைக்கீழ் ஆளும் பெருமை பெற்ற தமிழ் மன்னனே, அரசர் இயற்றவுரிய அறங்களிலெல்லாம் தலை சிறந்தது நாட்டு மக்களின் அறிவை வளர்த்து அற நெறியிற் செலுத்த முயற்சி செய்தலேயாம். போர் இயற்றலும் பிற நாடுகளைத் தன் வசப்படுத்தலும் அரசன் கடமையேயாமாயினும், அவ்வாறடக்கிய நாடுகளில் வாழும் குடிகள் எல்லாம் அமைதியோடும் அரசனிடம் அன்போடும் வாழுமாறு செய்ய வேண்டுவது அதனினும் சிறந்த கடமையாம். வாட்படையும் வேற்படையும் வில்லும் அம்பும் அரசின் பெருமைக்கு உதவுவனவேயாம். ஆயி

னும், அவற்றைக்காட்டிலும் சிறப்பாக அரசனிடம் இருத்தற்குரிய பொருள்கள் சில உள. அவை செங்கோலின் சிறப்பை விளக்க மிகவும் அவசியமாம். அவை தாம் உழவு கோலும், துலைக் கோலும், பல வகைத் தொழிலாளர் படைக் கலங்களுமாம். வியவசாயம் வியாபாரம் என்ற இரண்டும் இல்லை யென்றால், எந்நாடும் சிறப்படையாது. தொழில் வளம் மிகப் பெரு நாடு செல்வ வளம் பெற வழியில்லை. ஆகையால், இவற்றை நிலை பெறச் செய்ய முயல்வது அரசர் கடமையேயா மென்பதை யாம் கூற வேண்டுமோ!'' என்று கூறினர். பாண்டியன் நன்மாறன், அவற்றைக் கேட்டுத் தன்னுடைய சிந்தனைகளுக்கு மாறுபாடாகத் தோன்றினும்தலையசைத்து,அங்கீகரித்துக்கொண்டான். பிறகு புலவர் சில பாடல்கள் பாடி, அவனை மனமார வாழ்த்தினர். அவர்தம் பாடல்களை ஏற்றுக்கொண்ட பாண்டியன் உடனே பரிசில் வழங்கக் கூடிய நிலையில் அப்பொழுது இருக்கவில்லை. ஆகையால், புலவரைப் பார்த்து, "ஐய, அருந்தமிழ்ப் புலவரே, நுமது செய்யுட்கள் செவிக்கின்பம் பயப்பனவாய் உள்ளன. நும்மைப் போன்ற பெரும்புலவர்களைக் கண்டு அளவளாவிப் பல நாட்கள் ஆயின. இன்னும் சில நாட்கள் நீவிர் இந்நகரிலேயே இருக்க வேண்டும். பிறகு பரிசில் தந்து விடை கொடுத்து அனுப்புகின்றேன். இப்பொழுது விடை பெற்றுக் கொள்ளுங்கள்,'' என்று கூறி அனுப்பினன். புலவரும், அரசன் சில நாள் இருக்கச் சொன்னதற்காக மகிழ்ந்து, அங்கிருந்து வெளியேறி,

மதுரை நகர்ப் புலவர்களோடு அளவளாவிச் சில நாள் தங்கி யிருந்தனர்.

இவ்வாறு இருக்கையில், இரண்டொரு முறை அரண்மனைக்குப் போய் அரசனைக் கண்டனர். அவன் பரிசில் வழங்காமல் இன்னும் சில நாள் பொறுத்திருக்க வெனக் கூறி அனுப்பினன். புலவர் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தனர். பரிசில் வருகின்ற வழியைக் காணவில்லை. அரசன் இல்லையென்று சொல்ல மாட்டாமல் இப்படிச் சொல்லுகின்றானோ என்று அவர்க்குத் தோன்றியது. மதுரை நகர்ப் புலவர்க்கும் அரசன் இவ்வாறு இப்பெரும்புலவரை மனம் வருந்தச் செய்வது அதிசயம் விளைத்தது. பாண்டியன் மனமே மாறி யிருக்கும்பொழுது எவர் வருத்தம் என்ன செய்யும்? ஆவூர் மூலங்கிழார் பொறுக்க வியன்றவரை பொறுத்தார். இதுதான் கடைசி முறையென்று அரண்மனைக்குப் போனார். அப்பொழுதும் அரசன் அவர்க்குப் பரிசில் தந்து விடை கொடுக்கும் கருத்துடையனாய் இருக்கவில்லை. ஆகையால், அவர் அரசனைப் பார்த்துப் பின் வருமாறு பேசினர்:

"அரச, பரிசில் வாழ்நர் என்ற சிறப்புப் பெயர் புலவர்க்கு உரியதேயாயினும், வறுமையால் மிகவும் வாடுங் காலத்தும், தமது மானம் இழந்து வரிசை தப்பி வாழ்ந்த புலவர் எவரும் இலர். யாம் வெயில் என்றும் பனியென்றும் பாராது பல முறை நடந்து நின்னிடம் வந்து பரிசில் பெறக் கருதிக் காத்திருந்தோம். எமது வறுமையோ கல்லாற் சமைத்ததுபோல உறுதியாய் இருக்கிறது. காற்று உட்புகாது மறைந்திருக்கவேண்டு மளவு அமைந்த எமது சிறு குடிலில்

மழையும் வெயிலும் புகுமாயினும் அவற்றுக் கஞ்சாது, பொன்னணி மணியணி பூணுமல், நாணம் ஒன்றே பெரும்பணியெனப் பூண்டு வாழும் எமது கற்பிற் சிறந்த மனைவியை எண்ணி யாம் இங்கிருந்து இனிப் புறப்படவேண்டுவதே. ஆகும் என்றால் ஆகும் என்பதும், ஆகாது என்றால் இயலாது என்பதும் வெளிப்படச் சொல்வது முறையேயாம். கொடுக்கவியலாத வொன்றைக் கொடுப்பேன் என்று கூறி யேமாற்றலும், கொடுக்க வியல்வதைக் கொடாது ஒளித்தலும் புலவரை வாட்டுவதோடு புரவலர் புகழையும் குறைப்பதாம். இவ்வாறு நீ செய்தாயாகையால், இந்நாள்வரை எமது குடியிற் பிறந்தார் எவரும் இவ்வாறு அரசரால் அவமதிக்கப்படாத வாழ்வுடையராய் இருந்தாராகையால், இதுவரை காணு ஒரு காட்சியை இங்குக்கண்டேம். புலவரை அவமதிப்பதால் அரசர்க்குக் கேடுண்டாகும் என்று கூறுவராதலால், எமக்கு நீ ஒரு நன்மையும் செய்யவில்லையாயினும், நின் நாட்டின் நலத்தின் பொருட்டேனும் நீயும் நின் புதல்வரும் நன்று வாழ்க. நாம் போகின்றோம்.

"அரசே, எம்முள்ளத்தில் தோன்றிய இக்கருத்துக்கள் பிற்காலத்தில் உனக்கு நன்மையுண்டாம் பொருட்டும் உன் குடியிற் பிறந்தார் எவரும் இவ்வாறு புரியாமைப் பொருட்டும் பயன் படுமாறு இறைவன் திருவருளால் செய்யுளாகவே எழுகின்றன. அச்செய்யுளைச் செவியேற்ற பிறகேனும் உனது மனம் மாறிப் பண்டு போலப் புலவரைப் போற்றுவாய் என நம்புகின்றோம். செய்யுளைக் கேட்பாயாக:

" ஒல்லுவ தோல்லும் என்றலும் யாவர்க்கும்
ஒல்லா தில்லென மறுத்தலும் இரண்டும்
ஆள்வினை மருங்கிற் கேண்மைப் பாலே ;
ஒல்லா தோல்லு மென்றலும் ஒல்லுவ(து)

இல்லென மறுத்தலும் இரண்டும் வல்லே
இரப்போர் வாட்ட லன்றியும் புரப்போர்
புகழ்குறை படூஉம் வாயில் அத்தை ;
அனைத்தா கியரினி யிதுவே; எனைத்தும்
சேய்த்துக் காணாது கண்டனம்; அதனால்,
நோயில ராகநின் புதல்வர்; யானும்
வெயிலென முனியேன் பனியென மடியேன்
கல்குயின் றன்னவென் னல்கூர் வளிமறை
நாணல தில்லாக் கற்பின் வாணுதல்
மெல்லியற் குறுமக ளுள்ளிச்
செல்வல் அத்தை சிறக்கநின் னாளே.'' *

இச்செய்யுளைக் கேட்டதும் பாண்டியன் தனது குற்றத்தை யறிந்து, புலவர்க்கு ஏற்ற பரிசில் தந்து, விடை கொடுத்தனுப்பினன். ஆலூர் மூலங்கிழார் சோழ நாடு சேர்ந்தார்.

பின்னரும் பாண்டியன் முன்போல ஆயினன். ஒருவர் மனத்தை மாற்றுவது என்பது மற்றொருவர்க்கு எளிதன்று. அவரவரே தம் அறிவின் திறத்தால் மாற்றிக்கொள்வது எளிதாம். பாண்டியன் நன்மாறனோ, புலவர்களைக் கண்டு பயின்று அநேக ஆண்டுகள் ஆய்விட்டதால், அவர்களிடம் உள்ள பெருமையை அளந்தறியும் அறிவையே இழந்துவிட்டான். அரசன் அவ்வாறு ஆனதால், மன்னரைச் சார்ந்தொழுகுவார் பலரும் புலவர்களை அரண்மனைக்குள் வரவேற்கும் பண்டைப் பழக்கத்தைக் கைவிட லாயினர். பாண்டிய

* புறநானூறு—செய்யுள், 196.

நாட்டில் இந்நிலை ஏற்பட்டுவிட்டதால், மதுரை நகரில் வெகு நாளாய் வாழ்ந்து வந்த புலவரன்றிப் பிற நாட்டுப் புலவர்களின் போக்கு வரவு அருமையாய்ப் போயின. இந்நிலைமையிலிருந்த பாண்டிய நாட்டுக்கு வேறொரு புலவர் வந்தார். அவர் வறுமையின் பெருமையை உள்ளவாறு தம் வாழ்வில் உணர்ந்தவர். பாண்டிய வேந்தன் ஆதரவு கிடைப்பது அருமையெனப் பலர் கூற அறிந்தாராயினும், 'நம் அதிருஷ்ட பலனையும் அறிந்து பார்ப்போம்,' என அவரும் வந்தார் அவர் தமிழ் நாட்டிற் பிறந்தவர் அல்லர்; வடநாட்டிற் பிறந் தவர். நாணயப் பரிசோதனை செய்யும் திறம் வாய்ந்த பண்டைப் பழங்குடி யொன்றிற் பிறந்தவர்; பெரிய சாத்தனார் என்னும் பெயரினர்; தம் நாட்டிலே மிகவும் விரும்பிப் பயிலப் பெறுவதும் போற்றுவாரைப் பெறு ததுமாகிய தமிழ் மொழியைப் பெரிதும் வருந்திக் கற் றுத் தேர்ந்திருந்தார். அவர் தமிழ் நாட்டு வேந்தன் எனப்பெறும் பாண்டியன் நன்மாறனிடம் தமது புல மையை விளக்கிப் பரிசில் பெற விழைந்ததும் வியப் பாகுமோ ? உள் நாட்டு நிலைமையை நன்கறியாதவரா கையால், தம் ஊரிலிருந்து வெகு சிரமப்பட்டு மதுரை வரை வந்து சேர்ந்தார்; அரண்மனையை அடைந்து, வாயில் காவலரிடம் தம் வருகையைத் தெரிவித்து அரச சமுகம் அடைய முயன்றார். அவர் எண்ணம் நிறை வேறுவது அரிதாயிற்று. மிகுந்த மனவருத்தம் கொண் டார். ஒரு நாள் மிக்க சிரமத்தின்மேல் அரசன் முன் போயினர்; தம் வருகையைத் தெரிவித்துச் சில செய் யுட்கள் பாடினர்.

அரசன் மனம் இரங்குவதாய்த் தோன்றவில்லை. அதனால், அவர் மிக்க வெறுப்புக் கொண்டு, பின் வருமாறு பேசினர் :

" விரைந்து செல்லும் குதிரைப் படையையுடைய நன்மாறனே , திண்ணிய தேர்களையுடைய தலைவனே , உன்னைப் பாராட்டி, அருவி பாயும் பெரிய மலைபோல மாலையொடு விளங்கும் உன் மார்பகத்துக் குறையாத அன்புடைய தெய்வக் கற்புள்ள நின் கோப்பெருந்தேவி பயந்த பவளமணி போன்ற அழகிய வாயையுடைய கிண்கிணிக் காலினராகிய உனது புதல்வர் பொலிக என்று வாழ்த்தி, உன்னிடம் கொண்ட பக்திப் பெருக்கால் கனுப் பொழுதிலும் அாற்றுகின்ற எம் மனம் மிகவும் இன்புற்று மகிழ ஆல் அமர்ந்த கடவுள் போன்ற நினது செல்வத்தை யெல்லாம் கண்டோம்; விடை பெற்றுக் கொண்டோம்; வேல் கெழு குரிசில், வாழ்க நின் கண்ணி; தொடுத்த தமிழ் நாட்டெல்லை முழுவதும் கொள்ளையாகக் கொண்டு நின் பகைவரை வணங்குவித்து அவர் பொருளை வாங்கி யுண்ணும் குறைவற்ற வலி மிக்க நின் போன்ற திறல் சிறந்த நின்னுடைய மைந்தர் கண்ணோட்டத்தால் எந்நாளும் பகைவர் வாட அவாது அருங்கலங்களைக் கைக்கொண்டு நுமது பொன்மயமான பெரு நகரிற் சேர்ந்த உன் முன்னோர்களைப் போல நீயும் ஆண்டும் நாளும் மிகுந்து, திரைகள் மிக்க பெரிய கடனீரினும் அக்கடல் கொழிக்கும் மணலினும் நீண்டுயர்ந்த மழைத்துளியினும் மிகுதியாக இவர் பெறும் பிள்ளைகளைக் காணுந்தோறும் மகிழ்ந்து விரும்பிச் செல்வத்தோடு புகழும் இனிது விளங்க நெடுங்காலம்வாழ்க. பெருந்தகையே, யாமும் உறவினரில்லாத தூரதேசத்திலே நாடோறும் மழைத் துளியை விரும்பி எதிர்பார்க்கும் வானம்பாடிப் பறவைபோல உன்னுடைய வண்மையை எதிர் பார்க்கும் ஆசையால் மனம்

வருந்தி இரங்கி நினது அடி நிழலின்கட் பழகிய அடியுறை போல வாழ்வோம். நீ இவ்வாறு யாம் மனம் வருந்தச் செய்த செய்கையை மறவாதொழிவாயாக.''

நன்மாறன்:—புலவரே, அரசியற்றுறையில் பெரிதும் ஈடுபடுவதால் நும்போல்வாரைத் தக்கவாறு ஆதரிக்க இப்பொழுது என்னால் இயல்வதில்லை. இப்பரிசிலைப் பெற்றுக்கொண்டு விடை பெற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

பெரிய சாத்தனார்:—அரசே, பெறும் பரிசில் சிறிதேயாயினும், அன்போடு உதவும் வள்ளலரிடம் ஆதரவோடு பெறுதலே புலவர் இயல்பாம். ஆகையால், நம் இருவர்க்குள் நிகழ்ந்த இப்பேச்சுப் பிறர்க்கும் தெரியும்பொருட்டு எமது கருத்துக்களைச் செய்யுளாக்கித் தெரிவித்துப் பிறகு பரிசில் பெறுவோம். செய்யுட்குச் செவி சாய்ப்பாயாக:

“ அருவி தாழ்ந்த பெருவரை போல
ஆரமொடு பொலிந்த மார்பிற் றண்டாக்
கடவுள் சான்ற கற்பிற் சேயிழை
மடவோள் பயந்த மணிமரு ளவ்வாய்க்
கிண்கிணிப் புதல்வர் பொலிகென் றேத்தித்
திண்டே ரண்ணல் நிற்பா ராட்டிக்
காதல் பெருமையிற் கனவினும் அரற்றுமேன்
காமக நெஞ்சம் ஏமாந் துவப்ப
ஆலமர் கடவுள் அன்னநின் செல்வம்
வேல்கெழு குருசில் கண்டே னாதலின்
விடுத்தனென் வாழ்கநின் கண்ணி தொடுத்த
தண்டமிழ் வரைப்பகம் கொண்டி யாகப்

பணித்துக்கூட் டுண்ணுந் தணிப்பருங் கடுந்திறல்
நின்னோ ரன்னநின் புதல்வர் என்றும்
ஒன்னார் வாட அருங்கலந் தந்துநும்
பொன்னுடை நெடுநகர் நிறைய வைத்தநின்
முன்னோர் போல்கிவர் பெருங்கண் ணோட்டம்
யாண்டும் நாளும் பெருகி யீண்டுதிரைப்
பெருங்கட னீரினும் அக்கடல் மணலினும்
நீண்டுயர் வானத் துறையினும் நன்றும்
இவர்பெறும் புதல்வர்க் காண்டொறும் நீயும்
புகன்ற செல்வமொடு புகழினிது விளங்கி
நீடு வாழிய நெடுந்தகை, யானும்
கேளில் சேஎய் நாட்டினெந் நாளும்
துளிநசைப் புள்ளினின் அளிநசைக் கிரங்கிநின்
அடிநிழற் பழகிய அடியுறை
கடுமான் மாற, மறவா தீமே." *

நன்மாறன்:—செய்யுள் நன்றாகவே அமைந்திருக்கின்றது. இப்பரிசிலைப் பெற்றுக்கொள்ள வேண்டுகின்றேன்.

பெரிய சாத்தனார்:—அரசே, யாம் விடை பெற்றுக் கொள்கிறோம். இனியேனும் புலவர்களை அவமதியாது ஆதரிக்க வேண்டுகின்றோம்.

இச்சம்பாஷணையின் பிறகு அரசன், அரசியல்அதிகாரிகளைக் காணற்குரிய அறைக்குச் சென்றான். புலவர், அரண்மனைக்கு வெளியே வந்து, தம் ஊர் சென்றார்.

*புறநானூறு - செய்யுள், 198.

## V

இறைவன் திருவருட் செயலை அளவிட வல்லார் எவரே ? ஒருவன் சிவிகைமீது அமர்வோனுகவும், மற்றொருவன் அதனைப் பொறப்பவனுகவும் அமைவதும்; ஒருவன் புரவலனுகவும், மற்றொருவன் அவனிடம் கையேந்தி நிற்றற்குரிய இரவலனுகவும்; ஒரு தாய் வயிற்று மக்களுள்ளே ஒருவன் சிறந்த அறிவுடையானுகவும், மற்றொருவன் நிரக்ஷர குக்ஷியாகவும் மந்தமதியாகவும் இயன்றிருப்பதும் அவனருட் செயலன்றோ ? பிறந்தன இறத்தலும், இறந்தன பிறத்தலும், கண்டனமறைதலும், முன்னர்க் காணுதன காண்டலும், பிற அற்புதங்களும் அவனுக்கு இயல்பேயன்றோ? எண்ணிறந்த மக்களும் பற்பல மன்னரும் தம்மைப் பணிய முடி மன்னராய் அரசாண்டவரும், திக்கற்றுத் திருமகள் பகைஞராய்த் திரிந்தவரும் முடிவில் ஒரு பிடி சாம்பர் ஆதல் அன்மைவுதானே ? இன்ன காலத்தில் இன்ன இடத்தில் இவர்க்கு இன்னது விளையும் என்று எத்தகை அறிவுடையோராலும் அறுதியிட்டுரைக்கக் கூடாமல் இருப்பதன்றோ இறைவன் திருவருட் செயலிற் பெருத்த அற்புதமாம் ?

பாண்டிய மண்டலாதிபதியாய்த் தமிழ் நாட்டரசர் தலைவனுய் வணங்காமுடி மன்னனுய் வாழ்ந்து வந்த நன்மாறன் போர்க்களங்களிலும் அரசியற்றுறை யாராய்ச்சி

யிலும் பெரும்பகுதியான காலத்தைக் கழித்துக் குடி மக்களுக்கு இயன்றவளவு நன்மை புரிந்து அரசாண்டு வயோதிக தசை யடைந்தான். நல்லோர் குடியிற் பிறந்த வல்லோனாகையால், முதுமைப்பருவம் குறுகவும், நல்லோர் சேர்க்கையிலும் தத்துவ விசாரத்திலும் சிந்தை செலுத்தலாயினன். நரையும் திரையும் பஞ்சேந்திரியங்களின் சக்தி குறைதலும் ஆகிய குறிகள் தோன்று முன்னரே இறைவன் திருவடி நீழல் எய்தலாகாதா என்ற எண்ணமுடையவ னாயினன். எண்ணிய எண்ணத்தில் திண்ணியராயிருப்பின் எண்ணிய எண்ணியாங்கு எய்துவர் என்று பெரியோர் கூறும் அறிவுரையும் அவன் உள்ளத்தில் உதித்து விளக்கம் பெற்றது.

அந்நிலையில் ஒரு நாள் மதுரை நகரில் உள்ள இளமரக்கா ஒன்றில் உலவச் சென்றான். மெய் காவலர் சிலர் இரு புடையிலும் வரவேற்று எவரும் தொடாராது பின்னிற்கத் தனித்து ஏதோ பெருஞ்சிந்தனையுடையனாய் நன்மாற மன்னன் சோலைக்குட் புகுந்தான்; அவ் விளமரக் காவினுள் ஆனந்தத் தாண்டவ மாடியிருந்த இயற்கைச் செல்வியின் எழிலைக் கண்டு இன்புற்றான்; திலகமும் வகுளமும் வெட்சியும் குரவமும் மரவமும் கோங்கும் கொன்றையும் ஆதிய மரங்கள் மலர்க்காட்சி தந்ததைக் கண்டு மனம் பூரித்தான்; மல்லிகை முல்லை முதலிய கொடிகள் மலர்ந்திருந்த மாட்சியைக் கண்டு உலக மயக்கத்தை மறந்தான்; மணம் மிக்க மலர்கள் நிரம்பிய தடாகங்களின் கரைகளில் உள்ள ஆதனங்களிலே சிறிது நேரம் அமர்ந்து, நீர் வளர் மலர்ப் பொலிவை நிறைய நோக்கினான். கொடி வீடுகளின் உட்

புகுந்து சாய்வான அணைகளில் சார்ந்து அமர்ந்திருந்து மனக் கவலைகளை மறந்தான்; இடையிடையே சிறு சிறு நீர் நிலைகளில் நாற்பாலுமுள்ள அழகிய பதுமைகள் நீர் நிறைக்கப் பசுமை மிக்க இலைகள் நிரம்பியிருக்கும் அணிகிளர் காட்சியையும் பார்த்துத் திரும்பினன்; என்னதான் வெளிக் காட்சியைக் கண்டாலும், மனத்தினுள் இருந்த தளர்ச்சி இடைவிட்டு எழுந்து எழுந்து தோன்றுவதையும் உணர்ந்தான். இளமரக்காவை அடுத்துள்ள இலவந்திகைக்குச் சென்று இன்புறுவோம் என்று அத்திசை நோக்கினன். அவன் குறிப்பறிந்த மெய் காவலர் முன்னும் பின்னும் சென்றனர். இளமரக் காவிலிருந்து இலவந்திகைச் சோலைக்குச் செல்லும் சிறியதொரு வாயில் வழியே சென்று, அங்குப் புகுந்தான்.

அவ்விலவந்திகைச் சோலை, அரசனும் அவனுக்கு உரிய பெண்டிரும், அவகாசமுள்ள காலங்களில் வந்து இன்பமுறப் பொழுது போக்குவதற்காக அமைந்ததாம்; பெரியதொரு சுற்று மதிலையுடையதாய், வெளிப் புறத்தார் எவர்க்கும் தன்னுள் அடங்கிய இன்பக் காட்சிகளின் நலத்தை அளியாதிருப்பதாம். அரசனும் உரிமை மகளிரும் அங்கு வருங் காலங்களிலே தங்கியிருத்தற்குரிய சிறிய மாளிகைகள் சில அங்கு இருந்தன. அவர்கள் நீராடி இன்புறற்குரிய சிறிய பொய்கைகள் சில இருந்தன. பல வகையாகிய மண மிக்க மலர்கள் நிரம்பிய மரங்களும் செடிகளும் கொடிகளும் இயற்கை நலந் தோன்ற வளர்ந்திருந்தன. சில இலை அழகின் பொருட்டும், வேறு சில மலர் அழகின்பொருட்

டும், மற்றும் சில இலை மணத்தின் பொருட்டும்,பின்னும் சில மலர் மணத்தின் பொருட்டுமாய்ப் பயிரிட்டு வளர்க்கப்பட்ட செடிகள் பல அங்கிருந்தன. எத்திசை நோக்கினும் மலர் நிறைந்த காட்சியாகவே இருந்ததால், அச்சோலை பன்மலரடுக்கிய நன்மாப் பந்தருடைய மனோகரமாகிய மாட்சியுடையதாய் விளங்கியது.

அச்சோலையின் நடு நாயகமாய் அமைந்த காட்சி நலஞ் சான்ற இலவந்திகையிலேதான் பெரும்பாலும் அரசன் அமர்ந்து இளைப்பாறுவது வழக்கம். அதன் அமைதி மிகவும் அற்புதமானது. பளிங்கினாற் கரையமைத்த சிறியதொரு நீர் நிலை அங்கு இருந்தது. அந்நீர் நிலையைச் சுற்றிலும் உள்ள பளிங்குக் கரையின் ஆறு கோணங்களிலும் ஆறு கந்தருவச் சிலைகள் இருந்தன. நடுவிலே சிறியதொரு திட்டு இருந்தது. அத்திட்டின் மேலும் அழகியதொரு பளிங்குச் சிலை நின்றது. நடு நின்ற பளிங்குச் சிலை, எல்லாவற்றிலும் வேலைப்பாட்டால் மிகவும் அழகுடையதாய் இருந்தது. அப்பளிங்குச்சிலை ஒவ்வொன்றிலு மிருந்து சிறு சிறு துளிகளாய் மழைத்துளிபோல நீர் பாய்ந்து பொய்கைக்குள் விழும். இப்படி விழும் நீரால் பொய்கை நிறைவதற்கு ஐந்து நாழிகைக்குமேல் ஆகும். நிறைந்து கரை தட்டியதும், கீழே வைத்திருந்த சில யந்திர விசைகளால் தண்ணீர் எல்லாம் விரைவிலே வெளியே ஓடி, அடுத்துள்ள மரங்களுக்குப் பாய்ந்துவிடும். இவ்வண்ணம் நிறைத்துப் போக்கப் பொறிப்படை அமைந்த இலவந்திகை அமைந்திருந்த காரணத்தினால், அச்சோலை இலவந்திகைச் சோலை என்ற பெயர் பெற்றது.

கண்டவர் மனத்தைக் கவரும் எழில் வாய்ந்த அவ் விலவந்திகைக் கரையோரமாக அரசரும் அரசியரும் அமரத் தக்கவாறு ஆதனங்கள் பல அமைந்திருந்தன. அவற்றுட் சில பளிங்கினாலும் வேறு சில இரும்பினாலும் மற்றும் சில மரத்தினாலும் அழகிய பல வகை வேலைப் பாடுகளோடு அமைந்திருந்தன. அவற்றுட் பளிங்கினால் அமைந்த உயர்ந்த ஆதன மொன்றில் அரசர் பெருமான் அமர்ந்தனன். மெய் காவலர் சிறிது விலகி நின்றனர். இலவந்திகையின் காட்சியில் ஈடுபட்டிருந்த அரசன் சிறிது பொழுது சென்றதும், உள்ளத் தளர்ச்சியும் உடம்பின் சோர்வும் கொண்டு, ஒரு புறம் சாய்ந்தான்; தான் பிறந்த நாள் தொட்டு அந்நாள்காறும் தன் வாழ் விலே நிகழ்ந்துள்ள பல செய்திகளையும் பற்றி ஆராய லாயினன்; அறிவுடைப் பெரியரால் அலயட்சியம் செய் யப்பெற்ற அற்பப் பொருள்களிலே ஆசை கொண்டு அன்புடையார் பலரோடு அருஞ்சமராம் புரிந்து அடைந்த பயன்களை யெல்லாம் அளந்து அளந்து பார்த்தான்; இன்ப வாழ்வு என்பது அழிவற்றதாயிருக்க, இவ்வுலகில் இடமும் காலமும் ஏதுவும் இல்லை என்று தெளிவுற அறிந்தான்; பின் வரும் பாடல்களை இனிய இசையோடு பாடினன் :

மறப்பரிய பெரும்பொருளை
வழித்துணையை மறந்தயர்ந்தேன்
துறப்பரிய பெருவாழ்வைச்
சுகவழியைத் துறந்திருந்தேன்
பிறப்பரிய சிறப்புரிமை
பெறுமாறு முயன்றறியேன்.

இறப்பரிய வின்பநிலை
யெங்ஙனம்யான் எய்துவனே!
இன்பமெனத் துன்பமென
வெண்ணுவன விரண்டுமேனை
வன்பினொடு பிணித்துலகில்
மயக்கமுற வாட்டுவன
அன்பினெறி யுணர்வெளிதாம்
அரும்பொருளை யறிந்தடைய
முன்புமுயன் றறியாதேன்
முயன்றுபயன் பெறலெளிதோ?

"என் முன்னோர் இருந்த நிலையென்ன? இப்பொழுது யான் உள்ள நிலையென்ன! பாரத பூமி முழுவதையும் ஒரு குடைக்கீழ் ஆண்டு வந்த பாண்டியர் குடியிற் பிறந்த யான் மிகச் சிறிய நாட்டினையே ஆளும் ஆற்றல் பெற்றவனா யிருந்தேன். எல்லாம் இறைவன் செயல். இனிஎன்வழி வருவோருள் யாவனேனும் சிறந்த வீரன் ஒருவன் என் எண்ணத்தை நிறைவேற்றலுமாம். இந்நாள்காறும் புவிப் பொறை தாங்கியது போதும். இனித் தவ வேடம் பூண்டு பாவத்தைக் களைய முயல்வதே சிறப்பாம். இந்த வுடம்பினுள் இன்னும் எத்தனை நாட்களுக்கு யான் வாழ வேண்டும் என்ற திருவுள்ளம் இறைவனுக்கு உளதோ? அந்நாள் எல்லாம் அவனையே ஆராய்ந்தறிய முயல்கின்றேன். அவனருளால் அன்றோ அவன் தாள் வணங்கலாம்?" என்று தனக்குட் கூறிக்கொண்டனன்.

பிறகு வானக் காட்சியைக்கண்டு மனமகிழ்ந்தான்; பளிங்குப் பீடத்தில் ஒரு புறமாகச் சாய்ந்தான்; ஏதோ

சிறிதளவு மயக்கம் தோன்றுவதாய் உணர்ந்தான். எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளை எண்ணி யெண்ணி இன்புற்றவாறே முக மலர்ச்சி பெருகத் தன்னுணர் விழந்து பரவச மடைந்து, பளிங்குப் பீடத்தின்மேலே ஒரு கை வைத்துக்கொண்டு சிறிது பொழுது நின்று, பிறகு அமர்ந்து, அதன் பின்னர்ப் படுத்துக்கொண்டான்; இறைவன் திருவருள் வசத்தால் அவ்வாறு இருந்த நிலையிலேயே அநித்தியமாகிய இவ்வுலக வாழ்வைத் துறந்தான். உடம்பு சிறிது வேறுபாடு அடைந்தது.

மெய் காவலர் உடனே நெருங்கி வந்து, அரசன் இருந்த நிலையை அறிந்து, உண்மையை உணர்ந்து கொண்டு, அரண்மனைக்குச் செய்தி தெரிவித்து, உரிய முறையால் மேல் நிகழ்தற்குரிய வினைகளை மந்திரிமார் கவனிக்கத் தக்கவாறு செய்தனர். மந்திர சுற்றத்தார் அவன் மைந்தனுக்கு அரசுரிமையை நல்கி, முடி கவித்து, அப்பொழுது செய்தற்குரிய சடங்குகளை நிறைவேற்றி, நன்மாறன் வாழ்வின் வரலாற்றை நாட்டவர் அறியுமாறு விளக்கிக் கூறி, இறைவன் திருவருளால் அவன் இலவந்திகைப் பள்ளியில் துஞ்சிய செய்தியை எங்கணும் பரப்பிப் புதிய அரசனுக்கு உரிய காலத்திலே பட்டாபிஷேகம் நிகழும் என்ற செய்தியையும் தெரிவித்தனர்.

நாடெங்கும் தூதர் சென்று இச்செய்தியைப் பரப்பிப் பலவகைச்சிற்றரசர்களையும் புலவர்களையும் மதுரை நகரத்தில் வந்து குழுமச் செய்தனர். அவரனைவரும், பூரண சந்திரன் அஸ்தமனம் ஆவதைக் கண்ட பிறகு

இளங்கதிரின் உதயத்தைக் கண்டு மகிழ்வார்போல இளவரசனது வாழ்வின் நோக்கத்தை எடுத்துரைப் பாராய்த் தமிழ்த் தெய்வத்தின் தனித் திருப்பணி புரிய வருவோருள் அவன் தலை சிறந்திருக்கவென வாழ்த்து வாராயினர். நல்லோர் பலர் மனமாரவாழ்த்தி நல்லுரை நவில, இளவரசன் நன்னாளில் முடி கவிக்கப்பெற்றுத் தன் முன்னோர் வழி வழியே தனக்கு வைத்த பேரு கிய அரசுரிமையைத் தாங்குவா னாயினன். அவன் காலத்தில் மேன்மேலும் நாடு வளர்ச்சி பெற்று மிக்க நல்வாழ்வு அடைந்தது.

# 3. ஆரியப்படை கடந்த பாண்டியன் நெடுஞ்செழியன்

## I

மதுரைமாநகரம்—வானவர் உறையும் மதுரைமாநகரம்—உலகுபுரந்து ஊட்டும் உயர்பேரொழுக்கத்துப் புலவர் நாவிற் பொருந்திய பூங்கொடி வையை யென்ற பொய்யாக் குலக்கொடியால் வளம் பெற்ற மதுரை வள நகரம்—பொதியிற்றென்றலாற் புகழ் பெறும் நகரம்—நுதல் விழி நாட்டத்திறையோன் கோயில், உவணச் சேவல் உயர்த்தோன் நியமம் மேழிவலனுயர்த்தவெள்ளை நகரம்—கோழிச்சேவற் கொடியோன் கோட்டம், அறவோர் பள்ளி மன்னவன் கோயில் ஆதிய பல வகைச் செயற்கையழகுகளையுடைய திருவாலவாய்ப் பெருநகரம். அந்நகரின் இயற்கையழகு அருங்கவிப் புலவர்க்கே அளந்துரைக்கலாந் தகையதாம்.

புறத்திருந்து நகரத்துள் நுழையுங்காற் காணுங் காட்சி இன்னது என இளங்கோவடிகள் கூறியவாறு எடுத்துரைத்தல் எளிதன்றாம். கடி மரம் ஓங்கி வளர்ந்திருக்கும் காவற் காட்டைக் கடந்து, நீர் நிரம்பிய அகழியை நெருங்குவோம். உரியோர்க்குப் புலப்படவும் அயலோர்க்குப்புலப்படாதிருக்கவும் ஏற்றவாறு அமைக்கப்பெற்றிருக்கும் நுழைவழிகளால் அகழியைக்கடந்து அரணினைக்குறுகலாம். அரணின் உயர்ச்சியும் அளவும்

எவர்க்கும் அச்சந் தருவதேயாயினும், நான்கு பெரு வாயில்களும் ஒற்றராதிய சிலர்க்கு மாத்திரம் அறிய லாகும் சிறிய நுழை வாயில்கள் இரண்டும் உளவாம். இவற்றுள் ஒன்றால் உட்புகுவோமாயின், நாம் காணும் காட்சி, வாயிலகத்தே உருவிய வாளுடன் காவல் புரியும் யவன வீரரும் அகத்துள் அரண் காவலர் தொகுதியும் பிறவும் ஆகும். உரிய முறைகளால் அனுமதிப் பத்திரம் பெற்று நகர்க்குட் புகுந்தோ மாயின், ஆயிரங் கண் ணோன் அருங்கலச் செப்பு வாய் திறந்து வைத்தது போன்ற பெருங்காட்சியைக் காண்போம்.

அரச வீதியும் அந்தணர் சேரியும் வேளாளர் சாலை களும் வணிகர் உறையிடங்களும் அணியணியாய் அமைந்திருக்கக் காண்போம். பொது மகளிர் வீதியும் அங்காடி வீதியும் அதன் உட்பகுதிகளாகிய நவ மணி விற்கும் நலம்பெறு தெருக்களும் நால்வகைப் பொன் னும் பால்வகை பகரும் பொன் வணிகர் தெருக்களும் நூல் மயிர் நுழைநூற் பட்டு முதலியவற்றால் நெய்யப் பெற்ற ஆடைகள் பன்னூற்றுக் கணக்காய் விற்கும் அறுவைவாணிகர் வீதிகளும் மிளகு மூடைகளும் எண் வகைக் கூலமும் குவித்தளக்கும் கூல வாணிகர் கோல வீதியும் வேறு பல தெருக்களும் சந்தியும் சதுக்கமும் மன்றமும் கவலையும் மறுகும் பிறவும் அழகுற அமைந்த மதுரை நகரின் இயற்கை யழகை இன்னதென இயம் பலாகுமோ?

இத்தகைச் சிறப்புடைய பழம்பெருநகரில் தனது முன்னோர் நிறுவிய அரசியலைச் சிறப்புற நடத்தித்தமிழ்

நாடெங்கும் தன் ஆணை செல்ல, அறமெனும் தெய்வம் துணை நின்றுதவ, மந்திரச் சுற்றத்தாரும் தந்திரச் சுற்றத்தாரும் நாட்டின் பொது மக்களுள் அறிவிற் சிறந்த பெரியோரும் நாட்டின் நலங்கருதி என்னென்ன இயற்றச் சொல்வரோ அவற்றை யெல்லாம் அற நெறி பிழையாதாற்றி, வணங்கிய மன்னர்க்குக் களைகணுகவும், வணங்காதார் மிடல் சாய்க்கும் தலைவனுகவும் பாண்டியன் நெடுஞ்செழியன் என்பான் அரசு புரிந்து வந்தனன். அவன், கல்வி, அறிவு, ஒழுக்கம், சிறப்பு, அரசியல் நெறி, ஆண்மை, மனத்திண்மை, அருள், பெருமை, போர்த் திறம் முதலிய எல்லா அரும்பெருங்குணங்களும் தன்னிடமே வந்து பொருந்த அமைந்திருந்தனன். அரசியற் பொறையை யேற்றுக்கொண்ட சிறு பருவத்திலேயே சிறந்த வீரனுகையால், நாடெங்கும் சென்று பகைஞரோடு பொருது, அவரை அடக்கி, நாட்டின் அளவை வளர்த்துக்கொண்டான். வட நாட்டிலும் பல ஆரிய வரசரோடு போர்செய்து அவர்களைவென்று பணியச் செய்தான். பல நூற்றுக் கணக்காகிய ஆரியப்படைஞர்களை வென்று அடக்கியதோடு ஆரிய வீரருட் சிலரையும் தன் நாட்டுக்குச் சிறைப்படுத்தி வந்தான். மேலும் மேலும் வெற்றியில் விருப்பம் மிகப் பாரத பூமி முழுவதிலும் தன்னை எதிர்த்து நிற்போர் இன்மையால் வடமேற்குத் திசையில் உள்ள யவன நாடுகளையும் வென்று ஆங்கு நின்று அநேகம் யவன வீரரைச் சிறை செய்து வந்து, பாண்டிய நாட்டிலே பல வகை அருந்தொழில்கள் இயற்றவும் அரண் காவல் செய்யவும் அமர்த்தி வைத்தான்.

"செங்கோற் றென்னவன் காக்கும் நாடென எங் கணும் போகிய இசையோ பெரிதே," என்று புலவர் பெருமக்கள் புகழ்ந்து பாராட்டத் தக்கவாறு அவனது செங்கோன்மை சிறந்திருந்தது. உயர்ந்தவர் தாழ்ந்தவர், கற்றவர் கல்லாதவர், உறவினர் அயலவர், உள் நாட்ட வர் அயல் நாட்டவர் என்ற பேதமின்றி எல்லார்க்கும் ஒரு நிகராக அறம் புரிந்து நீதி செலுத்தி வந்தானாகை யால் அவனது நியாய பரிபாலனத்தைப் பற்றிய புகழும் பெருமையும் எங்கும் பரவியிருந்தன. நெடுஞ்செழிய னது செங்கோன்மைச் சிறப்பை விளக்க அக்காலத்தில் பின் வரும் நிகழ்ச்சி நிகழ்ந்தது :

சோழ நாட்டிலே வாழ்ந்திருந்த பராசரர் என்ற ஒரு வேதியர் சேரனது கொடைச் சிறப்பைப் பற்றிக் கேள்வியுற்று, பாலைக் கௌதமனார்க்குச் சுவர்க்கம் கொடுத்த இமயவரம்பன் தம்பி பல்யானைச் செல்கெழு குட்டுவன் என்ற அச்சேரவரசனைக் காண்டல் வேண்டும் எனக் கருதி, காடும் நாடும் ஊரும் கடந்து சென்றார். மலய மலை பிற்படச் சென்று, சேர நாட்டிற் புகுந்து, முத்தீப் பேணும் ஒன்று புரி கொள்கை இரு பிறப் பாளர் பலரைக் கண்டு, வேதமோது முறையில் அவர்க ளோடு வாதம் செய்தும் யாகங்கள் செய்தும் அநேகரை வென்று, பார்ப்பன வாகை சூடினர். அரசராலும் பிறரா லும் நன்கு மதிக்கப் பெற்று அநேகம் பொற்கலங்களைப் பெற்றனர். அவற்றை யெடுத்துக்கொண்டு தம் ஊர்க் குத் திரும்புங் காலையில் பாண்டிய நாட்டில் உள்ள திருத்தங்கால் என்ற ஊரையடைந்தார். அவ்வூரில் இலை கள் நிரம்பியதோர் அரச மரத்தடியில் உள்ள மன்றம்

ஒன்றில், தண்டம், குண்டிகை, வெண்குடை, சமிதை, பண்டச் சிறுபொதி, பாதக் குறடு முதலியவற்றை வைத்துவிட்டுத் தாமும் சிறிது நேரம் அமர்ந்திருந்தார்.

அப்பொழுது அவ்வூர்ப் பிராமணச் சிறுவர் சிலர் அங்கு வந்தனர். அவர்களைக் கண்ட பராசரர் தம்மை ஆதரித்த சேரனை மனமார வாயார வாழ்த்திவிட்டு, அச்சிறுவர்களைப் பார்த்து, "என்னோடு ஒப்ப முறை வழுவாமல் வேதம் ஓத வல்லவர் என்னிடம் உள்ள பண்டச் சிறுபொதியை எடுத்துக்கொள்ளலாம் உங்களுக்குள்ளே வேதம் ஓதப் பயின்றவர் வரலாம்," என்று கூறினர். வார்த்திகர் என்ற வேதியர் புதல்வன் தக்ஷிணா மூர்த்தி என்ற பெயருடையான் ஒருவன் இளங்குதலை வாயராகிய அப்பிரமசாரியர் குழுவினுள் முன் வந்து, தளர் நாவாயினும் வேத சுருதி முறை வழுவாது உள மலி யுவகையோடு பராசரர்க் கொப்ப வேதம் ஓதினன். அதனைக் கேட்டு மகிழ்ந்த அப்பெரியார் சேர நாட்டிலே தாம் பெற்ற கடகம் தோடு முத்தப் பூணூல் முதலிய பொற்பணிகளை யெல்லாம் எடுத்து வைத்துத் தக்ஷிணா மூர்த்தியை மனப் பூர்வமாக ஆசீர்வதித்து, அவற்றை அவனுக்குக் கொடுத்து விடை பெற்று ஏகினர்.

தக்ஷிணா மூர்த்தி யென்ற அவ்வேதியச் சிறுவன் பராசரரிடம் பெற்ற பொற்பணிகளைப் பூண்டு ஊர்க்குட் சென்றதைக் கண்ட மற்றவர்கள் அவனுக்கு வந்த வாழ்வைக் கண்டு பொறாமல், அரச சேவகருட் சிலரைத் தூண்டினர். அவருள் அற்பர் சிலர் உரிய முறையான் அன்றி அரும்பொருளைக் கவர்ந்து வந்த பார்ப்பான் இவன் என்று தக்ஷிணாமூர்த்தி தந்தையாராகிய வார்த்

திகரைச் சிறை செய்து, சிறைக் கோட்டத் திட்டனர். அச்செய்தியை அறிந்த வார்த்திகர் மனைவி கார்த்திகை யென்பவள் அலந்து ஏங்கி அழுது, நிலத்திற் புரண்டு, புலந்து வருந்தினள். அது கண்டு மதுரை நகர் ஐயை கோயிற் கதவம் திறவாது அடைப்புண்டது. அத் தெய்விகச் செய்தியைக் கேள்வியுற்ற நெடுஞ்செழியன், மிகவும் மனம் வருந்தி, ஏவலரைப் பார்த்து, "கொடுங்கோன்மை நேர்ந்ததோ? கொற்றவை கோயிற் கதவம் அடைப்புண்டதேன்?" என்று கேட்க அவர்கள் அரசனை வணங்கி வார்த்திகரைச் சிறை செய்த உண் மைச் செய்தியைக் கூறினர். அரசன் அது முறை யன்று என்று அவர்களைக் கண்டித்து, "அறியா மாக் கள் செயலால் முறை நிலை மாறி எனது அரசியல் நெறி தவறியது. பொறுத்தருளல் நுமது கடமையாகும்," என்று கூறி நிலவள நீர்வள மிக்க திருத்தங்கால் என்ற ஊரையும் வயலூர் என்ற ஊரையும் வேதியர்க்குக் கொ டுத்துக் கார்த்திகை கணவராகிய வார்த்திகர் முன்னர் இருநில மடந்தைக்குத் திருமார்பு நல்கி நமஸ்கரித் தனன். உடனே நகரத்தார் எல்லாரும் அறிய மதுரை நகரத்துக் கலையமர் செல்வி கோயிற் கதவம் திறந்தது. அதன் பின்னர் நெடுஞ்செழியன் ஆணையால் வள்ளுவர் யானை யெருத்தத் தமர்ந்து, 'இடுபொருளாயினும், படு பொருளாயினும், உற்றவர்க் குறுதி பெற்றவர்க்காம்,' என்று முரசறைந்தார். நாடெங்கும் தனது செங்கோன் மைச் சிறப்பு விளங்குமாறு அன்று சிறையிலிருந்தார். பலரையும் சிறைவீடு செய்து, வரியிறுத்தற் குரியார்க்கு வரி தரவேண்டா என்று ஆணை தந்து புகழ்பெற்றான்.

அதன் பிறகு மாந்தர் அனைவரும் அவன் குடை நிழலின் கீழ் மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்தனர். தமிழ்ப் புலவர் பலரைத் தனது அவைக் களத்துக்கு வருவித்து அவர்களோடு அளவளாவி யின்புறும் வழக்கம் உடைய இந்நெடுஞ்செழியன் ஒரு நாள் அறிஞர் நடுவண் அமர்ந்திருக்கையில் மதுரை நகரத்துப் பெருங்கணக் காயர் தம் மாணவர் பலரையும் உடன் கொண்டு அரசனைக் காண வந்தார். அரசன் அம்மாணவச் சிறுவர்க் கெல்லாம் உரிய ஏவலர்களைக் கொண்டு சிற்றுண்டிகள் வழங்கச் செய்வித்துப் புலவர்கள் முன்னிலையிற் கல்விப் பெருமையினைப்பற்றிப் பின் வருமாறு அம்மாணுக்கர்க் குதவுமாறு பிரசங்கித்தான்:

"தமிழ் என்னும் அளப்பருங்கடலிடைக் குளிக்கும் கருத்தோடு கரையில் நிற்கும் சிறுர்களே, தமிழ்க்கடல் படிந்து கரையேறியுள்ள புலவர் பெருமக்கள் முன்னிலையில் உங்களுக்கு யான் கூறலாகும் அறிவுரை இதுவாம்: கல்வி யென்பது செல்வத்திலும் சிறந்தது என்ற உணர்ச்சி முதற்கண் உங்களுக்கு வேண்டுவதாம். இளமைப்பருவமே கல்வியைத் தேடற் குரிய பருவம் என்று எவரும் கூறுவர். மனிதன் ஆயுட்காலமெல்லாம் கல்வியைத் தேட வேண்டியவனே. இந்நாட்டில் என் முன்னோராகிய அரசர் பலர் இருந்தனர். அவர் காலத்தில் அனேக வீரர் இருந்தனர். அவர் பெயரெல்லாம் இக்காலத்தில் நாம் கேட்டலாகா வண்ணம் மறைந்தன. ஆனால், அக்காலத்தில் இருந்த கல்வி வல்லார் தம் செய்யுட்களால் தம் புகழை வளர்த்துக்கொண்டதோடு தம்மை ஆதரித்த புரவலர் பெருமையையும் உலகறியச் செய்யும் சிறப்பைப் பெற்றனர். இதனால் நாம் அறிவதென்ன ? அழியாத புகழ் பெறுதற்கு விரும்பும் ஒருவன் தான் தேடுதற்குரிய அரும்

பொருளென்று கல்வியைக் கருதித் தேட வேண்டும் என்ப தன்றே? அதனைத் தேடுவது எவ்வாறு? கல்வி என்ற செல்வத்தை உதவ வல்ல பெரியாரை முதலில் அறிய வேண்டும். அப் பெரியாரை யடுத்து அவர்க்கு வேண்டும் உதவி செய்தும், தன்னால் இயன்ற வளவு பொருள் கொடுத்தும், தன் நிலைமைக் கேற்ப ஆசிரியர்க்கு இயற்ற லாகும் பணிவிடைகள் புரிந்தும் கல்வியைத் தேடுதல்வேண்டும். ஒரு தாய் வயிற்று மக்களாயிருப் பினும் குழந்தைகளிடம் அன்புகொள்ளுவதில் சிறிதும் வேற்றுமை யறியாது தாயும் அறிவுடை மகனையே சிறப்பப் பாராட்டி அன்புசெய்யக்காண்போம். ஒரு குடும்பத்திற்பிறந்தபலருள்ளும் அரசியற் பணிக்கு வேண்டிய ஒருவனைத்தேர்ந்தெடுக்கவேண்டுமாயின், அக்குடியின் மைந்தருள் மூத்தவனை வருக என்று அழையாமல், அறிவுடைய ஒருவனையே ஆராய்ந்து அழைத்து, அவனுக்கு ஏற்ற பணியில் அமர்த்துவோம். அந்தணர் அரசர் வணிகர் வேளாளர் என்ற நால்வகைக் குலத்தினருள்ளும் கீழ்க் குலத்தான் ஒருவன் கல்வி வல்லவனாய் இருப்பின், மேற்குலத் தானைக்காட்டிலும் சிறப்பையே பெறுவன். மேற் குலத்தவனே யாயினும், கல்வியறி வில்லாதவன், அக்கல்வி யறிவால் உயர்வு பெற்ற கீழ்க்குலத்தானிடம் அடங்கிநடத்தற் குரியவனே. ஆகையால், உலகில் ஒருவர் பெறும் உயர்வுக்குக் காரணம் அவரிடம் உள்ள கல்வியே யன்றி வேறொன்று மன்று. ஆகையால், குழந்தைகளே, நீவிர் எல்லீரும் கல்வியிலே சிறந்த கருத்துடையராயிருந்து எதிர் காலத்தில் நீர் பிறந்த நாட்டுக்கு வேண்டும் பணியியற்ற அறிவும் உரிமையும் பெறத் தகுதி யுடையர்களாக ஆகவேண்டும் என்பதே எனது பெரு நோக்கமாம். இறைவன் என் வேண்டு கோளை நிறைவேற்றுவானாக.''

அரசர் பெருமான் நிகழ்த்திய இவ்விரண்டரும் பேருரையைக் கேட்ட புலவரெலாம் மகிழ்ச்சி மிக்கனர். தமிழ்ப் பெருங்கணக்காயர் மாணவர்களை மனமார

ஆசிர்வதித்து, அரசனை வாழ்த்திப் பின் வருமாறு பேசினார் :

" அரசர் பெருமானே, இன்று உமது கலாசாலை மாணக்கர்க்கெல்லாம், சிறந்ததொரு திருநாளாகும். தமது உபதேச மொழிகள் அவர்களுக்கு எழு பிறப்புக்கும் ஏமாப்பு அளிக்க வல்லவையாம். அம்மொழிகள் எமது சிறாரால் நன்கு நினைவிலிருத்திப்பயன் பெறவுதவுமாறு செய்யுளாய் அமைந்திருத்தல் சிறப்பாம். நல்லிசைப் புலமை வாய்ந்த தம் வாய் மொழியால் அக்கருத்துக்கள் செய்யுளாய் அமைந்திருத்தல் வேண்டும் என்பதே எமது கருத்தாம். கலை மகள் திருவருளும் திருமகள் பெருங்கருணைச் செல்வமும் படைத்த தம் போன்ற புரவலர் வாய்ப் பிறப்பாகிய அமுத மொழிகள் எமது மாணக்கர்க்கு என்றும் நற்பயன் உதவுவனவாம்."

இவ்வாறு அத்தமிழ்ப் பெருங்கணக்காயர் பேசியதைக் கேட்ட நெடுஞ்செழியன், பின் வருஞ் செய்யுளைக் கூறினன்:

" உற்றுழி யுதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே;
பிறப்போ ரன்ன வுடன்வயிற் றுள்ளும்
சிறப்பின் பாலாற் றாயும்மனம் திரியும்;
ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
மூத்தோன் வருக வென்னா தவருள்
அறிவுடை யோனா றரசுஞ் செல்லும்;
வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும் அவன்கட் படுமே." *

* புறநானூறு - செய்யுள், 183.

இச்செய்யுளைக் கேட்ட புலவர் பெருமக்களனை வரும் பெரிதும் மகிழ்ந்து பாராட்டினர். பிறகு தமிழ்ப் பெருங்கணக்காயனுர் தம் மாணுக்கர்களையும் உடன் கொண்டு விடை பெற்றுப் புறம் போயினர். மற்றப்புல வர்களோடு அரசன் சிறிது நேரம் அளவளாவி யிருந் தான். பிறகு புலவர் அனைவரும் விடை பெற்றுச் செல்ல, மாலைக் காலம் கழிந்து, இராக்காலம் வந்ததால், நெடுஞ் செழியன் அக்காலத்துக்குரிய கடன்களை நிறைவேற்றி விட்டு நுதல்விழி நாட்டத் திறையோன் கோயிலுக்கும், உவணச் சேவல் உயர்த்தோன் நியமத்துக்கும் சென்று, இறைவனைத் தரிசித்து வந்து, அரண்மனைக்குட் புகுந்து தனது அந்தரங்க அறையில் பண்டைப் புலவர் அரு ளிச் செயல்களை ஆராய்ந்து, சிறிது நேரம் இன்புறக் கழித்துவிட்டு வேறு துணை யொன்று மின்றி, இடையா மத்தின் பிறகு வெளியேறி, நாட்டில் மக்கள் பலரும் நன்குவாழும் வாழ்வைஆராயவும் ஒற்றர் தத்தம்பணியை முறை வழுவாது ஆற்றுவதை அறியவும் முயன்றான்.

“ ஒற்றிற் றெரியா சிறைப்புறத் தோர்துமெனப்
பொற்றேள் துணையாத் தெரிதந்தும்—குற்றம்
அறிவரிதேன் றஞ்சுவதே செங்கோன்மை சென்று
முறையிடினுங் கேளாமை யன்று. ”

## II

பாண்டியன் நெடுஞ்செழியன் மதுரையில் அரசாட்சி செய்துகொண்டிருக்கும் காலத்தில், சோழ நாட்டிலே காரிவிப்பூம்பட்டினத்திலே பெருங்குடி வாணிகர் இருவர் மிக்க செல்வமுடையராய் வாழ்ந்துவந்தனர். அவருள் மாசாத்துவான் என்பான் மகன் கோவலன் என்பவனும். மாநாய்கன் மகள் கண்ணகி என்பவளாம். குல முறைக்கேற்பக் கோவலனுக்கும் கண்ணகிக்கும் இளம்பருவத்திலே திருமணம் நிறைவேறியது. கோவலன் அக்காலத்தில் புகார் நகரத்தில் இருந்த மாதவி என்ற நாடகக் கணிகையிடம் அன்பு பூண்டு, இல்லற வாழ்வை மறந்து, தனது பெருஞ்செல்வத்தை யெல்லாம் அப்பொது மகள் பொருட்டு விரயஞ் செய்வானுயினன். ஒரு நாள் கடலாடச் சென்றிருந்த காலத்தில் மாதவியுங் கோவலனும் மனம் மாறுபட்டனர். அவன் உடனே அங்கு நின்றும் நீங்கிக் கண்ணகியை யடைந்தான்.

கண்ணகி அவன் மனச்சோர்வை யறிந்து, அதன் காரணம் உணர முயன்றனள். கோவலன் பொது மகளிர் உடனுறை வாழ்வை யொழித்துவிட்டதாய் உரைத்து வேற்று நகரங்களுக்குச் சென்று வியாபாரம் செய்து அந்நாள் வரை இழந்த பொருளைத் திரும்பவும் தேடும் கருத்துடையனுயிருப்பதையும் அதற்கு முதற்

பொருள் இல்லாத குறை யொன்றே உள்ளதையும் குறிப்பாகத் தெரிவித்தான். கண்ணகி சிலம்பினுள் ஒன்றைப் பெற்று அதனை விற்று வியாபார முதலாகக் கொண்டு மதுரை நகரில் தன் குடியினர் அறியா வண்ணம் வாணிகம் செய்து பிழைக்கலாம் என்று கருதியிருப்பதைத் தெரிவித்தனன். கண்ணகி அதற்கு இசைய, அவளையும் உடன் கொண்டு மதுரைக்குப் புறப்பட்டனன். கால் நடையாக நடந்து, வழியிடையிலே கிடைத்த துணையோடு மதுரை வந்து சேர்ந்து, நகர்ப் புறத்தே இருவரும் தங்கினர் :

அங்கிருந்த மாதரி என்ற இடைச்சியிடம், கண்ணகியை அடைக்கலமாக ஒப்படைத்துக் கோவலன் ஒற்றைச் சிலம்பை வியாபாரம் செய்து வர நகர்க்குள் நுழைந்தான். பெருஞ்செல்வர் குடியிற் பிறந்தவன் ஆகையாலும், புகார் நகரத்திருந்து மதுரை நகர் வரையிலும் நடந்து வந்திருந்தானாகையாலும் மிகவும் தளர்ந்த நடையோடு பெருந்தெருவிலே சென்றான். அப்பொழுது பெரியதோர் இமிலேறு அவனை எதிர்த்துப் பாய வந்தது. அதனை அப சகுனம் என்று உணராது மேற் சென்று கடைத் தெருவிற் புகுந்தான். கடைத் தெரு நடுவிலே பொன்னுருக்குவோரும் பணி செய்வோரு மாகிய நூற்றுவர் பொற்கொல்லர் பின்வர அவர்கட்குத் தலைவனாய் அரச மதிப்புப் பெற்றதற்கு அறி குறியாகச் சட்டை யணிந்து ஒதுங்கி நடந்து செல்லும் பெரும்பொற் கொல்லன் ஒருவனைக் கண்டான். அவனைக் கண்டதும் அவன் பாண்டிய மண்டலாதிபதியால் வரிசை பெற்ற பொற்கொல்லனாகும் என்று அறிந்து,

நெருங்கி, "ஐய, அரசன் தேவிக்கு ஆவதொரு சிலம்பை விலை மதித்தற்கு நீ வல்லையோ?" என்று கேட்டனன்.

அதற்கு அப்பொற் கொல்லன், "அடியேன் இச் சிலம்பை விலை மதித்தற்கு அரியேனாயினும், வேந்தர்க் குரிய முடி முதலிய அருங்கலன்கள் சமைக்கும் ஆற்றல் உடையேன்," என்று கை தொழுது கூறினன். கோவலன் அப்பொற் கொல்லனே தன் உயிர்க்கு யமதூதனும் என்பதை உணரலாகாமையால் எவராலும் புகழ்தற்கரிய சிலம்பைப் பொதிந்து வைத்திருந்த சிறு முடியை அவிழ்த்தனன். நாகத்தின் சிரோ மணியோடு வயிரமும் சேர்த்துக் கட்டிய மணிகள் அழுத்துங் குழிகளை யுடைய பசும் பொன்னாற் செய்த சித்திரத் தொழில் சிறந்த சிலம்பின் செய் வினையைப் பொய்த் தொழிற் கொல்லன் விருப்பத்தோடு பார்த்தனன். அவன் கண் சிலம்பின் திறத்தை நோக்கியதாயினும், மனம் குற்ற மில்லான்மேற் குற்றத்தை யேற்றும் வழியை ஆராய்ந்து கொண்டிருந்தது. சிறிது நேரம் மௌனமாயிருந்து, பிறகு அவன் கோவலனைப் பார்த்து, "ஐய, இச்சிலம்பு, கோப்பெருந்தேவிக்கல்லது, பிறர் எவர்க்கும் பொருந் தாது. யான் போய் அரசர் பிரானிடம் இச்செய்தி யைச் சொல்லித் திரும்பி வருங்காறும், என் புன் குடி லுக்கு அருகுள்ள இவ்விடத்தில் நீர் இரும்," என்று அரண்மனைக்குச் சென்றான். கோவலன் அக்கீழ் மகன் இருப்பிடத்துக்கு அயலதாகிய ஒரு தேவ கோட்டத்தி னுள் ஒதுங்கி யிருந்தான்.

இங்கு இவன் இவ்வாறிருக்க, அரண்மனை நோக் கிப் புறப்பட்ட பொற்கொல்லன், "யான் முன்னர்

மறைவிலே கவர்ந்துகொண்ட இராசமா தேவியின் காற் சிலம்பின் உண்மைச் செய்தி பலர் அறிய வெளிப்படும் முன்பு, மன்னவனிடம் அயலவனுகிய இப்புதியவனைக் குற்றவாளி யெனக் காட்டி, யான் என்னைக் காத்துக் கொள்வேன்,'' என்று உளத்துள் எண்ணிச் சென்றான். அப்பொழுது, பாண்டியன் நெடுஞ்செழியன், மதுரை நகரில் வாழும் நாடக மகளிரது ஆடற் காட்சியும், அபி நய விசேஷமும் அதற்கேற்ப அமைந்த பாடல் வேறு பாடும், யாழிசையின் பயன்களும் கண்டு கேட்டு மயங்கி ஆனந்தித்திருந்தான். அச்செய்தியைக் கேள்வியுற்ற கோப்பெருந்தேவி, மனம் மாறுபட்டு ஊடல் கொண்டு, உண்மைக்காரணம் வெளிப்படாதொளித்துத் தலைநோய் வருத்தம் மிகுதி யென்று கூறி, அரசன் தன் அந்தப் புரத்துக்கு வரும் சமயத்தில் அவனை நேரில் வந்து காணாது மறைந்து ஒடுங்கினாள். மன்னவன் மந்திரச் சுற்றத்தாரின் நீங்கிச் கோப்பெருந்தேவி கோயிலை அடைந்து, காப்பிட்டிருந்த வாயிற் கடையில் நின்று, தேவியைப் புகழ்ந்து போற்றிக் கதவு திறப்பிக்குமாறு வேண்டிக்கொண்டு நின்றான். அச்சமயத்தில் அவனைக் கண்ட பொற்கொல்லன், அவன் காலில் விழுந்து வணங் கிப் பலவாறு துதித்து, "கன்னக் கோலும் கவைக் கோலும் இன்றித் தன் மனத்தாற் பயின்ற மந்திரமே துணையாகக் கொண்டு வாயிற் காவலரை மயக்கித் துயில் வித்து, அரண்மனைச் சிலம்பினைக் களவாடிய கள்வன், முழக்க மிக்க இம்மதுரைப் பேரூரில் உள்ள காவலர்க்கு மறைந்து, அடியேனுடைய புன் குடிலகத்தே வந்திருக் கின்றான்,'' என்று கூறினன்.

வேப்ப மலர் மாலையுடையானாகிய பாண்டியன் நெடுஞ்செழியன், ஊர் காவலரை யழைத்து, "எனது தேவியின் காலணியாய சிலம்பு இவன் சொன்ன களவுத் தொழிலிற் றழும்பேறிய கள்வன் கையகத்திருக்குமாயின், அச்சிலம்பை இப்பொழுது ஊடல் தீர்த்தற்கு உதவியாகுமாறு அவனைக் கொன்று இவ்விடத்தே கொணர்வீராக," என்றவினைவிளைகின்ற காலமாதலின், சிறிதும் தேராது கூறினன். பாண்டியன் அப்பொழுது கூறவெண்ணியது அச்சொல் அன்றாயினும், கோவலனுக்கு வினை விளை காலம் ஆகையாலும், அவனுக்கு வினைவிளைகாலம் ஆகையாலும் கொல்ல என்று சொல்ல எண்ணியது கொன்று என்று மாறி வந்துவிட்டது. அங்ஙனம் ஏவல்தந்த அரசன் ஏவலரையும் உடனனுப்பியதால் கருந்தொழிற் கொல்லன் தான் எண்ணிய எண்ணம் நிறைவேறியதாய் எண்ணித் தீவினை யுருவமாய்த் தன்னைச் சூழ்ந்து வரும் வலைக்குள்ளே விழும் நிலையில் இருந்தும் அதனை அறியாதிருந்த கோவலனைக் குறுகினான்.

"வெற்றி மிக்க படைஞரை யுடைய பாண்டிய மன்னன் ஏவலால் சிலம்பு காண வந்தோர் இவர்," என்று கூறிப் பொய் வினைப்பொற்கொல்லன் சிலம்பின் செய்வினைச் செய்தி யெல்லாம் அவர்கள் அறியுமாறு தனித்து அழைத்துப் போய்க் கூறினன். அப்பொழுது சிலம்பு வைத்திருந்த கோவலனைக் கண்ட காவலர், "இவன் உடம்பின் தோற்றத்தாலும் முகக் குறிகளாலும் ஆராய்ந்தால், நீ கள்வன் என்று கூறும் அவனாகத் தோன்றவில்லை. இக்குற்றத்துக்காகக் கொலை செய்யப்

படத் தக்கவனும் இவன் அல்லன்,'' என்று பொற் கொல்லனைப் பார்த்துக் கூறினர். அதற்கு மறு மொழி யாகப் பெரும்பாவியாகிய அக்கொல்லன் களவு நூல் ஏதுக்களைக் காட்டிப் பின் வருமாறு கூறினன்:

''மந்திரம், தெய்வம், மருந்து, நிமித்தம், தந்திரம், இடம், காலம், கருவி என்ற எட்டையும் கள்வராவார் துணையெனக் கொள்வார். இக்கள்வனது வலியை யழித்துத் தப்புவதற்கு அறியாது இவன் பிரயோகிக்கும் மருந்திற் பட்டீராயின் நமது பெரிய புகழ் மிக்க வேந்தனால் மிகவும் கடுமையாகத் தண்டிக் கப்பெறும் நிலைமையை அடைவீர். கள்வர் தாம் உருவேற்றி யுள்ள மந்திரத்தை நாவால் வழுத்துவாராயின், அவரை நாம் கண்ணுற் காண இயலுமோ! தேவரைக் காணினும், காண லாம்; மந்திரம் பயின்ற கள்வரைக் காணல் எளிதன்றே? இவர் கள் தாங்கள் ஆதரித்து வணங்கும் தெய்வத்தின் அனுக்கிர கத்தைப்பெற்றுத் தமக்கு முன்னின்று உதவப்பெற்று விட்டா ராயின், கையிற் சிக்கிய பொருளை நம் கண் முன்னே காட்டி யும் மறைத்து விடுவர். இவர் மருந்தினாலே நம்மிடத்தில் மயக் கம் செய்வாராயின், நாம் இருந்த இடத்தை விட்டுப் புடை பெயர்ந்து செல்ல இயலுமோ? இவர் தாம் கருதிய சகுனம் வாய்த்தால் அல்லாமல், பெறுதற்கரும்பொருள் கைக்கண் வந்து புகுமாயினும் எடுத்துக்கொள்ளார். களவு நூற்சொல் லிய தொழில்களை எண்ணிச் செய்வாராயின், தாம் மண்ணுல கத்திலேயே யிருப்பினும் தேவலோக வாசியாகிய இந்திரன் மார்பில் உள்ள ஆரத்தையும் கவர்ந்து கொள்வார். இவ்விடத் திலே இப்பொருளைக் கவரலாம் என்னில், அவ்விடத்திலே அவரை யார் காண வல்லவர்? காலம் அறிந்து அவர் நினைந்த பொருளைக் கைக்கொண்டு விடுவாராயின், மேலோராயினும் விலக்க வியலுமோ? தக்க கருவிகளைத் துணையாகக் கொண்டு பெறற்கரும்பொருள்களைக் கைப்பற்றுவார்க ளாயின், இவ் வுலகில் அவர் செயலை யாவரே கண் கொண்டு காண வல்லார்

இவர்க்கு இரவுபகல் என்று இரண்டு இல்லை. இவரது களவுத் தொழிலை விரித்து உணர்த்த எம்மால் இயலுமோ? களவு நூற் செய்தி முழுவதும் யாம் அறிவோமாயின் நாம் ஓடியொளித் தற்கும் இடம் இல்லை.

“முன்னாளிலே ஒரு கள்வன் தூதுருக் கொண்டு வந்து, அரண்மனை வாயிலிலே பகற் பொழுதிற் காத்திருந்து, இராப் பொழுது வந்ததும் மாதருருக் கொண்டு அந்தப்புரத்தினுட் புகுந்து, விளக்கு நிழலிலே பள்ளியறையினுள் அஞ்சாது நுழைந்து அடங்கி, இந்நெடுஞ்செழியனுக்கு இளங்கோ வாகிய இளஞ்செழியன் துயில்கின்ற சமயம் அவனது மார் பில் உள்ள ஒளி மிக்க வயிர மாலையை விரைவில் வாங்கினான். துயிலுணர்ந்த இளஞ்செழியன் தோளிலே மாலையைக்காணாது உடைவாளை யுருவினன். அதனுறையைக் கள்வன் கையகத் தே பற்றிக் கொண்டான். இளஞ்செழியன் வாளாற் குத்துந் தோறும் கள்வன் அந்த உறையை நீட்டி, அக்குத்துக்களைத் தாங்கித் தடுத்தான். அது கண்டு சினமிக்கு மற்போர் செய்யப் புறப்பட்ட இளவரசனுக்கு அருகில் இருந்ததொரு பெரிய தூணைத் தானாகக் காட்டி மயக்கிவிட்டு, அக்கள்வன் மறைந் தான். அன்று தப்பிய கள்வனை இன்றுவரை யாரும் கண்டவ ரிலர். ஆதலால், களவு நூற் பயிற்சி மிக்க இக்கள்வர்க்கு நிகர் இவரேயன்றி வேறு எவரும் இலர். நும் கண்முன்னே நல்லோ னாகத் தோற்றும் இவன், நான் மேலே காட்டிய களவு நூன் முறை பற்றி ஆராய்ந்தால், தொழிற்றிறம் மிக்க கள்வன் ஆவனென்பது நுமக்கே புலப்படும்.”

அங்கு நின்றிருந்த அரச சேவகன் ஒருவன், இச் செய்தி முழுவதையும் கேட்ட பிற்பாடு, தான் அறிந்த செய்தி யென்று ஒன்றைக் கூறத் தொடங்கி, “முன் னாளிலே நிலத்தைத் தோண்ட உதவும் உளியை யுடைய னாய கருநிறமான ஆடையை யுடுத்தவனாய், பல வகைப் பட்ட பொற்கலன்களை நச்சிய வேட்கையாற் பற்றிய

பொருளை விடாது கொடும்பசி மிக்கபுலி போன்று சரக் காலத்து இடை யாமமாகிய கண் மயங்கும் இருள்வேளை யில் ஊரார் எல்லாம் துயிலால் மயங்கிய அமயத்தில் ஒரு கள்வன் வந்து தோன்ற யான் என் கைவாளை உறை கழித்துப் பற்றினேன். அவ்வாளை அவன் பிடுங்கிக் கொள்ள, அவனையும் என் வாளையும் இன்னும் நான் எவ்விடத்துங் காணவில்லை. ஆதலால், இக்கள்வர் செய்கை எவருக்கும் அறியவரிது. இங்குச் சிலம்பு கவர்ந்த கள்வனை நாம் நேரிற்கண்டும் நெகிழ விடுவோமா யின் அரசர் நம்மைத் தண்டிப்பார். ஆதலால், இதற்குச் செய்பற்குரிய தொன்றைத் துணிந்து கூறுமின். அறி வும் அனுபவமும் மிக்க உமது கருத்துப் போல நிறை வேற்றலாம்,' என்று பிற சேவகரைப் பார்த்தான்.

அவர்களுள் அறிவின்மையாற் கொலை யஞ்சாத கயவன் ஒருவன், கள் மயக்கம் மிக்க தன் அறிவுக்குத் தோற்றிய வண்ணம், கோவலனைக் கொல்வதே தகுதி யென்று துணிந்து, தன் கையிற் பற்றிய வெள்வாளை வீசிக் கோவலனை வெட்டி வீழ்த்தினன். கோவலன் பண்டைவினைப் பயத்தால் உயிரிழந்தான். பாண்டியன் நெடுஞ்செழியன் செங்கோலும் வளைந்தது. இரு வினை களும் செய்தாரை வந்து தொடர்தல் உறுதியே. ஆகையால், நல்வினையே செய்யப் பயில வேண்டும். பண் டை விளைவாகிய வினைப் பயத்தால் பாண்டியன் நெடுஞ் செழியனது வளையாத செங்கோல் வளைந்தது.

“ நண்ணும் இருவினையும்;நண்ணுமின்கள்நல்லறமே
கண்ணகிதன் கேள்வன் காரணத்தால்-மண்ணில்
வளையாத செங்கோல் வளைந்ததே பண்டை
விளைவாகி வந்த வினை.”

* சிலப்பதிகாரம்—கொலைக்களக் காதை.

# III

இமய மலையின் சிகரத்தில், தன் ஆணைக்கு அறிகுறி யாய் எழுதிய கயற் குறிக்கு அருகிலே எழுதப் பெற்ற புலியையும் வில்லையும் உடைய சோழர் சேரர் என்ற தமிழமன்னரும் பிறமன்னரும் தன் ஏவல் கேட்ப நிலவுலகம் முழுவதையும் ஆண்ட முத்தமாலை பொருந் திய வெண்கொற்றக் குடையையுடைய பாண்டியன் நெடுஞ்செழியனது அரண்மனையிலே திருப்பள்ளி யெ ழுச்சி முரசம் இயம்பியது. அம்முழக்கத்தைக் கேட்ட மதுரைப் புறஞ் சேரியிலுள்ள ஆய்ப்பாடியில் வாழ்ந்த மாதரி என்பவள், ஐயை என்ற தன் மகளை யழைத்து, கடை கயிறும் மத்தும் கொண்டு தயிர்த் தாழிக்கருகில் வந்து நின்றாள். அவள் தன் மகளைப் பார்த்து, "நமக்கு இன்று அரண்மனைக்கு நெய் அளக்கும் முறையாம். விரைவிலே வேண்டுவன செய்ய வேண்டும்," என்று கூறினள்.

பிறகு தயிர்த் தாழிகளைப் பார்த்து, "நாம் பிரை யிட்ட பால் தோயவில்லை. நமது மாட்டு மந்தையில் காளைகள் காரண மின்றியே கண்ணீர் உகுக்கின்றன. இவை இங்ஙனம் ஆவதால், நமக்கு வருவதோர் உற் பாதம் உண்டு. மேலும், முதல் நாளைய வெண்ணெய் உருக வைத்தது உருகவில்லை. ஆட்டுக் குட்டிகளும் துள்ளி விளையாடவில்லை. பசுக் கூட்டங்கள் மெய்ந்

நடுங்கி நின்று அழும். அவற்றின் கழுத்தில் உள்ள பெரிய மணிகள் விழுகின்றன. இவற்றால் இங்கு ஏதோ பெருத்த தீங்கு ஒன்று விளையும் என்று தோன்று கின்றது. ஆயினும், மகளே, அஞ்சாதே. முற்காலத் திலே ஆயர் பாடியில் எரு மன்றத்திலே மாயவனும் பல ராமனும் ஆடிய பால சரித நாடகங்கள் பல உள. அவற்றுள் நப்பின்னைப் பிராட்டியோடு கண்ணபிரான் கை கோத்து ஆடிய குரவைக் கூத்தை இக்கண்ணகி கண்டு நிற்க யாம் ஆடக்கடவோம் இக்கறவையும் கன் றும் பிணி நீங்குக,'' எனக் கூறினள்.

மாதரியின் விருப்பிற் கிணங்க அவ்வாய்ப்பாடிப் பெண்டிர் குரவைக் கூத்து ஆடத் தொடங்கினர். ஏழு இளம் பெண்களை ஏழு இசைகளின் இயைபு நிகர்ப்ப ஒழுங்குற நிறுத்திக் குரவைக்கூத்துத் தொடங்கப்பெற் றது.ஏழு மகளிரும் கைகோத்து முறைவழுவாது பாடி யாடினர். பாண்டியன் சோழன் சேரன் என்ற மூவேந் தரையும் திருமாலுக்கு நிகராக வைத்துச் சில பாடல் கள் பாடினர். திருமாலுக்குத் தோத்திரமாகச் சில பாடல்கள் பாடினர். தெய்வத் தோத்திரம் செய்வதால் தமக்கு எதிர் காலத்தில் வரலாகும் என்று எண்ணும் தீமையைப் போக்கிக்கொள்ளலாம் என்பது அவ்வாய் மகளிர் கொள்கையாதலால், அவ்வாறு செய்தனர். இறுதியிற் பாண்டியனை மனமார வாழ்த்திக் குரவை நாடகத்தை ஆடி நிறைவேற்றினர்.

மாதரி இங்ஙனம் இளம்பெண்கள் ஆடிய குர வைக் கூத்து முடிந்தவளவிலே, நீர்ப் பெருக்கு மிக்க வையை யாற்றின் கரையை யடைந்து, திருமாலைத் தியா

னித்துப்பூக்களாற்பூசித்து, வணங்கிநீராடப்போயினுள். அப்பொழுது அந்நகரத்துக்குப் போய்த் திரும்பிய ஓர் இடைப் பெண் தான் அங்குக் கேட்டதொரு செய்தியை ஆயர் சேரியிலே தெரிவிக்க விரைந்து வந்தாள். அவள், கண்ணகியின் இளமையையும் அழகையும் கண்டு, தான் கேட்ட செய்தியை அவளிடம் கூறத் துணியாமல், அயலிலிருந்த ஆயச் சிறுமிகளிடம் கூறி மன வருத்தத்தாற் கண்ணீர் உதிர்த்து நின்ருள்.

அக்காட்சியைக் கண்ட கண்ணகி, "தோழியே, யான் நகரத்துட் சென்ற என் காதலர் திரும்பி வரக் காண்கிலேன். நெஞ்சு மிகக் கலங்கி வருந்துகின்றேன். கொல்லுலைக் குருகுபோலப் பெருமூச்சு எழுகின்றது. இன்னது விளைந்தது என்று எனக்குத் தோன்றவில்லை. மதுரையிலே அயலார் பேசிக்கொண்டதென்ன? தோழியே, கூருய். நண்பகற் போதிலே உடல் நடுங்கும். நோய் மிகும். அன்பரைக் காணுமையால், என் நெஞ்சு வருந்தும். அங்குளார் கூறியதென்ன? தோழி, இவ்வயலார் சொல்லும் மறை எளிதன்று: என் தலைவரையும் காண்கின்றிலேன். என்னை வஞ்சித்த தொன்றுண்டு. என் நெஞ்சும் மயங்குகின்றது. செய்தி இன்னதென்று கூருய்," என்று மிக்க துயரத்தோடு கூறினள்.

அதற்கு அவள், "அரசன் வாழும் அந்தப்புரத்தில் இருக்கும் அழகு சிறந்த சிலம்பை வருத்தமின்றிக் கவர்ந்து தன் கையில் வைத்திருந்த கள்வன் இவனேயாம் என்று அரசனேவலர் நினது தலைவரைக் கொன்றனர்," என்ருள். அது கேட்டதும் கண்ணகி, பொங்கியெழுந்தாள்; விழுந்தாள்; திங்கள் முகிலோடு நிலத்தில்

விழுந்ததுபோல விழுந்து கண்சிவப்ப அழுதாள்; பிறகு தன் தலைவனை நினைந்து, "அந்தோ! நீர் எங்கிருக்கின்றீர்?" என்று கூறிப் புலம்பினள்.

பிறகு, "தம்மோடு இன்புற வாழ்ந்த தம் கணவர் இறந்து அவர் உடம்பு எரியில் மூழ்க அதனைக்கண்டும் தம் உயிரை இழவாது துன்பம் மிக்க கைம்மை நோன்பு நோற்றுத் துயருறும் உயவற் பெண்டிரைப்போல, மக்களெல்லாம் தன்னைப் பழிக்கும்படி பாண்டியன் தவறு செய்ததால், அன்பரை இழந்து யான் துயருற் றழிவதோ? அகன்றமார்பினை யுடைய தமது கணவரை இழந்து ஏங்கி நீர்த் துறைகள் பலவற்றுள்ளும் தாம் குளிரப் புகுந்து மூழ்கித் துயருறும் உயவல் மகளிர் போலப் பாவம் பெருகி அற நிலை தவறிய பாண்டியன் செய்த குற்றத்தால் அறக்கடவுள் என்ற அறிவிலியே, யானோ துயருறுவேன்? செம்மையின் நீங்கிய கொடுங் கோலையுடைய தென்னவன் தவறிழைத்தலால், யான் கைம்மை கூர்ந்து இளமையிலும் இசையிழந்து வாழ் வனோ?" என்று கூறிப் புலம்பிவிட்டு, ஆய மகளிரைப் பார்த்து, "வாய்ப்புடைத்தாகிய உற்பாத சாந்தியின் பொருட்டுக் குரவைக் கூத்து ஆடும்பொருட்டு இங்கு வந்து திரண்ட ஆய மகளிர் எல்லீரும் கேண்மின்கள். உலகிலுள்ள எல்லாப் பொருள்களையும் அறியும் சாக்ஷி யாகிய கதிர்ச் செல்வனே, நீ அறிய என் கணவர் கள் வரோ?" என்று கேட்டாள். அதற்கு மறு மொழி யாக, அசரீரியாகிய ஒரு குரல், "தாயே, நின் கணவன் கள்வன் அல்லன்; அவனைக் கள்வன் என்ற இவ்வூரைத் தீயுண்ணும்," என்றது.

அதைக் கேட்டதும் கண்ணகி மற்றைச் சிலம்பைக் கையில் எடுத்துக்கொண்டு அவ்வாயர் பாடியினின்று மதுரை நகர்க்குட் புகுந்தாள். வழியிலே கற்புடைப் பெண்டிர் பலரைக் கண்டு, "அறநெறிக் கேற்ப முறை செய்ய அறியாத அரசனிருக்கும் ஊரில் இருந்து வாழும் கற்புடைப் பெண்டிர்காள், இவ்வநியாயத்தைக் கேளுங்கள்: உலகிற் பிறந்தார் ஒருவரும் படாத பெருந் துயரம் பட்டேன். அதனால், மரண வேதனையு மடைந்தேன். பிறர் எவரும் அடையாத பெரும்பேறும் யான் அடைந்தேன். என் கணவர் கள்வரல்லர். என் காற் சிலம்பு பெறும் விலையைக் கவருங் கருத்தால் அவரைக் கள்வர் என்ற ஒருபெயரிட்டுக் கொன்றனரே! தம் கணவரது அன்பைப் பெற்ற கற்புடைப் பெண்டிர் முன்னே என்னுடைய கணவரைப் பண்டுபோற் காண்பேனோ! அவ்வாறு காண்பேனாயின், அவர் வாக்காற் சொல்லும் குற்றமற்ற நல்லுரையைக் கேட்பேனோ? அவ்வாறு கேளாது ஒழிவேனேல், 'இவள் அக்கிரமம் செய்தாள்,' என்று என்னை இகழ்மின்கள்," என்று பலவாறு கூறிப் புலம்பி யழுதாள்.

இவ்வாறு அல்லல் மிக ஆற்றாது அழும் கண்ணகியைக் கண்டு, மதுரையார் எல்லாரும் மிகவும் வருந்தி மயங்கி, "நமது மன்னவன் செங்கோல் இவட்குக் களையலாகாத் துன்பந் தந்து, தானும் வளைந்ததே! இஃது என்ன காரணமோ! மன்னர் மன்னனாகிய மதி போலும் வெண்குடையையுடைய நெடுஞ்செழியனது அரசியல் அழிந்ததே! இஃது என்னே! உலகத்தை எல்லாம் குளிர்விக்கும் பாண்டியன் குளிர்ந்தகுடை வெம்மை

விளைத்ததே! இஃது என்னே! யாதுவிளையும் கொல்லோ! அறியோம்,'' என்று கூறி யேங்கினர்; "தெய்வம் ஏறி ளுள்போல இக்கற்பின் செல்வி அழுது ஏங்கி அரற்றுகின்றனளே! இஃது என்கொல்!'' என்று கூறி வருந்தி ஆற்ற முயன்றனர். அரசனைத் தூற்றும் மாந்தர் மிகுந்தனர். அவ்வூரில் ஓர் இடத்திலே பிறர் காட்டத் தன் கணவன் பிணத்தைக் கண்டாள் அக்கற்பரசி. மாலைக் காலமும் வந்தது. காலையிலே வெட்டுண்டு அங்கு விழுந்து கிடந்த தன் கணவனைக் கண்ணகி மாலையிலே கண்டாள்.

பிணத்தின்மேற் புரண்டு விழுந்து புலம்பி, "தலைவரே, என் பெருந்துயர் கண்டும்இவள் துயருறுகின்றாள் என்று எண்ணுகிலீர். சந்தனுதிகளால் ஆடும் தன்மை பெற்ற நும்முடைய பொன் போன்ற திருமேனி இவ்வண்ணம் பொடியாடிக் கிடக்கத் தகுவதோ? மன்னனால் இபன்ற இக்கொலைத் தொழில் இவ்வாறு முடிந்ததென்றறியாத எனக்கு முற்பிறப்பிலே யான் செய்த தீவினைப்பயன்தான் இதுஎன்று யாரேனும்உரையாரோ? துணையொருவருமின்றி, மருண்ட மாலை நேரத்திலே துன்புறும் தமியேன் முன் உமது திருமார்பு தரையில் மூழ்கிக் கிடத்தலாமா? உலகமெல்லாம் பழி தூற்றப் பாண்டியன் கொடுங்கோன்மையால் யான் அடைந்த இத்துயரம் என் வினைப் பயனே யென்று எவரும் உரையாரோ? கண்ணீர் சோர்ந்து வருந்தும் கடிய தீவினையுடையேன் முன் புண்ணினின்று பொழியும் இரத்தவெள்ளத்திலே படிந்து இவ்வாறு நீர் பொடியாடிக் கிடத்தலாமா? உலகத்தார் பழி தூற்ற இவ்வண்ணம் மன்னன் செய்த தவறு இன்னவர் தீவினைப் பயன்

என்று எவரும் கூறுரோ?'' என்று பலவாறு புலம்பினள். மேலும்,

"பெண்டிரு முண்டுகோல்! பெண்டிரு முண்டுகோல்!
கொண்ட கொழுநர் உறுகுறை தாங்குறூஉம்
பெண்டிரும் உண்டுகோல்! பெண்டிரும் உண்டுகோல்!
சான்றேரும் உண்டுகோல்! சான்றேரும்உண்டுகோல்!
ஈன்ற குழவி யெடுத்து வளர்க்குறூஉம்
சான்றேரும் உண்டுகோல்! சான்றேரும் உண்டுகோல்!
தெய்வமும் உண்டுகோல்! தெய்வமும் உண்டுகோல்!
வைவாளிற் றப்பிய மன்னவன் கூடலிற்
றெய்வமும்உண்டுகோல்! தெய்வமும் உண்டுகோல்!''*

என்று கூறி அழுதாள். பிறகு கணவனைத் தழுவிக் கொண்டாள். அவன் உறங்கி விழிப்பான்போலஎழுந்து, 'மதிபோன்ற உன் முகம் கன்றியதே!' என்று கூறி, அவள் கண்ணீரைக் கையால் மாற்றினன். அவள் கணவன் அடியிற் பணிந்தாள். தன்னுடம்பைக் கைவிட்டுச் சுவர்க்கம் புக எழுந்த அவன், 'நீ இங்கிருக்க,' என்று கூறி, அமரரொடு சென்றான்.

அது கண்ட கண்ணகி, "இஃது என்ன! மாயமோ, வேறென்னே! என்னை மருட்ட வந்த தெய்வமோ? என் தலைவரை எங்குப்போய்த் தேடுவேன்? அஃது எளிதாயினும் என் சினம் தணிந்தன்றிக் கூடேன். கொடிய வேந்தனாகிய பாண்டியனைக் கண்டு, இச்செய்தியைக் கேட்பேன்,'' என்றாள். பின்னர் எழுந்து, தான் முன் கண்ட தீக்கனவை நினைந்து, கண்ணீர் சொரிந்து, பிறகு கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, பாண்டியன் நெடுஞ்செழியன் அரண்மனை வாயில் முன் போய் நின்றாள்.

---

* சிலப்பதிகாரம் - ஊர் சூழ் வரி

## IV

பாண்டியன் நெடுஞ்செழியன் அரண்மனையின் அந்தப்புரத்தில் இருந்த கோப்பெருந்தேவி, சூரிய உதய காலத்துக்குச் சிறிது நேரத்திற்கு முன்பு ஒரு கொடுங் கனவைக்கண்டு, தன் தோழியரிடம் கூறுவாளாயினள். கோப்பெருந்தேவி, "தோழியரே, அரசர் வெண்கொற்றக் குடை விழவும், செங்கோல் சரிந்து விழவும், ஆராய்ச்சி மணி நின்று நடுங்கவும் காண்பேன். அன்றியும், எட்டுத் திசைகளும் அதிர்கின்றன. கதிரை இருள் விழுங்கவும் காண்பேன். மின்னற் கொடி இரவிலே தோன்றி விழும். சூரியனும் நக்ஷத்திரங்களும் பகலிலே தோன்றி விழக் காண்பேன். என்ன விளையுமோ! செங்கோலும் வெண் குடையும் நிலத்து மறிந்து விழுதலாலும், நம் அரசர் பிரானது அரண்மனை வாயிலில் உள்ள ஆராய்ச்சி மணி நடுங்குதலாலும், என் உள்ளம் நடுங்கும். இரவிலே மின்னல் விழுதலாலும், பகலிலே விண் மீன்கள் விழுதலாலும், எண்டிசைகளும் அதிர்தலாலும் நமக்கு விரைவிலே பெருத்ததொரு துன்பம் விளையும் எனத்தோன்றுகிறது. அரசர் பெருமானிடம் இதனை நாம் தெரிவிப்போம்," என்று கூறினள்.

உடனே அரசன்றேவியின் சிலதியராகிய பெண்டிர் பலர் அங்குக் கூடி, அவிர்ந்து விளங்கும் மணியிழையினராய், ஆடி, கலன், கோடி, பட்டு, செப்பு, வண்ணம்,

சுண்ணம், மான்மதச் சாந்து, கண்ணி, பிணையல், கவரி, தூபம் முதலியவற்றை ஏந்தி, முன் செல்வாராயினர். கூனும் குறளுங்கூடிய குறுந்தொழில் இளைஞர் செறிந்து சூழ்ந்தனர். 'வையங் காக்கும் பாண்டியன் பெருந்தேவி வாழ்க,' என்று பேரிளம்பெண்டிர் பலர் வாழ்த்தினர். தன்னைச் சூழ்ந்து வந்த பெண்கள் கூட்டத்தோடு கோப் பெருந்தேவி அரசனை யடைந்து, தான் கண்ட தீக்கனவை உரைத்தாள். அதைக்கேட்டு இன்னது விளையும் என அறியானாய், அரியணைமீது அமர்ந்திருந்தான் அம் மன்னர் பெருமான்.

இங்கு இவன் இவ்வாறிருக்கக் கண்ணகி அரண் மனை வாயிலில் வந்து நின்றுகொண்டு, "வாயிலோயே, வாயிலோயே, அடியோடு அறிவிழந்து, செல்லும் நெறி யறியாது மயங்கிய மனத்துடன் அரசநெறி பிழைத்த பாண்டியன் அரண்மனை வாயிலகத்துள்ள வாயிலோயே, 'இரட்டைச் சிலம்புகளில் ஒன்றை ஏந்திய கையினள், கணவனை இழந்தவள், வாயிலகத்திருக்கின்றாள்,' என்று அறிவிப்பாய்," என்றாள். அதுகேட்ட வாயில் காவலன், அரசன் முன் சென்று நின்று,

"தென்னம் பொருப்பிற் றலைவ வாழி !
செழிய வாழி ! தென்னவ வாழி !
பழியொடு படராப் பஞ்சவ வாழி!"*

என்று அவனை வாழ்த்திவிட்டு, "அரசே, மகிஷாசுரனைச் சங்கரித்து, அவன் முடித் தலைமேல் ஏறிய துர்க்கை யல்லள்; சப்தகன்னியரில் இளைய நங்கையாகிய பிடாரி யும் அல்லள்; இறைவனைத் தன்னொடு ஒப்ப ஆடச்

---

* சிலப்பதிகாரம்-வழக்குரை காதை

செய்தருளிய கானகம் உகந்த காளியும் அல்லள்; தாருகன் மார்பைக் கிழித்த பெண்ணும் அல்லள்; கோபம் கொண்டவள் போலவும் பகைத்தாள் போலவும் தோன்றுகின்றாள்; பொன்னால் அழகுற அமைந்த சிலம்பொன்றை யேந்திய கையினை யுடையளாய்க் கணவனை யிழந்தாள் ஒருத்தி வாயிலில் நிற்கின்றாள்; நம் அரண்மனை வாயிலில் நின்று முறையிடுகின்றாள்,'' என்று கூறினன். அதைக் கேட்ட பாண்டியன், 'அவளை இங்கே அழைத்து வருக!' என்று ஆணையிட்டனன்.

வாயில் காவலன் வாயிலுக்கு வந்து, கண்ணகியை அழைத்துச்சென்று, அரசன் முன் விடுத்தான். அவள் நெருங்கியபோது பாண்டியன் அவளைப் பார்த்து, "நீர் வார்ந்த கண்ணுடன் எம் முன் வந்து முறையிடுகின்ற மடக் கொடியே, நீ யார்? உனக்கு எய்தியதென்ன?'' என்றுகேட்டான். அதற்கு மறுமொழியாகக் கண்ணகி, "ஆராயாது முறை செய்யும் அரசே, யான் சொல்வது கேட்பாயாக: இகழ்தற்கில்லாத சிறப்பினையுடைய இமையவர் வியக்குமாறு, வல்லூற்றால் புறவுக்கு நேர்ந்த இடையூற்றை நீக்கும்பொட்டுப் புறவின் நிறையளவு ஊன் தருவதாகக் கூறித் தன் உடம்பின் தசையை மிகுதியாய் அரிந்து வைத்தும் பற்றாமையால் தானே துலையில் ஏறி நின்று அடைக்கலங் காத்த சிபியும், அரண்மனை வாயிற் கட்டி வைத்திருக்கும் ஆராய்ச்சி மணியின் நடு நா நடுங்கும்படி கன்றை யிழந்த பசு அம்மணியைத் தன் கோட்டாற் புடைத்துக் கண்ணீர் சொரிந்து நிற்க அவ்வருத்தத்தைக் காணச்சகியாது மனம்வருந்தித் தான் தனது அரும்பெறற்புதல்வனைத் தேர்ச்சக்கரத்தாற்

கொன்றவனாகிய மனுச்சோழனும் இருந்து அரசாண்டதாற் புகழ் படைத்த புகார் நகரம் என்ற காவிரிப்பூம் பட்டினம் எனது பிறப்பிடமாம். அவ்வூரிலே இகழ்ச்சியற்ற சிறப்பையுடைய புகழ் மிக்க பெருங்குடி வாணிகருள் மாசாத்துவான் என்பாரது மகனாராய்ப் பிறந்து, இந்நகரில் வாழ வேண்டும் என்ற கருத்தோடு வந்து, வினைப் பயனாற் கொலைக் களத்திலே இறந்த கோவலர் என்பாரது மனைவி யாவேன். கண்ணகி என்பது என் பெயர்," என்று கூறினள்.

அது கேட்ட பாண்டியன், "பெண்ணணங்கே, கள்வனைக் கொல்லுதல் கடுங்கோல் அன்று; செங்கோலின் சிறப்பேயாம்," என்று கூறினன். அதற்குக் கண்ணகி, "நன்னெறியை நயவாத கொற்கை வேந்தே, என் காற்பொற்சிலம்பின் பரல் மாணிக்கமாம்," என்றாள். அது கேட்ட அரசன், அச்சிலம்பைத் தருவித்து வைக்கக் கண்ணகி அதனை உடைத்தாள். உடனே மாணிக்கப் பரல் அரசன் முகத்தெதிரில் தெறித்து விழுந்தது. அதனைக் கண்ட நெடுஞ்செழியன், மனம் மிகவும் வருந்தி, "தாழ்ந்த குடையன்! தளர்ந்த செங்கோலன்! பொன்செய் கொல்லன்தன் சொற்கேட்ட யானோ அரசன்! யானே கள்வன்!! உலகவுயிர்களை அறநெறியினின்று காப்பாற்றும் தென்னாட்டரசு என்னிடம் தவறியது. இனி யான் உயிர் வாழ்வதைக்காட்டிலும் இறப்பதே சிறப்பாம். இன்றே, இன்னே, என் வாழ்வு கெடுக," என்று கூறிக்கொண்டு, அரசு கட்டிலிற் சாய்ந்தான். அங்கு அருகிலிருந்த கோப்பெருந்தேவி குலைந்து நடுங்கி, "கணவனை யிழந்தோர் மனம் அமைதியடையும்

படி, 'இன்னவரைப் பார்த்து ஆறுக; இப்பொருளைப் பார்த்து ஆறுக' என்று காட்டக் கூடிய பொருள் ஒன்றும் இல்லை,'' என்று கூறிக்கொண்டு, கண்ணகியைத் தொழுது விழுந்தாள்.

அவளைக் கண்ட கண்ணகி, "பாவம் செய்தார்க்குத் தர்ம தேவதையே கூற்றமாம் என்னும் அறிவுடையோர் சொல் பழுதன்று. ஆகையால், சொல்லற்கரிய அக்கிரமத்தைச் செய்த பாண்டியன் தேவியே, தீவினைப் பயத்தால் இப்பாடுபடும் யான் செய்வது காண்: என் கண்ணிலிருந்து பொழிந்த கண்ணீரும் கையிலுள்ள ஒற்றைச் சிலம்பும் உயிர் ஒப்பாம் நாயகரையிழந்த தோற்றத்தோடு யான் வந்த காட்சியும் மாபாவியாகிய எனது கருங்குழலும் கண்டு நினது நாயகனாகிய கூடல் வேந்தன் நெடுஞ்செழியன் உயிரையிழந்து உடம்பு வெறுங் கூடு ஆக அரசு கட்டிலிற் கிடந்தான்,'' என்று கூறினள்.

'செங்கோன்மையைத் தம் செல்வமாகக் கருதிப் போற்றும் பாண்டியர் குடியிற் பிறந்த நெடுஞ்செழியன், அறம் நிலை பெற்ற தனது அவைக்களத்திலே செங்கோலும் குடையும் தளரத் தனது தேவி கண்ட கனா உள்ளவாறே பலிக்க இந்நாள்காறும் தான் காத்திருந்த அறத் தெய்வமே தன்னை யொறுக்க, உயிர் இழந்த அதனாலும் தன் பெருமையே விளக்கினான். 'மானம் பட வரின் வாழாமை யினிது' என்றும், 'மயிர் நீப்பின் வாழாக் கவரிமா அன்னார் உயிர் நீப்பர் மானம் வரின்,' என்றும் பெரியார் பேசிய அறவுரை பொய் யாகப் பார்ப்பனோ அவ்வேந்தல்? களவு செய்தாரைக் கையறுத்தலே முறையென்று அற நூல் விதித்திருக்

கத் தன் தேவியின் சிலம்பைக் களவாடினன் என்று பொற்கொல்லன் சொல்லாற் குற்றவாளியெனத் தான் கருதிய கோவலனுக்கு விதித்த தண்டம் பொருத்த முடைத்தன்றே? செங்கோன்மைச் சிறப்பே தன் சிறப் பாக எண்ணியிருந்த நெடுஞ்செழியன் இவ்வண்ணம் செய்தது எவ்வாறு பொருந்தும்?' எனவெழும் வினாக் களுக்கு விடையிறுத்தல் எளிதன்று. சாமானியமாகக் களவு செய்தாரைக் கையறுத்தலே தண்டமாம். ஆயி னும், அரசனது தேவி சிலம்பைக் களவாடிய ஒருவன் கள்வருள் மிகவும் பயின்று தழும்பேறியவனாதலால், அவன் வேறு பல பாவங்களும் செய்து குடிமக்கட்குத் தீங்கு இழைக்கக் கூடுமாதலால், அத்தகையானைக் கொல்லுதலே முறையென்று அறிவுடையார் சொற் கேட்டு விதித்துக்கொண்டனன்போலும். கள்வனைக் கோறல் கடுங்கோல் அன்று என்று நெடுஞ்செழியனே கூறுதலால், மாந்தராவார் எல்லாம் அவ்வாறு தண்டித் தல் பொருத்தம் என்றே அங்கீகரித்திருந்தனர் என்று அறியலாம். கள்வருக்குச் சிறை வாசம் விதிக்கும் இந் நாள் முறைபற்றி முன்னோர் முறையை யாராய்தல் பொருத்தம் உடைத்தன்றாம்.

"மெய்யிற் பொடியும் விரித்த கருங்குழலும்
கையிற் றனிச்சிலம்புங் கண்ணீரும்—வையைக்கோன்
கண்டளவே தோற்றான்அக் காரிகைதன் சொற்செவியில்
உண்டளவே தோற்றான் உயிர்." *

---

* சிலப்பதிகாரம் - வழக்குரை காதை

## V

கண்ணகி, அரசன் இறந்ததையும், இராச மாதேவி மயங்கிக் கிடந்ததையும் பொருட்படுத்தாது, பின்னும் சில கூறினள். அவள் பேசியன அனைத்தும் இராச மாதேவி உயிர் போக்கும் அம்பும் வேலும் வாளும் ஆக இருந்தன. முழக்கம் மிகப் பேசும் பத்தினித் தெய்வத்தின் வஞ்சின மொழியை இராச மாதேவி மயக்கத்தினிடையே கேட்டாள். அவள் தன் தலைவன் நெடுஞ்செழியன் மயங்கி வீழ்ந்தான் என்று எண்ணி அவன் இறந்ததை அறியாதிருந்ததால் கண்ணகியை நோக்கி, "யாம் செய்த குற்றத்தைப் பொறுத்து எம்மைக் காப்பாற்றுக. பத்தினிக் கடவுளின் மிக்க தெய்வ முண்டோ?" என்று வணங்கி வீழ்ந்தாள்.

அதனைக் கேட்டும் கண்ணகி, "அரசன் தேவியே, மாபாவியாகிய யான் மாதர்க் கணிகலமாகிய பேதைமையே பூண்டு உலகவியல்பு ஒன்றும் தெரியாத இயல்பினை உடையேனாயினும், கூறுவதைக் கேட்பாய்: பிறனொருவனுக்கு முற்பகலிலே கேடு செய்தவன், பிற்பகலிலேயே தனக்குக் கேடு வருதலைக் காண்பான்.

"பிறர்க்கின்னா முற்பகற் செய்யிற் றமக்கின்னா
பிற்பகற் றாமே வரும்."

என்பது அறவுரையன்றோ? பிறிதோர் ஊரிலே தான் மணம் புரிந்த செய்தியை நம்பாது தன்னை இழித்

துரைத்த தன் தலைவன் மூத்த மனைவிக்குத் தான் மணம் புரிந்த ஊரிலே சான்ருய் இருந்த வன்னி மரமும் மடைப்பள்ளியுமே வந்து தன் உண்மைக் கற்பு நிலையை விளக்குமாறு செய்த வணிகர் குலக்கொடியும்; காவிரிக் கரையிலே தன்னை யொத்த பெண்களுடன் நீராடி வண்ட லயர்ந்துகொண்டிருக்கையில் ஒரு மணற்பாவையைக் காட்டி, 'இஃதுன் கணவன்,' என்று பிறர் கூற, அவ்வுரையை அவ்வாறே யேற்றுக்கொண்டு, மனையகம் நோக்கித் திரும்பிய பெண்களொடு திரும்பாது, தண்ணீரலை வந்து அம்மணற் பாவையை அழியா வண்ணம் காவல் செய்து நின்ற இளங்குமரியும்; சோழன் கரிகாற் பெருவளத்தானுக்கு மகளாய்ப் பிறந்து, வஞ்சி வேந்தனாகிய ஆட்டனத்தி என்பானுக்கு வாழ்க்கைப்பட்டுக் காவிரிப் புதுப்புனல் விழாக் காலத்தில் அவனோடு நீராடச் சென்று, அக்காலத்தில் அவனைக் காவிரி இழுத்துக்கொண்டு செல்ல, அது கண்டு பொருது புலம்பிக்கொண்டே காவிரி செல்லுமிடமெல்லாம் சென்று கடலை யடைந்து தேடி அங்குத் தன் கணவனைக் கண்டு, அவனை யழைத்துக்கொண்டு தன்னுடு வந்து அடைந்த ஆதி மந்தி யென்ற கற்பரசியும்; தனது கணவன் திரை கடலோடித் திரவியம் தேடச் சென்றிருந்ததால் அவன் வருங்காறும் வேறு எவர் முகத்திலும் விழியாதிருக்குமாறு கடற்கரை சென்று கலம் வரு திசையை நோக்கிக் கல்லாய்ச் சமைந்து நின்று, அவன் வந்ததும் முன்போல உயிர் பெற்று எழுந்து அவனுடன் மனையகம் வந்து புகுந்த மாதர்க்கரசியும்; தன்னையொத்த மாற்றவள் குழவி

கிணற்றில் விழக்கண்டு தன் குழவியையும் கிணற்றிலே வீழ்த்துப் பிறர் எவரும் அறியத் தன் கற்பின் சிறப்பால் இரு குழவியரையும் எடுத்து வளர்த்துக்கொண்ட பெண் மணியும்; அயலா னொருவன் தன் முகத்தைத் தீய நோக்கத்தோடு பார்க்கக் கண்டு முழு மதி யொத்த ஒளி விளங்கிய தனது முகத்தைத் தன் கணவன் வருங் காறும், 'குரக்கு முகமாயிருக்க,' என நினைத்து அவ்வாறு அமையப் பெற்றுத் தலைவன் வந்ததும் இயற்கை யுருவத்தை யடைந்த ஏந்திழையும்; பெரியோர் கூறிய,

"நுண்ணறி வுடையோர் நூலோடு பழகினும்
பெண்ணறி வென்பது பெரும்பே தைமைத்தே."

என்ற அறிவுரைக் கிணங்கப் பெண்கள் வண்டலாடுமிடத்தில், 'யான் ஒரு மகளும் நீ யொரு மகனும் பெற்றால், அவ்விருவருக்கும் மணம் புரிவிக்கலாம்,' என முன்னே தாம் பேசிக்கொண்டதை யெண்ணி அவ்வாறு செய்ய மனமின்றி வருத்த முற்ற பெற்றோர் உரையை மறைந்து கேட்டுத் தன் தாயின் மனத்தில் எண்ணிய சிறுவனே தனக்குத் தலைவனாகுகவென மணப் பெண் போல ஆடையணி யணிந்து, பெற்றோர் ஆணை எதிர் பாராமலே அவனுக்கு மாலையிட்ட மங்கையர்க் கரசியும்; அவள் போன்ற பிற பெண்டிரும் பிறந்த புகார் நகரத்திலே பிறந்தேன். அற முறைக்கேற்ப யானும் ஒரு கற்புடைப் பெண்ணாயிருப்பது மெய்யாகில், உங்களை இனி இவ்வுலகில் வாழவொட்டேன்; உங்கள் அரசாட்சியையும் அரசிற்கிடமாகிய மதுரையையும் அழிப்பேன். எனது இப்பிரதிஞ்ஞையின் முடிவை நீயே காண்பாய்," என்று கூறி, அவ்விடம் விட்டகன்றாள்.

பிறகு கண்ணகி மறுகின் நடுவில் நின்றுகொண்டு, "நான்மாடக் கூடல் நகரில் வாழும் மகளிரும் மைந்தரும் வானகத்தில் வாழ்வுறும் தேவரும் பிற மாதவரும் கேண்மின்கள்: என் அன்பிற்குரிய தலைவரைக் கொடுங்கோன் முறையாற் கொன்ற அரசன்மீதும் அவன் ஆண்ட நகரின்மீதும் யான் சினம் கொண்டேன். என்னிடம் யாதும் குற்றமில்லை," என்று கூறிவிட்டு, இடமார்பை வலக் கையால் திருகி, மதுரை நகரை மூன்று முறை வலம் வந்த பிறகு, பெருந்தெரு நடுவிலே எறிந்தாள். அக்கணத்தில் அவளெதிரே, நீல நிறத்தினனும் செக்கர் வார் சடையானும் பால்போல் வெள்ளெயிற்றுப் பார்ப்பனக் கோலம் பூண்டானும் ஆகிய அக்கினி தேவன் தோன்றினன். அவன், "மாபத்தினியே, நினக்கு மன வருத்தம் தரும் தவற்றை இழைக்கும் காலத்தே இந்நகரத்தை விழுங்கி யழிக்குமாறு முன்பே யான் ஓர் ஆணை பெற்றுளேன். இப்பொழுது யான் யார் யாரை யொழித்து, யார் யாரை யழித்தல் வேண்டும்?" என்று கேட்டனன். கண்ணகி,

"பார்ப்பார் அறவோர் பசுப்பத் தினிப்பெண்டிர்
மூத்தோர் குழவி யெனும்இவரைக் கைவிட்டுத்
தீத்திறத்தார் பக்கமே சேர்க." *

என்று ஆணை தந்தாள். பாண்டியன் நெடுஞ்செழியனால் அறநெறி பிழையாது ஆளப்பெற்றுவந்த மதுரை நகரம், அன்று கண்ணகி யென்ற மாபெரும்பத்தினியின் கற்புத் தீயால் எரிந்து அழிந்தது.

---

* சிலப்பதிகாரம்—வஞ்சின மாலை

"போற்பு வழுதிபுந்தன் பூவையரு மாளிகையும்
விற்பொலியுஞ் சேனையுமா வேழமும்—கற்புண்ணத்
தீத்தரு வெங்கூடற் றெய்வக் கடவுளரும்
மாத்துவத் தான்மறைந்தார் மற்று." *

கற்புடைப் பெண்டிரும் மாதவரும் நல்லோரும் கண்ணகி கற்பின் சிறப்பைப் பாராட்டினர். கண்ணகி யென்ற பத்தினிக் கடவுளின் கோபத்தை ஆற்ற வேண்டும் என்ற கருத்தோடு மதுரை நகர்க் காவற்றெய்வம் ஆகிய மதுராபதி என்ற அணங்கு, அவளிடம் வந்தாள்.

அவள் சடை தாழ்ந்து பிறை யணிந்த தலையினள்; குவளை மலர்போலும் கண்ணும் வெள்ளொளி தங்கும் முகமும் உடையாள்; நிலவொளி ததும்பும் முத்துப் போன்ற நகையினள்; இடப்பால் நீல நிறமும் வலப்பால் பொன்னிறமும் பொருந்தியமேனியினள்; இடக் கையில் பொற்றாமரை மலரும் வலக்கையில் சுடர் மிக்க கொடு வாளும் பிடித்தவள்; வலக்காலில் வீரக்கழல் கட்டி இடக் காலில் சிலம்பு அரற்றும் செவ்வியினள்; கொற்கை வேந்தன் குமரித் துறைவன் பொற்கோட்டு வரம்பன் பொதியப்பொருப்பன் ஆகிய பாண்டியன் நெடுஞ்செழி யனது குலமுதற் கிழத்தியாகலின், மிகவும் மனம்வருந்தி யிருந்தவள். அத்தகைய மதுராபதி திருமாபத்தினி யாகிய கண்ணகியின் முன்னே வாராமற் பின்னே நின்று கொண்டு, "பெண்ணே, யான் சொல்வது கேள்," என, அதுகேட்ட கண்ணகி வலப்புறமாகத் தலையைத் திருப் பிச் சாய்த்து, "என்பின் வரும் நீ யார்? எனது துன்பத் தின் அளவை அறிவாயோ?" என்று கேட்டாள்.

---

* சிலப்பதிகாரம்—வஞ்சின மாலை

மதுராபதி, "அணியிழாய், யான் நின் துயரமும் அதன் காரணமும் அறிவேன் ; இக்கூடலுக்குரிய மதுராபதி என்பேன்; உண்மையே கூறுவேன்: நின் கணவன் இறந்ததன் பொருட்டு யானும் வருந்துவேனாயினும், பெருந்தகைப்பெண்ணே, யான் சொல்வதொன்று கேட்பாயாக: என் மனம் மிகவும் வருந்துகின்றது. எம் அரசற்கு ஊழ்வினைப்பயன் அனுபவிக்க நேர்ந்த காலத்தில் உன் கணவனுக்குத் தீவினைச் சூழ்ச்சி உண்டாயிற்று. இந்நாள் காறும் எமது தலைவனாகிய பாண்டியன் வேத முழக்கம் கேட்டதுண்டேயன்றி, ஆராய்ச்சி மணியோசை கேட்டறியான். இந்நாட்டுக் குடிகள் இம்மன்னனை அடிதொழுது வாழ்வுபெருத பிறமன்னரைத் தூற்றுவதுண்டேயன்றி இவனது செங்கோன்மையைப் பற்றிப் பழிதூற்றியதில்லை. நன்னுதல் மடந்தை,நான்சொல்வதை இன்னும் கேட்டி: பெண்டிரது பேதைமை விளங்கும் நோக்கினால், மதமுகம் திறப்புண்டு இடம் கடந்து செல்லும் நெஞ்சத்தையுடைய இளமையெனும் யானை, கல்வியென்ற பாகன் கையில் அகப்படாது அச்சமற்று ஓடுமாயினும், ஒழுக்கத்தொடு சிறந்த இப்பாண்டிய குலத்துப் பிறந்தோர்க்கு இழுக்கம் விளையாது. இதுவும் கேட்பாய்: மிகவும் வறுமை வாழ்வில் வாழ்ந்து வந்த கீரந்தை யென்ற பார்ப்பான் மனைவியின் மனைவாயிற் கதவை, நள்ளிரவில் வேற்றுக் குரல் ஒன்று கேட்பதாய் எண்ணிப் பாண்டியன் குலசேகரன் புடைத்தான். அவ்வோசையைக் கேட்ட மனையகத்திருந்த கணவனும் மனைவியும் வெவ்வேறுவகை மனத்தோற்றம் பெற்றனர். அப்பொழுது அப்பெண் மணி தன் தலை

வனை நோக்கி, “ அரச வேலி அல்லால் வேறு குற்றமற்ற காவல் ஒன்றும் இல்லை,' என்று கூறி, என்னை இங்கே அரசன் காப்பான் என்று தனித்து விட்டு, காசி யாத்திரை சென்றீர். அவ்வேலியின் காவலால் இந்நாள் வரை மனக் கவலையற்று வாழ்ந்து வந்தேன். இன்று அவ்வேலி காவாதோ?'' என்று கூறினள். அச்சொல்லைக்கேட்டு மனைக்கு வெளியில் நின்ற பாண்டியன்செவி சுடப்பெற்று, மனம் வருந்தி, அந்நாள்வரை அப்பெண் மணியின் கற்புக்குக் கேடு வராவண்ணம் தானே பாதுகாத்திருந்தும், அன்று தான் ஆராயாமற் செய்த செயலால் கீரந்தை தன் மனைவியின் கற்பு நிலையில் ஐயுறுதற்கிடமுண்டாயிற்றே யென்று மிகவும் கவலை கொண்டு, மறு நாள் பலருமறியத் தன் கையைக் குறைத்துப் பொற் கை பெற்றுப் பொற்கைப் பாண்டியன் ஆன வரலாறும் நீ அறிவாய். இந்நெடுஞ்செழியனே திருத்தங்கால் என்ற ஊரில் வாழ்ந்த வார்த்திகன் என்ற வேதியன் பொருட்டுச் செய்த அறச் சிறப்பும் கேட்டறிந்திருப்பாய். இத்தகைச் சிறப்புள்ள பாண்டியர் குலச் செம்மல் கோ முறை பிழைத்த காரணம் கேட்பாயாக:‘ஆடி மாதத்திலே கிருஷ்ணபக்ஷத்தில் அஷ்டமி திதியில் வெள்ளிக்கிழமையன்று கார்த்திகை பரணி என்ற இரண்டு நக்ஷத்திரங்களும் இருக்கும் காலத்திலே தீப்படுதலால் இம்மாபெரு நகராம் மதுரை கேடுறும்,' என்றதோர் உரை உளது. மேலும், நின் கணவன் கொலையுண்ட காரணம் கூறுவேன்; கேள்: முன்பு கலிங்க நாட்டில் உள்ள சிங்கபுரத்தரசனாகிய வசு வென்பவனும் கபில புரத்தரசனாகிய குமரன் என்பவ

னும் தம்முட் பகைகொண்டு ஒருவரை யொருவர் வெல்லக் கருதி யிருந்தனர். அப்பொழுது சிங்க புரத்துக் கடை வீதியிற் சென்று இயல்பாகப் பண்டம் விற்றுக் கொண்டிருந்த சங்கமன் என்ற வணிகனை அந்நகரத்து அரச சேவகனாகிய பரதனென்பான் இவன் பகையரசனாகிய குமரனது ஒற்றனென்று கூறித் தன்னரசனுக் கறிவித்துக் காட்டிக் கொலை செய்துவிட்டான். அச் சங்கமன் மனைவியாகிய நீலி என்பவள் மிக்க துயரமுற்றுப் பதினான்கு நாள் பலவிடத்தும் அலைந்து, பின்பு ஒரு மலையின்மேல் ஏறிக் கணவனைச் சேரக்கருதித் தன் உயிரை விடும் நிலையில், 'எமக்குத் துன்பம் செய்தோர் மறு பிறப்பில் இத்துன்பத்தையே அடைவார்களாக,' என்று சாபமிட்டிறந்தாள். அப்பரதன் நின் நாயகனாகிய கோவலனாய்ப் பிறந்தான். ஆதலின், நீவிரும் இந் நகரில் இவ்விதமான பெருந்துயர் அடைந்தீர்.

"உம்மை வினைவந் துருத்த காலைச்
செம்மையி லோர்க்குச் செய்தவ முதவாது."

ஆகையால், இந்நாட்டினீங்கி வேறொரு நாட்டில் இன்னும் பதினான்கு தினங்களில் நினது நாயகனை வானவ உருவிற் காண்பாய்."

இவ்வாறு மதுராபதி என்ற தெய்வம் கண்ணகிக்குச். செய்தியெல்லாம் விளக்கியுரைத்து, அவளது சினத்தை அடக்கி யமையச் செய்து, மதுரை நகர் முழுதும் பற்றி யெரிந்த தீ அடங்கிக் குளிருமாறு செய்தகொண்ட பிறகு, கண்ணகி அங்கிருந்து புறப்படலாயினள். அவள் அப்பொழுது, "என் உள்ளத்துக் கோயில் கொண்ட நாயகரைக் கண்ட பின்பு அல்

லாமல், அதன் முன்பு யான் இருத்தலும் நிற்றலும் செய்யேன்," என்று கூறி, துர்க்கை கோயில் வாயிலிலே தன் கைக் கடகத்தை உடைத்தாள்.

'கீழ்த்திசை வாயிலாற் கணவனோடு புகுந்தேன்; மேற்றிசை வாயிலால் வெறுமையோடுதிரும்புகின்றேன்,' என்று கூறி, இரவும் பகலும் மயங்கி வருந்திப் புறப் பட்டாள். துயரமே உருவெடுத்ததுபோலப் பதினன்கு நாட்கள் அலேந்து இறுதியில் திருச்செங்குன்று என் னும் மலைமீது ஏறித் தேவர்கள் வந்து வாழ்த்தத் தேவ வுருவொடு வந்த கோவலனொடு விமானம் ஏறி உயர்ந்த வுலகம் புகுந்தாள்.

" தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுவாளைத்
தெய்வந் தொழுந்தகைமை திண்ணமாற்—றெய்
மண்ணக மாதர்க் கணியாய கண்ணகி [வமாய்
விண்ணகமா தர்க்கு விருந்து." *

அன்று தொட்டுப் பாண்டியன் நாடு மழை வளம் இழந்து, வறுமை யெய்தி, வெப்பு நோயும் குருவும் தொடரக் கொற்கையிலிருந்த வெற்றிவேற் செழியன் என்ற இளஞ்செழியன் கண்ணகி தேவிக்கு விழவொடு சாந்திசெய்ய நாடு மலிய மழை பெய்து நோயும் துன்ப மும் நீங்கினது.

" முடிகெழு வேந்தர் மூவ ருள்ளும்
படைவிளங்கு தடக்கைப் பாண்டியர் குலத்தோர்
அறனும் மறனும் ஆற்றலும் அவர்தம்
பழவிறல் மூதூர்ப் பண்புமேம் படுதலும்

---

* சிலப்பதிகாரம் - கட்டுரை காதை.

10

விழவுமலி சிறப்பும் விண்ணவர் வரவும்
ஒடியா வின்பத் தவருறை நாட்டுக்
குடியுங் கூழின் பெருக்கமும் அவர்தம்
வையைப் பேரியாறு வளஞ்சுரந் தூட்டலும்
பொய்யா வானம் புதுப்பெயல் பொழிதலும்,''

பிறவும் விளக்கிக் கூறும் இளங்கோவடிகள், பாண்டியன் நெடுஞ்செழியன் செங்கோன்மை பிழைத்த செய்தியைத் தெரிவிக்கும்போது, அடையும் வருத்தத்திற்கு எல்லை யுண்டோ? அத்தகைய தவப் பெரியார், சேரர் குடியிற் பிறந்த இளங்கோவேயாயினும், பாண்டியன் நெடுஞ்செழியனது உண்மைப் புகழை உலக மறிய விளக்கிக்கூறியுளர். இறுதியில் அவர் அருளிய வாக்கு இங்கு எடுத்துக் காட்டப்படுவதோடு, இப்பாண்டியன் வரலாறு நிறைவேறும்:

“ வடவாரியர் படைகடந்து
தென்றமிழ்நா டொருங்குகாணப்
புரைதீர் கற்பிற் றேவி தன்னுடன்
அரசு கட்டிலிற் றுஞ்சிய பாண்டியன்
நெடுஞ்செழி யன்றன் நெடும்புக ழளந்து
வழுத்தலும் அவன்பழி மறையுமா றுய்ந்து
நிலத்தவர் உளங்கொள நிகழ்த்தலும் எளிதோ?''

முற்றிற்று.

---

The B. N. Press, Mount Road, Madras.